இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பத்தாவது பாராளுமன்றத்தின்

முதலாம் கூட்டத்தொடர்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 222

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின்

முதலாவது அறிக்கை

(2023.07.08 தொடக்கம் 2023.10.31 வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்
கௌரவ. அரவிந்த செனரத் அவர்களால்
2025 ஜூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

2025 ஜூலை மாதம் 08 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உள்ளடக்கம்

(அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில்)

1. கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)
2. கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்சன த சில்வா
3. கௌரவ பிரசன்ன ரணவீர
4. கௌரவ கே. காதர் மஸ்தான்
5. கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்
6. கௌரவ (திருமதி) டயனா கமகே
7. கௌரவ சாமர சம்பத் தசநாயக்க
8. கௌரவ எஸ்.பீ. திசாநாயக்க
9. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
10. கௌரவ வஜிர அபேவர்தன
11. கௌரவ ஏ.எல்.எம் அதாஉல்லா
12. கௌரவ கபீர் ஹஷீம்
13. கௌரவ மனோ கணேசன்
14. கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர
15. கௌரவ வீமலவீர திசாநாயக்க
16. கௌரவ நிரோஷன் பெரேரா
17. கௌரவ ஜே.சீ அலவத்துவல
18. கௌரவ வடிவேல் சுரேஷ்
19. கௌரவ அஸோக அபேசிங்ஹ
20. கௌரவ புத்திக பத்திறண
21. கௌரவ ஜயந்த கெட்டகொட
22. கௌரவ சிவஞானம் சிறீதரன் (2023.04.25 ஆம் திகதி தொடக்கம்)
    கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் (2023.04.24 ஆம் திகதி வரை)
23. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
24. கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட
25. கௌரவ இசுரு தொடங்கொட
26. கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி (2023.03.07 ஆம் திகதி தொடக்கம்)
27. கௌரவ எம்.டபிளியூ.டீ சஹன் பிரதீப் விதான
28. கௌரவ டீ. வீரசிங்க
29. கௌரவ வீரசுமன வீரசிங்ஹ (2023.04.25 ஆம் திகதி தொடக்கம்)
    கௌரவ ஹேஷா விதானகே (2023.04.24 ஆம் திகதி வரை)
30. கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க (2023.03.07 ஆம் திகதி தொடக்கம்)
31. கௌரவ (கலாநிதி) (செல்வி) ஹரினி அமரசூரிய

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாம் கூட்டத்தொடர்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உள்ளடக்கம்

1. கௌரவ அரவிந்த செனரத் (தவிசாளர்)
2. கௌரவ எண்டன் ஜயகொடி
3. கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர
4. கௌரவ சுகத் திலகரத்ன
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்(2025.03.21 இருந்து)
6. கௌரவ நலின் ஹேவகே
7. கௌரவ கபீர் ஹஷீம் (2025.03.21 இருந்து)
8. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் (2025.03.21 இருந்து)
9. கௌரவ ரோஹித அபேகுணவர்தன (2025.03.21 இருந்து)
10. கௌரவ ஜே.சீ. அலவத்துவல (2025.03.21 இருந்து)
11. கௌரவ சாமர சம்பத் தசனாயக (2025.03.21 இருந்து)
12. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி (2025.03.21 இருந்து)
13. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன (2025.03.21 இருந்து)
14. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன் (2025.03.21 இருந்து)
15. கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத
16. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி
17. கௌரவ கே.இளங்குமரன்
18. கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா
19. கௌரவ அஜந்த கம்மெத்தெகே (2025.03.21 இருந்து)
20. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி
21. கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ (2025.03.21 இருந்து)
22. கௌரவ ரீ.கே. ஜயசுந்தர (2025.03.21 இருந்து)
23. கௌரவ எம். ஏ. எம். தாஹிர் (2025.03.21 இருந்து)
24. கௌரவ சுசந்த குமார நவரத்ன
25. கௌரவ லால் பிரேமநாத்
26. கௌரவ சானக மாதுகொட (2025.03.21 இருந்து)
27. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க
28. கௌரவ சந்தன சூரியஆரச்சி
29. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன
30. கௌரவ சுனில் ரத்னசிரி (2025.05.08 இருந்து)

<u>குழு அலுவலகத்தின் தற்போதைய பணியாட்டொகுதி</u>

- திருமதி காந்தி பீரிஸ் - குழுவின் செயலாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
- திரு.பி.கே.டி.எஸ். டபிள்யு. விஜேகுணவர்தன - பிரதான உத்தியோகத்தர்
- திருமதி ஆர்.ஏ.டீ.என். கியோவனி - பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு ஜே.ரீ.எல்.பீ சமீர - உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி ஜீ.டீ.ஜே. எச். அயேஸ்மந்தி - பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி ஜீ.எம்.கல்லேகொட - பாராளுமன்ற உத்தியோகத்தர்

<u>குழு அறிக்கைகள்</u>

www.parliament.lk எனும் இணையதளத்திலிருந்து கீழ் காணும் வழித்தடத்தின் ஊடாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

Select language → Business of Parliament → Committees
→ Committee Reports → Select Legislature (10th Parliament)
→ Select Session (1st Session) → Select Committee Type
→ (Committees for Special Purposes) → Select Committee
→ (Committee on Public Accounts) → Search

உள்ளடக்கம்

பக்க இல

a. தவிசாளரின் குறிப்பு.. 7

b. சுருக்க அறிக்கை.. 9

c. விசேட அவதானிப்புகள்.. 14

d. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திலும் அடையாளங் காணப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள், விதப்புரைகள்.. 15

e. சூசிகை.. 280

தவிசாளரின் குறிப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் போது 2023.07.08 முதல் 2023.10.31 வரை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை உள்ளடக்கிய குழுவின் முதலாவது அறிக்கையை இத்தால் சமர்ப்பிக்கின்றேன். கணக்காய்வு என அறியப்படும் பிந்தியச் செயற்பாட்டில் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதோடு வினைத்திறனின்மையை முனைப்புடன் தடுப்பது மிகவும் பயன்மிக்கதாக இருக்குமென்பதால் எதிர்காலத்தில் கடந்த கால குறைபாடுகளைத் தடுப்பதன் முகமாக நிறுவனங்களுக்கு வழிகாட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கூடுதல் கவனம் செலுத்துமென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதன் பிரகாரம், இன்றளவில் அரச நிறுவனங்களை அழைத்து விசாரணை செய்வதற்கு நேர் ஒத்ததாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இணையவழி முகாமைத்துவ கட்டமைப்பின் ஊடாக சகல அரச நிறுவனங்களையும் வருடாந்தம் மதிப்பீடு செய்யும் செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றதென்பதை குறிப்பிட விரும்புகின்றேன். இதன் மூலம் குழுவின் விசாரணைகளை சீரான இற்றைப்படுத்தல்களுடன் மேற்கொள்ள முடியுமென்பதோடு நிறுவனங்களில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை அடையாளங்கண்டு சமகால கொள்கை ரீதியான தீர்மானங்கள் மூலம் அவற்றை சீராக்குவதன் பொருட்டு வழிகாட்டுவதற்கு வாய்ப்பேற்படும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

நிறுவனங்கள் மீதான விசாரணைகளின் போது அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளை சரி செய்யவும் நிலவுகின்ற சாதகமான பண்புகள் மற்றும் போக்குகளை மேம்படுத்தவும் குழுவின் அமர்வுகளை வழிநடத்துகையில் அரச உத்தியோகத்தர்களின் கண்ணியத்தை காத்திடவும் வேண்டுமென்பது குழுவில் பணியாற்றியதன் மூலம் நான் பெற்ற நீண்ட அனுபவங்கள் எனக்கு உணர்த்துகின்றது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றி என்பது அதில் பங்கெடுக்கும் சகல பங்குதாரர் தரப்புகளினதும் ஒத்துழைப்பின் பெறுபேறாகும். ஆகவே, இக்குழுவின் சகல அங்கத்துவ உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி அரச நிதிப் பொறிமுறையை உரிய முறையில் செயற்படச் செய்தல் தொடர்பான பின்னூட்டல் செயற்பாட்டுக்கு எனக்களிக்கும் ஒத்துழைப்பினை நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு அளித்து வரும் ஒத்துழைப்புக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் அவருடைய பணியாட்டொகுதிக்கும்,

திறைசேரியின் உத்தியோகத்தர்களுக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அலுவலகத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் குழு தமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றது என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரவிந்த செனரத்
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

சுருக்க அறிக்கை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் விசாரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் (பி.க.அ.)/கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் (க.அ.) அளித்த விளக்கங்கள், குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2023.07.08 ஆம் திகதி தொடக்கம் 2023.10.31 ஆம் திகதி வரை விசாரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும்/ஏற்புடைய கணக்காய்வு அறிக்கைகளின் கால எல்லைகள்;

	நிறுவனம்	பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையின் கால எல்லை/ முன்னைய குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துவதில் வெளிப்பட்டுள்ள முன்னேற்றம்/ தற்போதைய முன்னேற்றம்	விசாரிக்கப்பட்ட திகதி
01	சிவில் பாதுகாப்புத் திணைக்களம்	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி
02	சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்	மகளிர்,சிறுவர்அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நலனோம்புகை பயனாளிகள் குடும்பங்களை வலுவூட்டும் குறுகிய கால மற்றும் மத்திய கால வேலைத்திட்டம் மற்றும் 2023.05.25 மற்றும் 2023.05.26 ஆம் திகதிகளில் நடைபெற்ற குழு அமர்வுகளின் போது வழங்கப்பட்ட விதப்புரைகளை செயற்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்.	2023 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி

	நிறுவனம்	பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையின் கால எல்லை/ முன்னைய குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துவதில் வெளிப்பட்டுள்ள முன்னேற்றம்/ தற்போதைய முன்னேற்றம்	விசாரிக்கப்பட்ட திகதி
03	வளிமண்டலவியல் திணைக்களம்	2020 ,2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி
04	தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி
05	சப்ரகமுவ மாகாண சபை	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி
06	விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி
07	சுகாதார அமைச்சு	2023 யூன் மாதம் 23 ஆம் திகதியன்று அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளின் முன்னேற்றமும் சுகாதார அமைச்சின் தற்போதைய பிரச்சினைகளை விசாரித்தலும்	2023 செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி

	நிறுவனம்	பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையின் கால எல்லை/ முன்னைய குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துவதில் வெளிப்பட்டுள்ள முன்னேற்றம்/ தற்போதைய முன்னேற்றம்	விசாரிக்கப்பட்ட திகதி
08	கிழக்கு மாகாண சபை	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி
09	நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்	2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி நடைபெற்ற நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் மீதான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அமர்வில் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் தற்போதைய நிலைமை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகை.	2023 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி
10	மது வரித் திணைக்களம்	2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி
11	கம்பனிப் பதிவாளர் திணைக்களம்	2019, 2020, 2021 ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி

	நிறுவனம்	பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையின் கால எல்லை/ முன்னைய குழுவின் விதப்புரைகளை செயற்படுத்துவதில் வெளிப்பட்டுள்ள முன்னேற்றம்/ தற்போதைய முன்னேற்றம்	விசாரிக்கப்பட்ட திகதி
12	விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்	2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்	2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி

குழுவினால் நடாத்தப்பட்ட விசேட விசாரணைகள்

	விசேட விசாரணைகள்	விசாரிக்கப்பட்ட திகதி
01	அரச நிறுவனங்களில் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமையும் அது தொடர்பாக காணப்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்தலும்	2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி
02	அரச நிறுவனங்களில் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமையும் தற்போதைய நிலை மற்றும் அது சார்ந்த சிக்கல்களை ஆய்வு செய்தலும்	2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி
03	இலங்கையின் தொல்பொருளியல் பாரம்பரியங்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு	2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி

04	பயனுள்ள தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளின் மூலம் அரசாங்க வருமானத்தை திரட்டுவதற்கும், அதனை அதிகரிப்பதற்கும் பங்குதாரர்கள் மற்றும் பங்குதாரர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கான அடிப்படை தொழில்நுட்பக் குழுவின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்குமான கூட்டம்	2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி

விசேட அவதானிப்புகள்

விசாரணை காலப்பகுதியில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக கீழ் காணும் பொது பிரச்சனைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

- உள்ளக கணக்காய்வு அலகுகள் காணப்படாமை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் காணப்படாமை.
- பணியாட்டொகுதி வெற்றிடங்கள்.
- முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரைகள் தொடர்பாக உரிய காலப்பகுதியில் பதில் அளிக்காமை.
- அரசாங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய வருமானம் உரிய திகதியில் அறவிடப்படுவதில் உள்ள தாமதம்.
- அரச நிதியின் தவறான பயன்பாடு.
- நிறுவனங்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்பு இல்லாமை.

விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திலும் அடையாளங் காணப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள், விதப்புரைகள்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ***(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்)*** **விசாரணை செய்யப்பட்ட திகதி – 2023 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ பாதுகாப்பு அமைச்சு ❖ சிவில் பாதுகாப்புத் திணைக்களம்		
01	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான சட்டக் கட்டமைப்பை தற்போதைய தேவைகளுக்கு ஏற்பவும் அரசாங்க கொள்கைக்கு இணங்கவும் உருவாக்குதல்.	இன்றளவில் திணைக்களத்துக்குப் பொருத்தமான சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த திணைக்களத்தை மறுசீரமைப்பதற்கு கலந்துரையாடலொன்றும் இடம்பெற்று வருவதால் மேற்படி நடவடிக்கைகள் தற்காலிகமாக நின்று போயுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ)/ கணக்கீட்டு உத்தியோகத்தர் (க.அ.) குழுவிற்குத் தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** கௌரவ சனாதிபதி மற்றும் பாதுகாப்புச் சபை உள்ளிட்ட ஏற்புடைய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தரப்புகளுடன் கலந்துரையாடி, அரச கொள்கைகளுக்கு அமைவாக, திணைக்களம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கொள்கை தீர்மானத்தின் பேரில், அதற்கு இணங்க தேவையான திருத்தங்களை மேற்கொண்டு சட்ட வரம்பைத் தயாரித்தல் தொடர்பான நாள் விபரங்கள் அடங்கிய அறிக்கையினை 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதியளவில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு (க.அ.) குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. **பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் 2023.12.03 மற்றும் 2023.05.20 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
02	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் படையினர் விஹாரைகள் மற்றும் தொல்லியல் இடங்கள் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள விதம் தொடர்பாக எண்ணியல் ரீதியான தகவல்களை	இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. பாதுகாப்புச் சபை போன்ற உயர் மட்ட கலந்துரையாடலை தொடர்ந்து இந்த சிப்பாய்கள் வேறு கடமைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டுள்ள சிப்பாய்கள் அப்பகுதிகளின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	வினவிய குழு, மேற்படி நிலைப்படுத்தல் செயற்பாட்டுடன் தொடர்புடைய மையப்படுத்தப்பட்ட மேற்பார்வை செயற்பாட்டின் குறைபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தியது.	தரைப்படை/கடற்படை சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரிகளின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர்களை சேவையில் ஈடுபடுத்தல் /மேற்பார்வை மற்றும் இடமாற்றம் தொடர்பாக மேற்படி கட்டளையிடும் அதிகாரிகள் பொறுப்பேற்பார்கள் எனவும் தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** நிலவுகின்ற செயன்முறையைக் பார்க்கிலும் முறையான மையப்படுத்தப்பட்ட மேற்பார்வை / நிருவாகச் செயன்முறையொன்றைத் தயாரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு (க.அ.) பரிந்துரைக்கப்பட்டது.
03	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றி 2021 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடங்களிலும் ஓய்வு பெற்ற/உயிரிழந்த 442 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் தொடர்ந்தும் சேவையிலுள்ளவர்களாக கருதி மொத்தமாக 10.08 மில்லியன் ரூபாய் ஊதியமாக	2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிருவாக ரீதியான குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்புடைய விபரங்கள் நிறுவனத்தின் ஊதிய பிரிவுக்கு உரியவாறு அறிக்கையிடப்படவில்லை எனவும் அதற்குரிய தொகை இன்றளவில் தவணை முறையில் மீள அறவிடப்பட்டு வருவதாகவும், பிரதான கணக்கீட்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	செலுத்தப்பட்டுள்ளதோடு, அதில் 2.36 மில்லியன் ரூபாய் மாத்திரமே மீள அறவிடப்பட்டுள்ளதாகவும், பிரதான அலுவலகத்தின் ஊதிய பிரிவுக்கு துரிதமாக சரியான விபரங்கள் அறிக்கையிடப்படாமை மற்றும் மையப்படுத்தப்பட்ட மேற்பார்வை நடவடிக்கையின் குறைபாடு இதற்கு ஏதுவாக அமைந்துள்ளதாகவும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.	உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தர் (க.அ.) தெரிவித்தார். அவ்வாறான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நிறுவனத்தின் ஊதியப் பிரிவினால் ஏற்புடைய வங்கிகளுக்கு ஊதியங்கள் அனுப்பப்படுகின்ற போதிலும், ஏற்புடைய படையணிகளுக்குப் பொறுப்பான கட்டளையிடும் உத்தியோகத்தர்களுக்கு படையணி அங்கத்தவர்களின் ஊதியங்களை நிறுத்துவதற்கு இன்றளவில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ../ க.அ. தெரிவித்தார்
04	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருமானம் குறித்து குழுவினால் வினவப்பட்டது. அதன் போது வருமானம் ஈட்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது.	2021 ஆம் ஆண்டுக்கு நிகராக 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. வருமானம் ஈட்டும் கருத்திட்டங்களை விரிவுபடுத்தியுள்ளதாகவும் குழுவில் குறிப்பிட்டார். **<u>விதப்புரைகள்</u>** திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளைப் பேணுவதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்துமாறு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ.. இற்கு குழுவினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
05	மன்னார் கொண்டச்சி பகுதியில் சுமார் 1200 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்படுகின்ற மரமுந்திரிகைச் செய்கையின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் பெற்ற வருமானத்தையும் செலவையும் ஒப்பிடும் போது 10.6 மில்லியன் ரூபாய் இழப்பு பதிவாகியுள்ளமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.	<u>விதப்புரைகள்</u> கூடுதல் வருமானத்தை ஈட்டும் வகையில் மேலான நியாயமானதொரு செயன்முறையை உருவாக்குமாறு குழு பொது பரிந்துரையொன்றை வழங்கியது. **பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் 2023.12.30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
06	சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மிளகாய் செய்கைத் திட்டம் தொடர்பாகவும் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது.	இதன் போது கருத்துத் தெரிவித்த திணைக்கள உத்தியோகத்தர்கள் நாடெங்கிலும் அடையாளங் காணப்பட்ட 11 இடங்களில் செயற்படுத்தப்படும் இத் திட்டத்துக்கு பொறித்தொகுதிகளுக்கான அடிப்படை மூலதனம் உள்ளிட்டதாக இன்றளவில் சுமார் 17 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு 16.75 ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ளதோடு அதில் 8 ஏக்கர்களில் வருமானமாக சுமார் 11.7 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதுடன் இத் திட்டம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தொடர்ந்தும் வருமானமீட்டும் திட்டமாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.
07	நிறுவனத்தின் அன்றாடத் தேவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் அளவுகளை சரியாகக் கண்டறியாமல் கொள்வனவு செய்ததால், தேவையற்ற வகையில் கையிருப்பு குவிந்திருந்ததாகவும், சில இருப்புக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதாகவும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.	<u>**விதப்புரைகள்**</u> எதிர்காலத்தில் இவ்வாறான வீண்விரயங்களைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு அறிவுறுத்தியுள்ளது.
08	சேவா வனிதா சங்கத்தின் மூலம் திணைக்களத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகளை அச்சிடுவதற்கு கந்தளாய் படையணியின் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு அதற்கான 45 மில்லியன் ரூபாய் ஊதியச் செலவு மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும்	இது முப்படை அங்கதத்தவர் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக இயங்குமொரு நிறுவனம் எனவும் அதற்கு பிரத்தியேக நிதியமொன்று உள்ளதெனவும் வெளியிலிருந்து கொப்பிகளை கொள்வனவு செய்வதை விடவும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூலமாக அச்சிடுவது இலாபகரமானதென்பதால் அவ்வாறு அச்சிடப்பட்டதாக பாதுகாப்பு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	குழுவில் வெளிக்கொணரப்பட்டது.	அமைச்சின் பி.கஉ/க.அ. குழுவில் தெரிவித்தார். மேலும், இப்பணியை படையணியில் தொண்டர் அடிப்படையில் முன்வந்த அங்கத்தவர்களை கொண்டு தமது திணைக்களத்துக்குச் சொந்தமான திருகோணமலையில் அமைந்துள்ள அச்சகத்தில் மேற்கொண்டதாகவும் அமைச்சின் பி.கஉ/க.அ. குழுவில் தெரிவித்தார்.
09	காட்டு யானைகளை விரட்டுவதற்காக 845 பேரை ஈடுபடுத்தி 627 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ள போதிலும் யானை மற்றும் மனிதர்களின் மரண விகிதம் அதிகரித்துள்ளதாக குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.	<u>**விதப்புரைகள்**</u> இதன் போது யானை – மனிதன் மோதலை பொது விடயமாக கருதி திணைக்களப் பணிகளுக்குப் புறம்பாக நடைமுறைச்சாத்தியமான தீர்வை எட்ட வேண்டுமென குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.
10	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பதவி உயர்வு நடவடிக்கைமுறை தொடர்பாக குழு வினவியது.	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பாதுகாப்புத் தரப்புக்கு இணையான பதவி உயர்வு நடவடிக்கைமுறையொன்று செயற்படுத்தப்படுவதாகவும் 2015 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அளவுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதாகவும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். திணைக்களத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையொன்று தயாரிக்கப்படவில்லை எனவும், அத்தேவையை முறையாக அடையாளங் கண்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையொன்றை தயாரித்து பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுமாறு 2021 ஆம் ஆண்டிலும் நிதி அமைச்சு அறுவுறுத்தியிருந்ததாகவும் இங்கு கருத்துத் தெரிவித்த நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். சேவைகளின் தேவையின் பேரில் மேற்படி ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையைத் தயாரிப்பதற்கு ஏற்புடைய கோரிக்கை 2021 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு விடுக்கப்பட்டதாகவும், ஊதிய வகுதிகளுடன் தொடர்புடைய விடயங்கள் காரணமாக அதனை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. தெரிவித்தார். சிவில் பாதுகாப்பு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		படையணியை தற்பொழுது சிதைவடையும் படையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆகவே, சகல ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. மேலும் தெரிவித்தார்.
11	மொனராகலை பிரதேசத்தில் சோளச் செய்கைத் திட்டத்தின் அறுவடைகளை விற்கும் போது கொள்வனவுச் செயற்பாட்டுக்குப் புறம்பாக செயற்பட்டுள்ளமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது.	அதன் போது கருத்துத் தெரிவித்த திணைக்கள உத்தியோகத்தர்கள் ஏற்புடைய விற்பனையானது, கேள்வி மனு செயற்பாட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கூடுதல் கேள்வியை விடவும் அதிக விலைக்கே மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டனர். ஆனால், இச்செயற்பாட்டில் கொள்வனவுச் செயற்பாட்டுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்புடைய நிறுவனமொன்றுக்கு விற்பனைத் தொகையில் ஒரு பகுதி கடன் வசதியாக அளிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் போது கருத்துத் தெரிவித்த உத்தியோகத்தர்கள் அதற்குத் தேவையான மேலதிக பற்று குறித்த நிறுவனத்திலிருந்து பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		விதப்புரைகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பின்பற்றப்பட வேண்டிய விலைமனுக் கோரல் செயற்பாடு தொடர்பான அறிவுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்டு திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அதன் பிரதியொன்று 2023 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதியளவில் குழுவிற்கு அனுப்புமாறு பாதுகாப்பு அமைச்சின் பி.க உ/ க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது.
12	திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு பெறப்படாத கட்டடங்களுக்கு வாடகை செலுத்தப்படுகின்றமை தொடர்பான விடயத்துக்கு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பதில் அளிக்க முடியாமல் போனமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது.	இந்த விடயத்துடன் தொடர்புடைய தகவல்கள் காணாமல் போயுள்ளதாக இன்றைய தினம் குழு அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. குழுவில் தெரிவித்தார். **விதப்புரைகள்** 7 ஆண்டுகள் கடக்கும் வரைக்கும் இந்த விடயம் தொடர்பாக பதில் அனுப்ப தவறியமை தொடர்பாக அதிருப்தி வெளியிட்ட குழுவானது, இன்றைய தினம் வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பாக உறுதியானதொரு காலப்பகுதிக்குள் பதில் அளிப்பதற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சின் பி.கஉ/ க.அ. இற்கு பரிந்துரைத்தது.
13	குழு அமர்வில் கலந்துரையாடப்படாத கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்தல்.	**<u>விதப்புரைகள்</u>** திணைக்களம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட சுருக்கக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட ஆனாலும், கூட்டத்தில் கலந்துரையாடப்படாத ஒவ்வொரு விடயம் தொடர்பான தனித் தனி விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2023 ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு அனுப்புமாறு பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ.. இற்கு குழு பரிந்துரைத்தது. **பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் 2023.12.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
அரச நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் அது சார்ந்ததாக நிலவும் பிரச்சினைகளை ஆய்வு செய்தல். விசாரிக்கப்பட்ட திகதி 2023 ஆகஸ்ட் மாதம் 09		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -		

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
❖ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ❖ கல்வி அமைச்சு ❖ கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம் ❖ அரச மதிப்பகத் திணைக்களம்		
1.	**கணக்கில் பதியப்பட்ட மற்றும் பதியப்படாத அரசாங்கத்துக்குச் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள்**	2022.12.31 ஆம் திகதியளவில் கணக்கில் பதியப்பட்ட அரசாங்கத்துக்குச் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி சுமார் ரூ.2,093,287,997,716 (இரண்டு டிரிலியனுக்கு மேல்) என்பதோடு கணக்கில் பதியப்பட வேண்டிய மேலும் ஏராளமான நிதி அல்லாத சொத்துக்கள் காணப்படுவதாக அடையாளங் கண்ட குழு அதன் பொருட்டு நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தியது. அரச நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களின் முகாமைத்துவத்துக்கு 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்துக்கு நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்றை பேண வேண்டிய பணி அளிக்கப்பட்டுள்ளதாக கம்ப்ரோலர் ஜெனரால் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இன்றளவில் வாகனங்கள் தொடர்பான தரவுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு நிறைவுச் செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டடங்கள் மற்றும் காணிகள் தொடர்பான தரவுக் கட்டமைப்பு முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை எனவும் கம்ப்ரோலர் ஜெனரால் தெரிவித்தார். மேலும், அரச நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்ற தகவல்கள் கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்துக்கு உரிய நேரத்தில் வழங்கப்படாத காரணத்தினால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதால் கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்துக்கு ஏற்புடைய சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் தகவல் வழங்குவதில் அரச நிறுவனங்களை மேலும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.
2.	**<u>நிதி அல்லாத சொத்து முகாமைத்துவம் தொடர்பாக அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறல்.</u>** அரச நிறுவனங்கள் தமது சொத்துக்கள் தொடர்பான தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்துக்கு (CIGAS	அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கணக்குப் பதிவு வைத்தல் நடவடிக்கைகளுக்காக சொத்துக்கள் தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்வதாகவும், கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகம் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்துடன் தரவுகளை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	தரவுக் கட்டமைப்பு ஊடாக) வழங்குவதாக குழுவில் வெளிக்கொணரப்பட்டது. மேற்படி தரவுக் கட்டமைப்புக்கு வழங்கப்படும் தகவல்களை கொம்ர்ரோலர் ஜெனரால் அலுவலகத்தின் தரவுக் கட்டமைப்புக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது.	பெற்றுக்கொள்வதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. ஆகவே, அரச கணக்குகள் திணைக்களம் பெற்றுக்கொள்ளும் தரவுகளை விடவும் கூடுதல் தரவுகள் தமது திணைக்களத்துக்கு அவசியமென கம்ப்ரோலர் ஜெனரால் தெரிவித்தார். ஆகவே, CIGAS ஊடாக பெறப்படும் தகவல் போதுமானதல்ல எனவும் அவர் தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** நிதி அல்லாத சொத்து முகாமைத்துவம் தொடர்பாக அரச நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்டுள்ள தரவுகளையும் அத்தகவல்களை வழங்கிய மற்றும் வழங்காத நிறுவனங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2023.08.23 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு வழங்குமாறு குழு கம்ப்ரோலர் ஜெனராலுக்கு பணிப்புரை விடுத்தது. **கம்ப்ரோலர் ஜெனராலின் 2023.08.24 ஆம் திகதிய CGO/ACC/COP-AC/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (வாகனங்கள், கட்டடங்கள் மற்றும் காணிகளுக்கு ஏற்புடைய)**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
3.	**<u>நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்வதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்</u>**	நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்கையில் நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ள காரணத்தினால் இச்செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு முதல் கட்டமாக அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினதும் ஒத்துழைப்புடன் பொதுவாக பயன்படுத்தக்கூடிய சூத்திரமொன்றை (Formula) தயாரிக்கக்கூடிய சாத்தியம் உண்டா என்பது (உதா: காணிகளுக்கு மாகாணங்களின் பிரகாரம் மதிப்பீடு) தொடர்பாக குழு கவனம் செலுத்தியது. மேலும், நாடெங்கிலுமுள்ள சகல அரச நிறுவனங்களினதும் சொத்துக்கள் தொடர்பான தரவுகளை திரட்டுவது இலகுவான பணியல்ல என்பதால் அதற்கு செயலணியொன்றை தாபித்தல் மற்றும் கணினி கட்டமைப்பொன்றைப் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது. இன்றளவில் இணையவழி கட்டமைப்பொன்றின் மூலம் தரவுகளைத் திரட்டும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		எதிர்பார்ப்பதாகவும் கம்ப்ரோலர் ஜெனரால் தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** அனைத்து அரச நிறுவனங்களுக்கும் உறுதியானதொரு மாதிரியுடன் கூடிய மென்பொருளை (Software) ஆற்றுப்படுத்தி நிதி அல்லாத, மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் மதிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள் தொடர்பாக தரவுக் கட்டமைப்பொன்றின் ஊடாக தகவல் திரட்டும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தும் நாள் விபரங்களுடன் கூடிய அறிக்கையினை 2023.08.31 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு கம்ப்ரோலர் ஜெனராலுக்கு குழு பரிந்துரைத்தது. அவ்வாறு தகவல்கள் வழங்கப்பட்ட சொத்துக்களுக்கு மேலதிகமாக அந்த நிறுவனத்திடம் வேறு சொத்துக்கள் இல்லை என நிறுவன தலைமை அதிகாரியிடமிருந்து சான்றிதழைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு மேலும் பரிந்துரைத்தது. **கம்ப்ரோலர் ஜெனராலின் 2023.08.29 ஆம் திகதிய CGO/ACC/COP-AC/01**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு) **அதன் பிரகாரம் கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்தினால் இணையவழி நிதி அல்லாத சொத்து முகாமைத்துவக் கட்டமைப்பு (NFAMS)** **அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இக்கட்டமைப்பு 2023.09.31ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக வாகனங்களுக்கு ஏற்புடைய மொடியூல் செயற்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
4.	**<u>கல்வி அமைச்சின் செயலாளரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்டுள்ள 157 வாகனங்கள்</u>** மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்திலுள்ள தரவுகளின் பிரகாரம், கல்வி அமைச்சின் செயலாளரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்டுள்ள 157 வாகனங்கள் கல்வி அமைச்சின் வாகனப் பட்டியலிலும் பௌதீக ரீதியாக அமைச்சிலும்	கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரிலும் சில பாடசாலை அதிபர்களின் பெயரிலும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கணக்காய்வு விசாரணையின் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள வாகனப் பட்டியலில் உள்ள 248 வாகனங்களில் 93 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளதாகவும், 153 வாகனங்கள் தொடர்பாக உறுதியான தகவல்களை வெளிக்கொணர முடியவில்லை எனவும் கல்வி அமைச்சின் பி.க.அ. /க.அ. தெரிவித்தார். அவற்றின் பதிவு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	காணப்படாமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டுள்ளது.	இலக்கங்களின் பிரகாரம் 80 களில் பதிவு செய்யப்பட்ட மிகப் பழைய வாகனங்கள் என்பதால் அவை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக ஆராய உள்ளதாக கல்வி அமைச்சின் பி.க.அ. /க.அ. மேலும் தெரிவித்தார்.
5.	**<u>சகல அரச நிறுவனங்களுடனும் இணைந்ததான கணக்கொன்றின் தேவை</u>**	அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கு ஏற்புடையதாக பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்தின் கணக்கு தயாரிக்கப்படுவதாகவும், வெளிநாட்டுக் கடன் பெறுகைகளுக்கு ஏற்புடையதான சொத்துக்கள் தொடர்பான குறிப்புகளின்றி அதன் பொறுப்பு மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரியதெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சகல அரச நிறுவனங்களுடனும் இணைந்ததான கணக்கு இருக்க வேண்டியது அவசியமென குழு வலியுறுத்தியது. அதன் பிரகாரம், இப்பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு அடுத்து வரும் இரு வாரங்களில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கெம்ப்ரோலர் ஜெனரால், அரசாங்க பிரதான மதிப்பீட்டாளர் மற்றும் இதர உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலொன்றை ஏற்பாடு செய்யுமாறு குழு பரிந்துரைத்தது. இன்றைய தினம் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரை அறிவுறுத்துமாறும் குழுவினால் மேலும் பரிந்துரைக்கப்பட்டது.
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ***(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நலனோம்புகை பயனாளிகள் குடும்பங்களை வலுவூட்டும் குறுகிய கால மற்றும் மத்திய கால வேலைத்திட்டம் மற்றும் 2023.04.25 மற்றும் 2023.04.26 ஆம் திகதிகளில் நடைபெற்ற குழு அமர்வுகளின் போது வழங்கப்பட்ட விதப்புரைகளை செயற்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம்.)***		

<table>
<tr><td></td><td>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</td><td>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</td></tr>
<tr><td colspan="3">விசாரிக்கப்பட்ட திகதி - 2023 ஆகஸ்ட் 09</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -
❖ மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
❖ சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
❖ ஓய்வூதியத் திணைக்களம்
❖ நலன்புரி நன்மைகள் சபை</td></tr>
<tr><td>01</td><td><u>உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தை செலுத்துதல் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றமை.</u>

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தை நிறுவும் போது அதிகாரசபைகளிலிருந்து உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பாக நிலவும் பிரச்சினைகளுக்கு இதுவரை உரிய தீர்வுகள் கிடைக்கவில்லை என்பதை அவதானித்த குழு, இந்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற உயர்நீதிமன்ற தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படாமை</td><td>திவி நெகும (வாழ்வின் எழுச்சி) சட்டத்தின் 44 ஊ (2) பிரிவின் கீழ் திணைக்களத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள், அந்தந்த அதிகாரசபைகளில் நியமனத் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திணைக்களத்துக்கு உள்ளீர்க்கப்படுவதாகவும், ஏற்புடைய அதிகாரசபையினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அளிக்கப்பட்ட பங்களிப்பை கருத்தில் கொண்டு ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியத்துக்கு உரித்துடையவர்கள் எனவும் பி.க.அ./ க.அ.. தெரிவித்தார். தொழிற்சங்கங்கள் மூலம் சமுர்த்தி திணைக்களத்துக்கு எதிராக 2015 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் இணக்கத் தீர்ப்பின் பிரகாரம், இந்த உத்தியோகத்தர்கள் தமது</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	க்கு ஏதுவான விடயங்கள் தொடர்பாக வினவியது.	அதிகாரசபை சேவைக்காலத்துக்கு 03/2008 ஆம் இலக்க விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், நிலுவை வட்டியுடன் மீளச் செலுத்தப்பட வேண்டுமெனவும் மேற்படி உத்தியோகத்தர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தை பிணையாக வைத்து குறிப்பிட்டதொரு தொகையை கடனாக பெற்றிருப்பார்கள் எனில், அத்தொகையின் நிலுவையையும் அதற்குரிய வட்டித்தொகையையும் சேமலாபத் தொகையிலிருந்து குறைக்க வேண்டுமெனவும், எஞ்சிய முழுத்தொகையையும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு விடுவிக்க வேண்டுமெனவும் பி.க.அ. ./க.அ. தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அமைச்சரவையின் கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் சார்பாக நிதியத்துக்கு செலுத்தப்பட்ட அரச பங்களிப்பான 12% ஐ அரசாங்கத்துக்கு மீள செலுத்த வேண்டுமென தெரிவித்த பி.க.அ./ க.அ.. அதன் பிரகாரம் புதிய சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் 2015 ஆம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		ஆண்டு வழக்குத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார். ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 48 (ஊ) பிரிவின் பிரகாரம் யாதேனுமொரு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருப்பின், அத்தொகையை அதற்கான வட்டித் தொகையுடன் அறவிட்டதைத் தொடர்ந்து ஏற்புடைய உத்தியோகத்தருக்கு ஓய்வூதிய உரித்து கிடைக்குமெனவும், ஆரம்ப நியமனத் திகதியிலிருந்து உத்தியோகத்தர் சார்பாக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட 12% பங்களிப்புத் தொகையும் விதவைகள், அநாதைகள் நிதியத்தில் அரசாங்கத்தின் பங்களிப்புத்தொகையும் மீள அரசாங்கத்துக்கு வட்டியுடன் செலுத்தப்பட வேண்டுமெனவும், எஞ்சிய தொகை உத்தியோகத்தருக்கு உரித்தாகுமெனவும் ஓய்வுதியப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 48 (6) பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள “அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம்” எனும் பொருட்கோடலின் கீழ் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சேமலாப நிதியச் சட்டத்தினால் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் உள்வாங்கப்படாத காரணத்தினால் இப் பிரச்சினைக்குரிய நிலைமை தோன்றியுள்ளதாக தெரிவித்த பி.க.அ. /க. உ. இது தொடர்பாக வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்தார். 881 பேரின் ஓய்வூதிய கோப்புகளை ஓய்வூதியத் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக ஓய்வூதியம் பெறுவதில் தாமதமேற்படும் 66 உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பி.க.அ. /க. உ. தெரிவித்தார். **விதப்புரைகள்** சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தை நிறுவும் போது உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		செலுத்துவது தொடர்பான அவதானிப்புகள் மற்றும் அந்த அவதானிப்புகளுக்கு பின்னணியாக உள்ள சட்ட மற்றும் இதர விடயங்கள் அடங்கிய அறிக்கையை 02 வாரங்களுக்குள் (23.08.2023 க்கு முன்னர்) குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பி.க.அ. /க. உ. இற்கு குழு பரிந்துரைத்தது. **மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரின் 23.08.2023 ஆம் திகதிய SMS/ACC/01/44 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த விவகாரம் தொடர்பான தற்போதைய சட்ட ஏற்பாடுகள், அமைச்சரவை தீர்மானங்கள் மற்றும் உள்ளக சுற்றுநிருபங்களை ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட அவதானிப்புகளுடன் கூடிய அறிக்கை குழுவிற்கு கிடைத்துள்ளது.** மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவது தொடர்பான சட்டங்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் யாவை என்பது தொடர்பாகவும் ஏற்புடைய ஓய்வூதியங்களை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		செலுத்தக்கூடிய இயலுமை தொடர்பான சட்ட ஏற்பாடுகளுடன் தமது அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கையினை 02 வாரங்களுக்குள் (2023.08.23 ஆம் திகதிக்கு முன்னதாக) குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்துக்கு குழு பரிந்துரைந்துள்ளதோடு அந்த அறிக்கை குழுவினால் சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டது. **ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2023.08.22 ஆம் திகதிய Pen/Pol/1C/480 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த விடயத்துக்கு ஏற்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள், அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கை குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு ஓய்வூதியத் திணைக்களம் உயர்நீதிமன்ற தீர்ப்பு மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைவாக ஓய்வூதியங்கள் மற்றும் பிந்திய அனுகூலங்களை திவிநெகும திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு தொடர்ச்சியாக**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை 2024.01.02 ஆம் திகதிய PAC/9/4/2024 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குழுவினால் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
02	**<u>அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியில் மறுசீரமைப்பை மேற்கொள்ளுதல்.</u>** சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியினரின் மறுசீரமைப்பின் அவசியத்தை அவதானித்த குழுவானது, புதிய பணியாட்டொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையின் தற்போதைய நிலைமை குறித்து வினவியது.	2019ஆம் ஆண்டில் இறுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்குழுவினரின் எண்ணிக்கையை அதிகரித்து மீள்திருத்தங்களை மேற்கொள்வதற்கான கோரிக்கைகள் 2020ஆம் ஆண்டு முதல் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அவை நிராகரிக்கப்பட்டுள்ளதாக பி.க.உ./க.உ. தெரிவித்தார். இது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளதாகவும், இத்திருத்தங்களின்போது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்கால விடயப்பொறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அதன் பணியாட்டொகுதியினரின் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களையும் கருத்தில் கொள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வேண்டியுள்ளதால், இது பற்றிய தரவுகளை பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்தது. **<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>** முறையான பணியாட்குழு மீளாய்வின் அவசியத்தை சுட்டிக்காட்டிய குழுவானது, இதற்குத் தேவையான தரவுகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு வழங்குமாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துக்கு அறிவுறுத்தியது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாட்தொகுயினரை மீளாய்வு செய்வது தொடர்பில் தீர்மானங்களை கொள்வதற்குத் தேவையான விளங்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வினாக்கொத்தினைத் தயார் செய்து 2023.08.16ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கான பிரதி சகிதம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்குமாறு முகாமைத்துவ சேவைகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு குழு விதப்புரை செய்ததுடன், இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து 2023.09.01ஆந் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட வினாக்கொத்துக்கான பதில்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் பி.க.உ./க.உ. இற்கு குழு விதப்புரை செய்தது. **முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1284/Vol.VII ஆம் இலக்க மற்றும் 2023.08.15ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக இந்த வினாக்கொத்து குழுவுக்கான பிரதி சகிதம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.** **முகாமைத்துவ சேவைகள்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		திணைக்களத்தின் வினாக்கொத்து தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது விதப்புரைகள் சகிதம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அறிக்கையானது, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரது MWCA&SE/ADM/19/61/ஆம் இலக்க தொகுப்பு 03 மற்றும் 2023.09.12ஆந் திகதிய கடிதத்தின் பிரதி குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
03	**<u>சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்</u>** சமுர்த்தி நன்மை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் கடந்த 25 வருட காலப்பகுதியில் சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின்	சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஆரம்பத்தில் 28% ஆகக் காணப்பட்ட இலங்கையின் வறுமையின் சதவீதத்தை குறைந்த பெறுமதிக்கு கொண்டு வருவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளதாக பி.க.உ./க.உ. தெரிவித்தார். எவ்வாறாயினும், வலுப்படுத்தப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகள், சமுர்த்தி வேலைத்திட்டத்திலிருந்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	முன்னேற்றம் குறித்து குழு வினவியது. வறிய மக்களை வலுப்படுத்துவதற்கு நன்மைக் கொடுப்பனவுகளை வழங்குவது மாத்திரம் போதியதாக அமைவதில்லை எனவும், இச்சமுர்த்தி பெறுநர்களை சுயதொழில் அல்லது வருமானம் உழைக்கக்கூடிய ஏனைய வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தி தொடர்ச்சியாக மேற்பார்வை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்திய குழுவானது, இந்த வேலைத்திட்டத்தில் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற முடியுமெனவும், இது தொடர்பில் முறையானதொரு திட்டத்தை தயார் செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தது. சமுர்த்தி வேலைத்திட்டத்தில் இணையும் குடும்பங்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்ய வேண்டிய இலக்குகள், அதற்குத்	விலகாமையால், சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லையெனவும் தெரிவித்த பி.க.உ./ க.உ. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தற்போது சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை சுமார் 16 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில், திணைக்களமானது நிவாரணங்கள், சம்பளம் உள்ளிட்ட விடயங்களுக்கு வருடமொன்றுக்கு சுமார் ரூ.67 பில்லியன் செலவிடுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பி.க.உ./க.உ. தெரிவித்தார். மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு 19 நிலையங்களில் 815 மாணவர்களுக்கு 06 மாத கால (ஆறு மாதம்) ஜப்பான் மொழிப் பாடநெறியை முன்னெடுப்பதாகவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	தேவையான நிதி ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கி இது தொடர்பிலான பின்னாய்வினை மேற்கொள்வது அவசியமென குழுவானது இதன்போது விசேடமாக சுட்டிக்காட்டியது.	
04	**<u>அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 12 இலட்சம் குடும்பங்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்.</u>** அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்துடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழு வினவியது.	அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் தரவு முறைமையை தயார் செய்யும் நடவடிக்கைகளுக்கு தற்போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துக்கும் இதற்கான அணுகல் அனுமதியை வழங்க எதிர்பார்ப்பதாகவும் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு சபை தெரிவித்ததுடன், முதலாவது கொடுப்பனவை வழங்கியதன் பின்னர், வேலைத்திட்டத்தில் தற்போது காணப்படும் அளவுகோல்கள் தொடர்பில் மீளாய்வு செய்து அடுத்த வருடத்துக்கான வேலைத்திட்டத்தை தயார் செய்வது உகந்ததென அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுக்கு தகைமை பெற்றுள்ள சமுர்த்தி பெறுநர்களது விபரங்களை விரைவில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பெற்றுக்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்தியது. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும், இச்சமுர்த்தி பயனாளிகளை தொடர்ச்சியாக சமுர்த்தி வேலைத்திட்டத்தில் வைத்திருப்பதற்கான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.உ./ க.உ. தெரிவித்தார். அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் இதுவரை இனம்காணப்பட்டுள்ள வறிய மற்றும் கடும் வறுமை பிரிவைச் சேர்ந்த 12 இலட்சம் குடும்பங்களை 03 வருட காலப்பகுதிக்குள் வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தயார் செய்துள்ளதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார். இதன் மூலம் 2024ஆம் ஆண்டில் 03 இலட்சம் குடும்பங்களையும், 2025ஆம் ஆண்டில் 04 இலட்சம் குடும்பங்களையும் மற்றும் 2026ஆம் ஆண்டில் சுமார் 07 இலட்சம் குடும்பங்களையும் உள, சமூக மற்றும் பொருளாதாரம் ஆகிய 03 துறைகளின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		கீழ் வலுவூட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், அடிப்படை தரவுகளை திரட்டியதன் பின்னர் ஒவ்வொரு குடும்பத்துக்குமான அபிவிருத்தி திட்டங்கள் தயார் செய்யப்படுவதுடன், கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் நியமிக்கப்படும் கருமமாற்றல் குழுக்கள் ஊடாக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பி.க.உ./ க.உ. தெரிவித்தார். மேற்பார்வை கருமமாற்றல் குழுக்களை தாபித்து, பின்னாய்வு செயன்முறைக்கான வலையமைப்பொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பி.க.உ./ க.உ., இந்த வேலைத்திட்டத்துக்கான நிதி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு முன்வைப்பதற்கான கருத்திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு சபையின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டதன் பின்னர், இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		<u>விதப்புரைகள்</u> வறிய மற்றும் மிகவும் வறிய குடும்பங்களை வலுவூட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், இந்த வேலைத்திட்டத்தில் உள்ளடங்கும் குழும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் வலய மட்டத்தில் முகாமையாளர்களுக்கு இலக்குகளை வழங்கி வருடாந்த முன்னேற்ற மீளாய்வினை (மதிப்பீட்டை) மேற்கொள்ளுமாறும் பி.க.உ. / க.உ..இற்கு விதப்புரை செய்தது. **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரது SMS/ACC/01/44 ஆம் இலக்க மற்றும் 2023.08.23ஆந் திகதிய கடிதத்தில், அஸ்வெசும நன்மைக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் வறிய மற்றும் மிகவும் வறுமையான 12 இலட்சம் குடும்பங்களை 2024 – 2026 காலப்பகுதியில் வலுவூட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டத்துக்கு**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், வலுவூட்டல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட, பிரதேச மற்றும் பிரிவு வாரியாக இலக்குகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான வேலைத்திட்டமொன்றும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
05	**<u>சமுர்த்தி வங்கி நடவடிக்கைகள்</u>** கணக்காய்வுப் பகுப்பாய்வின்படி தற்போது சமுர்த்தி வங்கிகளிடம் ரூ.255 பில்லியன் சொத்து காணப்படுவதாகவும், நிதிச் சொத்துக்களின் பெறுமதி ரூ.220 பில்லியனெனவும் ஆனால், சமுர்த்தி வங்கிகளின் கடன் மீதி ரூ.70 பில்லியனெனவும் அதில் ரூ.10 பில்லியன்	சமுர்த்தி வங்கிகளிடம் ரூ.178 பில்லியன் வைப்பு காணப்படுகின்றபோதிலும், ரூ.45 பில்லியன் பெறுமதியிலான கட்டாய சேமிப்புக் கடன் வழங்கும் செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதில்லை எனவும், அவை தனியாக முதலீடு செய்யப்படுவதாகவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார். மேலும், வலுவூட்டலின் கீழ் 4% வட்டி வீதத்தில் ரூ.5 இலட்சம் வரையில் கடன் வழங்கும் திட்டமொன்று

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ஊழியர்களின் கடனில் உள்ளடங்குவதாகவும் மற்றும் முதலீடுகளின் பெறுமதி ரூ.150 பில்லியன் ஆகக் காணப்படுவதையும் குழு அவதானித்தது.	நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் பி.க.உ./ க.உ. தெரிவித்தார். **<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>** சாதாரண வங்கிகளில் நிலையான வைப்பு வட்டி வீதம் அதிகமாக காணப்பட்டபோதிலும், சமுர்த்தி வங்கிகளில் வைப்பாளர்களுக்கு 3% வட்டி வழங்கும் சேமிப்பு வைப்புகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், குறைந்த வட்டி வீதத்தில் வழங்கப்படும் கடன்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தொழில்முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புவதில் மிகவும் பரந்ததொரு பங்களிப்பை வழங்க முடியும் என்பதை குழு அவதானித்தது. சமுர்த்தி வேலைத்திட்டத்தில் அங்கத்தவர்களாக இல்லாத மக்களை வலுவூட்டும் நடவடிக்கைகளுக்கும் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக இத்தகைய கடன் வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்தும் குழு சுட்டிக் காட்டியது. சமூதாயஞ்சார் அமைப்புகள் ஊடாக ஏற்கனவே இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார். சமுர்த்தி வங்கிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கணக்காய்வுக்கு உட்படும் விதத்தில் சமுர்த்தி சட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்ததென குழு சுட்டிக்காட்டியது.
வளிமண்டலவியல் திணைக்களம் ***(2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையும்)*** **விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள திகதி – 2023 ஆகஸ்ட் 10**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ பாதுகாப்பு அமைச்சு ❖ வளிமண்டலவியல் திணைக்களம்		
01	**<u>பணியாட்டொகுதியினர்</u>**	வளிமண்டலவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவி உள்ளிட்ட சில பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதை குழு அவதானித்தது. 2022ஆம் ஆண்டில் மேலதிக பணிப்பாளர் நாயம் பதவி அங்கீகரிக்கப்பட்டுள்ளபோதிலும், இதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அங்கீகாரம் இதுவரையில் கிடைக்கப்பெறாமையால், இப்பதவி வெற்றிடமாக காணப்படுவதாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார். குறிப்பிட்ட பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்புகள் காணப்படுவதன் காரணமாக ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கான அவசியமின்மையால், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் ஒருங்கிணைந்து இப்பதவியிலான வெற்றிடங்களை பூர்த்தி செய்வது வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொறுப்பாகும் என பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த உத்தியோகத்தர் தெரிவித்தார்.
02	**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை அமைத்தலும் நடாத்தப்பட்டுள்ள கூட்டங்களின் எண்ணிக்கையும்</u>**	2019,2020,2021,2022, மற்றும் 2023 யூன் 30ஆந் திகதியளவில் நடாத்தப்பட்டிருக்க வேண்டிய 18 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் 2 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளதுடன், இறுதியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டமானது 2020 டிசெம்பர் மாதம் 20ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளது. மேலும், திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வாளரொருவர்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இல்லையென்பதனால், கணக்காய்வு குழுவொன்று இல்லையெனவும், அமைச்சின் கணக்காய்வு குழுவில் மாத்திரம் திணைக்களப் பிரச்சினைகள் கலந்தாலோசிக்கப்படுவதாகவும் இதன்போது பிரதம கணக்கீட்டு அலுவலர்(பி.க.அ.) தெரிவித்தார். திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு குழுக்களை அமைக்கும் பொறுப்பினை அமைச்சு ஏற்று அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென குழுவானது பி.க.அ.இற்கு விதப்புரை செய்தது.
03	**<u>திணைக்களம் திடீர் வளிமண்டலவில் மாற்றங்கள் தொடர்பில் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறையியல்.</u>**	2023 மே மாதம் 31ஆந் திகதியில் திணைக்களத்தினால் பொருத்தப்பட்டிருந்த 122 தானியங்கி மழைமானிகளில் 70 மாத்திரமே செயல்பாட்டில் இருந்தன. 38 தானியங்கி வளிமண்டலவியல் நிலையங்களில் 02 நிறுவப்படவில்லை என்பதுடன், 12 அனைத்து அளவுருக்களினதும் தரவுகள் கிடைக்கப்பெறும் வகையில் திருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய நிலையங்களில் பெட்டரி செயழிலந்து எதிர்பார்த்தளவில் இயங்கவில்லை. 453 மரபார்ந்த மழை அளவீட்டுத் தொகுதிகள் காணப்படுவதுடன்,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இவற்றில் 2023 மே 31ஆந் திகதியில் தொடர்ச்சியாக தரவுகள் கிடைக்கப்பெறாத 72 மழைமானிகள் காணப்பட்டன. தற்போது தானியங்கி மழைமானிகள் மற்றும் மரபார்ந்த மழைமானிகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்படுவதாக க.அ.தெரிவித்தார். எவ்வாறெனினும், மரபார்ந்த முறையில் தரவுகளின் துல்லியம் குறித்த சிக்கல்கள் காணப்படுவதாகவும், அளவீடுகளை மேற்கொள்வோருடைய சேவை தன்னார்வ சேவையெனவும் ஆகையால், இந்நபர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 2018ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ள தானியங்கி முறை, 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை தரவுகளைப் பெற்றுக்கொள்ளுமொரு முறை எனவும் இது இடி முழக்கத்தின்போது செயலிழப்பதாகவும் க.உ. தெரிவித்தார். இந்த முறையின் கீழ் செயலிழந்துள்ள மின்கல அலகுகளுக்கான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		மின்கலங்களை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக க.அ. தெரிவித்தார். மரபார்ந்த மழைமானி முறையில், மழைவீழ்ச்சியை அளவிட்டு இத்தரவுகளை தபால் வழியாகப் பெற்றுக்கொள்வதாக பி.க.அ. / க.அ. இதன்போது தெரிவித்தார். தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் இந்த மந்தகதியிலான செயன்முறை குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்திய குழுவானது, இதற்குப் பதிலாக தற்போதைய தொழிநுட்பத்துக்கு ஏற்ப பிரயோக ரீதியாகவும் மிக வேகமான முறையிலும் தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியது. காலம் கடந்த மரபார்ந்த மழைமானி முறையின் செயல்திறன் குறித்து கேள்வி எழுப்பிய குழுவானது, இந்த முறை தொடர்ந்தும் தேவைப்படுகின்றதா என்பது குறித்து தீர்மானித்து இதற்கும் பதிலாக துல்லியமான தானியங்கி முறையை வானிலை எதிர்வுகூறல்களுக்கு அதிகளவில் பயன்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டியதுடன், இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்பை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்டியது. **<u>விதப்புரைகள்</u>** • தற்போது காணப்படும் சகல மரபார்ந்த மழைமானிகளையும் இற்றைப்படுத்தி துரிதகதியில் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக செயற்படுத்தக் கூடியதொரு வேலைத்திட்டத்தை உள்ளடக்கிய அறிக்கையை 2023.09.10ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு வழங்குமாறு குழுவானது பி.க.அ./ க.அ. இற்கு விதப்புரை செய்தது. ***IAU/COPA/Committee/2023/07* ஆம் இலக்க மற்றும் 2023.10.10ஆந் திகதியிடப்பட்ட, மரபார்ந்த மழை அளவீட்டு கருவித் தொகுதிகளினால் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி ஏற்பாட்டுத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், நிதி கிடைக்கப்பெறுவதற்கு ஏற்ப குறிப்பிட்ட கருத்திட்டத்தை முன்னெடுக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		• 122 தானியங்கி மழைமானிகள், 38 தானியங்கி வானிலை நிலையங்கள் மற்றும் 453 மரபார்ந்த மழை அளவீட்டு தொகுதிகளின் தற்போதைய நிலைமைகளையும், தேவையற்ற அலகுகளை நீக்குவதற்கும் தேவையான அலகுகளை மீண்டும் செயற்படுத்துவதற்கும் பின்பற்ற வேண்டிய வேலைத்திட்டமொன்றையும் தயார் செய்து, அதனை நடைமுறைப்படுத்தும் திகதி குறிப்பிடப்பட்ட அறிக்கையை 2023.10.10ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு குழுவானது பி.க.அ./ க.அ. இற்கு விதப்புரை செய்தது. **வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் 2023.10.10ஆந் திகதிய மற்றும் *IAU/COPA/Committee/2023/07* ஆம் இலக்க கடித்தில் இது குறித்த விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** **மரபார்ந்த மழைமானி தரவுகளை அன்றைய தினமே கையடக்கத் தொலைபேசியின் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் முறைக்குத்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தேவையான கணிசமான மதிப்பீடு முன்வைக்கப்பட்டுள்ளது. 122 தானியங்கி மழைமானிகளை 2024.02.28இற்கு முன்னரும், 38 தானியங்கி வானிலை நிலையங்களை 2024 யூன் இறுதிக்குள்ளும் செயற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரபார்ந்த மழை அளவீட்டு கருவித்தொகுதிகளைப் பயன்படுத்தி தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
04	**<u>கொன்கல ரேடார் முறைமையை செயற்படுத்துதல்</u>**	2008 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இக்கருத்திட்டத்துக்கு ரூ.402 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், உலக வளிமண்டலவியல் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூ.320 மில்லியனுக்காக ரூ.322,926,702 மில்லியன் நிதித்தொகை வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு 2019 டிசெம்பர் மாதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2019 டிசெம்பர் மாதம் 24ஆந் திகதி இந்த நிதித்தொகையில் ஒரு மில்லியன் ரூபாய்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		திணைக்களத்தில் தக்கவைக்கப்பட்டுள்ளதுடன் மீதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான நிர்மாணம், பயிற்சி மற்றும் ஏனைய நிர்வாகப் பணிகளுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு சுமார் ரூ.78 மில்லியன் செலவு ஏற்பட்டுள்ளதுடன், ரேடார் முறைமையை தாபிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பாரந்தூங்கி உடைந்து வீழ்ந்ததாகவும் இதனால் கருத்திட்டம் ஸ்தம்பிதம் அடைந்ததாகவும் இக்கருவிகள் பயன்படுத்தப்படாமையால் சேதமடைந்துள்ளதாகவும் சுமார் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான ரேடார் கருவியை திருத்துவதற்கு சுமார் 1.1 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு ஏற்படுவதாகவும், பிற்பட்ட காலத்தில் குறிப்பிட்ட கருவிகளின் தொழிநுட்பம் காலங்கடந்து விட்டமையினால் ஒட்டுமொத்த கருத்திட்டமும் தோல்வியடைந்துள்ளதாகவும் இதன்போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொங்கல ரேடார் நடவடிக்கைகளுக்காக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		ஒதுக்கப்பட்டிருந்த ரூ.9,146,765 பெறுமதியிலான கருவிகளும் காணாமற்போயுள்ளதாக இதன்போது மேலும் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இக்கருத்திட்டத்துக்கான கருவிகளை இந்நாட்டுக்கு கொண்டு வருவதற்கு முன்னர், வளிமண்டலவியல் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோத்தரொருவர் இக்கருவிகளைப் பரிசீலித்து இவை செயற்படுவதில்லை எனத் தெரிவித்துள்ளார். இக்கொடுக்கல் வாங்கல் குறித்த எந்தவொரு குறிப்பும் கணக்குப் பதிவுகளில் வெளிக்காட்டப்படவில்லை. சுமார் 9.1 மில்லியன் பெறுமதியிலான காணாமற்போயுள்ள கருவிகள் தொடர்பில் இலஞ்ச மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் தவறிழைத்துள்ள உத்தியோகத்தர்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.
05	**<u>பொத்துவில் வானிலை நிலையத்தை தாபித்தல்.</u>**	இக்கருத்திட்டத்துக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) 2,503 மில்லியன் யென் நன்கொடையினை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வழங்குவதற்கு 2017 யூன் 30ஆந் திகதி இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது. இதில் இலங்கை அரசாங்கம் சுமார் ரூ.486.6 மில்லியனை ஏற்க வேண்டியிருந்த போதிலும் 2017ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், பொத்துவில் ரேடார் கம்பம் நிர்மாணிக்கப்படவுள்ள வானிலை நிலையம் அமைந்துள்ள நிலத்தையும் வளிமண்டலவியல் திணைக்களம் இதுவரையில் சுவீகரிக்கவில்லை. திணைக்களத்தினால் கட்டுப்படுத்த முடியாத விடயங்கள் காரணமாக கருத்திட்டம் தொடர்ந்தும் தாமதமடைந்து வருவதாக க.அ. தெரிவித்தார். கொவிட் தொற்றுநோய் காரணமாக 2020ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியவில்லை எனவும் 2021ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், 2017ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதி போதியதாக அமையாமையால், கேள்வி நடைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		2024ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை புத்தளத்தில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். புத்தளம் டொப்லர் ரேடார் அமைக்கவுள்ள இடம் உள்ளிட்ட வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ள சுமார் 10 காணிகளின் உரிமையை திணைக்களம் பொறுப்பேற்காமை குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.
06	<u>**ஆதன முகாமைத்துவம்**</u>	பொத்துவில், அநுராதபுரம், மட்டக்களப்பு, கட்டுகஸ்தொட்டை, மஹஇலுப்பள்ளம, மன்னார், இரத்தினபுரி, குருநாகல், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய வளிமண்டலவில் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள 10 காணிகளையும் திணைக்களத்துக்கு பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.இக்காணிக ளுக்கான பொறுப்பளித்தல் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் இச்செயன்முறையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
07	**ஆதன முகாமைத்துவம்**	ஜப்பான் நன்கொடையின் கீழ் (JICA) 2009ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ள ரூ.570 மில்லியன் பெறுமதியிலான 38 தானியங்கி வானிலை முறைமைகளில் 18 (M வகை) வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதேச அலுவலக வளாகங்களிலும், 17 (C வகை) ஏனைய நிறுவன வளாகங்களிலும் தாபிக்கப்பட்டுள்ளன. M வகையினைச் சேர்ந்த 20 முறைமைகளில் 2 பொருத்தப்படவில்லை என்பதுடன், C வகையினைச் சேர்ந்த 18 முறைமைகளில் 1 முழுமையாக செயலிழந்துள்ளது. 38 தானியங்கி வானிலை முறைமைகளில் 12 மாத்திரம் தற்போது எதிர்பார்க்கப்படும் இயங்கு நிலையில் காணப்படுவதாகவும் 14 முறைமைகளின் தரவுகள் தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கப் பெறுவதாகவும் க.அ. தெரிவித்தார்.
08	**பருவமழை(மழைக்கால) மன்றம் (Monsoon Forum)**	ஒவ்வொரு பருவப்பெயர்ச்சி காலத்துக்கும் முன்னர் வருடமொன்றுக்கு இரு தடவைகள் நடாத்தப்படும் பருவமழை மன்றத்தில் (Monsoon Forum) நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அதிகாரசபை, தேயிலை, தெங்கு, நெல் ஆராய்ச்சி நிறுவனங்கள், கமத்தொழில் காப்புறுதிச் சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் உள்ளிட்ட 52 அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒருங்கிணைத்து வானிலை எதிர்வுகூறல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை வளிமண்டலவியல் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் நடவடிக்கைகளை சட்டபூர்வமானதாக்குவதற்கான சட்டமொன்றை நிறைவேற்றுவதன் தேவைப்பாடு காணப்படுவதை சுட்டிக் கொட்டிய குழுவானது, அது வரையில் உரிய நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கும், இதற்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் விடயப்பொறுப்பு, கடமைகள், பரிமாறிக்கொள்ள வேண்டிய தரவுகள், தரவு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
09		முகாமைத்துவம் மற்றும் பயன்படுத்தப்படும் விதத்தை உள்ளடக்கிய வேலைத்திட்டமொன்றை தயார் செய்து இது பற்றிய அறிக்கையை 2023.09.10ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு முன்வைக்குமாறும், குழுவானது பி.க.அ. / க.அ. இற்கு விதப்புரை செய்தது. **வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் 2023.09.08ஆந் திகதிய மற்றும் *IAU/COPA/Committee/2023/07* ஆம் இலக்க கடிதத்தின் வாயிலாக இது பற்றிய விபரமான அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.** **திணைக்களத்துக்கான சட்டமொன்றை உருவாக்குவது தொடர்பில் அமைச்சரது தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது வரையில் இப்பொறிமுறையை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
09	**<u>உலகளாவிய தரப்படுத்தலில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம்.</u>**	உலகளாவிய தரப்படுத்தலுக்கு ஏற்ப இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் காணப்படும் நிலை (World ranking) மற்றும் சர்வதேச தரநியமங்களுடன் ஒப்பிடுகையில், வளிமண்டலவியல்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள காலநிலை எதிர்வுகூறல்களின் துல்லியம் பற்றிய அறிக்கையை 2023.09.10ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு முன்வைக்குமாறு குழுவானது பி.க.உ. / க.உ.இற்கு விதப்புரை செய்தது. **உலகளாவிய தரப்படுத்தலுக்கு ஏற்ப இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் வகிக்கும் நிலை தொடர்பில் உலக வளிமண்டலவியல் அமைப்பிடம் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இந்த விடயத்தின் மீது ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஏற்பாடுகள் போதியதாக இல்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி சரிபார்ப்பு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**
10.	**<u>அனர்த்தங்கள் பற்றிய தரவுகளை சர்வதேச ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்கு அங்கத்துவப் பணம் / சந்தாப் பணம் செலுத்தல்.</u>**	சர்வதேச ரீதியில் அனர்த்தங்கள் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டி நிறுவனங்களுக்கு அங்கத்துவப் பணம் / சந்தாப் பணம் செலுத்தவில்லை என்பது இதன்போது வெளியானது. சந்தாப் பணத்தை செலுத்தாமலிருப்பது குறிப்பிட்ட தரவுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கலை

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</th></tr>
<tr><td></td><td></td><td>தோற்றுவிக்காதா என குழு வினவியது. உலக வளிமண்டலவியல் அமைப்புக்கு வருடாந்த சந்தாப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும், ஆனால் ஏனைய 3 நிறுவனங்களுக்கு சந்தாப் பணம் செலுத்தப்படவில்லை எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. சந்தாப் பணம் செலுத்துவது தொடர்பில் உரிய ஒரு செயன்முறையை கடைப்பிடிக்குமாறு குழு பி.க.அ. / க.அ. இற்கு ஆலோசனை வழங்கியது.</td></tr>
<tr><td colspan="3">தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்)
விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023 ஓகத்து 11</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -
❖ நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
❖ தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>வெற்றிடங்களை நிரப்புதல்</u></td><td>தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கட்டமைப்புக்கு ஏற்ப இருக்க வேண்டிய சமூகவியலாளர், புவியியலாளர், சிரேஷ்ட இரசாயவியலாளர் உள்ளிட்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள்</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		காணப்படுவதாகவும், 2014ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் செய்யப்படவில்லை எனவும் குழு முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டன. வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2018ஆம் ஆண்டு முதல் கோரப்பட்டுள்ளபோதிலும், இதுவரையில் அதிகாரிகளிடமிருந்து இதற்கான பதில் கிடைக்கப்பெறவில்லை எனவும் பி.க.அ./ க.அ. இதன்போது தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட மூன்று பதவிகளும் வகுப்பு 1 பதவிகளாகக் காணப்படுவதனால், இவற்றை வகுப்பு 3(II) பதவிகளாக மாற்றித் தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக பி.க.அ./க.அ.குழுவுக்கு அறிவித்தார்.
02.	தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் 5228 நீர்க்கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளபோதிலும், இவற்றில் தற்போது சுமார் 4500 மாத்திரமே தொழிற்படுகின்றன என்பதை குழு அவதானித்தது. ஒரு	இதன்போது கருத்துத் தெரிவித்த பி.க.அ. / க.அ., தமது திணைக்களம் வடக்கு தெற்கு என்ற பாகுபாடின்றி மக்களது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	நதிகூட காணப்படாத, இலங்கையில் குறைந்த மழைவீழ்ச்சியைக் கொண்டுள்ள பிரதேசமான வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் குறித்து குழு வினவியது.	வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் 50 நீர்க் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 25 ஏற்கனவே மக்கள் மயமாக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.
03.	தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் தற்போது சமூதாயஞ்சார் கோட்பாட்டிலிருந்து விலகி செயற்பட்டு வருவதை அவதானித்த குழுவானது, சமூக பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்வது குறித்து வினவியது.	தமது திணைக்களம் சமூதாயஞ்சார் கோட்பாட்டிலிருந்து விலகவில்லை என்றபோதிலும், பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்த புரள்வைக் கொண்டுள்ள அனைத்து கருத்திட்டங்களுக்கும் கேள்வி நடைமுறையை பின்பற்ற வேண்டியுள்ளதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.இதற்கு மேலதிகமாக, நீர்க் கருத்திட்டத்துக்கு தேவையான கருவிகள் மற்றும் நீரின் தரம் குறித்து பரிசீலிப்பதற்குத் தேவையான தொழிநுட்பத்தை சமூக பங்களிப்பில் பெற்றுக்கொள்ள முடியாதெனவும், இதற்கு பெறுகை நடைமுறையைப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பின்பற்ற வேண்டி ஏற்படுவதாகவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார். இத்திணைக்களம் "சமூதாயஞ்சார் கோட்பாட்டை' அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், இக்கோட்பாட்டுடன் இசைந்தொழுகியவாறு செயற்பட வேண்டுமெனவும், தற்போது காணப்படும் பெறுகை வழிகாட்டல்கள் சமூதாயஞ்சார் நடவடிக்கைகளுக்கு தடையாகக் காணப்படுமெனில், இதற்கு பொருத்தமான பெறுகை நடைமுறையொன்றைக் கடைப்பிடிக்குமாறும் குழு ஆலோசனை வழங்கியது.
04.	**<u>பிரஜா ஜல அபிமானி நீர் வழங்கல் திட்டம்</u>**	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம், 2019 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் பிரஜா ஜல அபிமானி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் 363 கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு ரூ.6061 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும், 2023 யூன் மாதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பௌதீக ரீதியில் பரிசீலனைக்கு உட்படுத்திய 174 கருத்திட்டங்களில் 166 கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		குறித்து குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பிழையாதென பி.க.அ. / க.அ. இதன்போது தெரிவித்தார். அவரது விளக்கத்துக்கு ஏற்ப, 2019 மே மாதம் இக்கருத்திட்டம் அறிமுகப்படுத்துள்ளதுடன், குறிப்பிட்ட வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 123 கருத்திட்டங்களில் 03 கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டிலும் 88 கருத்திட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய, 2019ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையில் பிரஜா ஜல அபிமானி வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று வருட நடுத்தர கால வேலைத்திட்டமாக 363 நீர்க் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2022ஆம் ஆண்டளவில் 119 கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய கருத்திட்டங்கள் ஒவ்வொரு படிமுறையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வெளியானது. **விதப்புரைகள்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		நீர்க் கருத்திட்டங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் பிழையானவையென தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் முன்வைத்துள்ள கருத்து தொடர்பில், பிரதேச அலுவலகங்கள் /பிரதேச செயலாளர்களிடமிருந்து தேவையான தரவுகளைப் பெற்றுக்கொண்டு இது பற்றிய தமது விதப்புரைகளை 2023 செத்தெம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு முன்வைக்குமாறு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு (பி.க.அ. / க.அ.) குழு விதப்புரை செய்தது. **நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது FIN/01/01/16 ஆம் இலக்க மற்றும் 2023.09.25ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக குறிப்பிட்ட அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**
05.	**<u>சமுதாயஞ்சார் அமைப்புகள் முறையாக</u>**	இத்திணைக்களம் சமூதாயஞ்சார் சங்கங்களை எந்த விதத்திலும் முறையாக ஒழுங்குமுறைப்படுத்தாமையால் தேசிய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>ஒழுங்குமுறைப்படுத்தப்படாமை</u>	சமூக நீர் வழங்கல் திணைக்களத்தை அமைப்பதனால் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை விடயங்கள் நிறைவேறவில்லை என்பதை குழு வலியுறுத்தியது. சமூதயாஞ்சார் அமைப்புகளுக்கு அரச பங்களிப்பு காணப்படுவதனால், அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்பு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்த குழுவானது 25 மாவட்ட அலுவலகங்களின் சமுதாஞ்சார் அமைப்புகளின் நிதி நிலைமை மற்றும் குறிப்பிட்ட அமைப்புகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நீர்க் கருத்திட்டங்களின் நிலைமை பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியது. சமூதாயஞ்சார் அமைப்புகளின் கணக்கு வைப்பு தொடர்பிலான பயிற்சிகளையும் நீர்க் கட்டணத்தை தீர்மானித்தல் தொடர்பில் தேவையான ஆலோசனை சேவைகளையும் தமது திணைக்களம் வழங்கி வருவதாகவும், நிதி தொடர்பிலான தரவுகளை வழங்குவதற்கு சில சமுதாயஞ்சார்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைப்புகள் தயக்கம் காட்டுவதனால் இத்தரவுகளைப் பெற்றுக்கொள்வது சிரமமாக உள்ளதாகவும் பி.க.அ. / க.அ. இதன்போது தெரிவித்தார்.
06.	**<u>தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள 4500 நீர்க் கருத்திட்டங்களின் இன்றைய நிலைமை</u>**	இந்த நீர்க் கருத்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை குழுவுக்கு முன்வைக்குமாறு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்டகமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் பி.க.அ. / க.அ.வஇிற்கு குழு விதப்புரை செய்தது. • முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் யாவை? • அவற்றின் நிதி நிலைமை • அவற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் நீரின் அளவு • இந்த நீரின் தரம் • பிரச்சினைகள் காணப்படும் பட்சத்தில் கருத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்காக முன்வைக்கப்படும் முன்மொழிவுகள்/ தீர்வுகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		• செயலிழந்துள்ள கருத்திட்டங்கள் யாவை? • இவை செயலிழப்பதற்கான காரணங்கள் யாவை? • இவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் • பிரதேச அலுவலகங்கள் சமுதாயஞ்சார் அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வேலைத்திட்டங்கள்
07	**<u>மூடப்பட வேண்டிய செயற்படாதுள்ள நீர்க் கருத்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்</u>**	செயற்படாதுள்ள சமுதாயஞ்சார் அமைப்புகள் மீது செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பணத்தொகை சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாதபோதிலும், செயற்படாதுள்ள 3 சமுதாயஞ்சார் அமைப்புகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மீது மாத்திரம் ரூ.9.5 மில்லியன் அரசாங்கத்தினால் செலவிடப்பட்டுள்ளதாக இதன்போது வெளிப்படுத்தப்பட்டது. **<u>விதப்புரைகள்</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		புதிய நீர்க் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, பாரிய நிதிச் செலவில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு காரணங்களுக்காக கைவிடப்பட்டுள்ள நீர்க் கருத்திட்டங்களை மீண்டும் செயற்படுத்துவது உகந்ததென குழு விதப்புரை செய்தது. செயற்படுத்தக்கூடிய ஆனால் செயலிழந்துள்ள நீர்க் கருத்திட்டங்களை மீண்டும் செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்வதற்கும், செயற்படுத்த முடியாது செயலிழந்துள்ள நீர்க் கருத்திட்டங்களுக்கான சமூதாயஞ்சார் அமைப்புகளை கலைப்பதற்கும், குறிப்பிட்ட கருத்திட்டங்களில் காணப்படும் பயன்படுத்தக் கூடிய கருவிகளை (நீர்க் குழாய், நீர்ப் பம்பி போன்றவை) வேறு சங்கங்களுக்கு வழங்குவதற்கும் மற்றும் நடைமுறையிலுள்ள கருத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் உள்ளிட்ட தேவையான ஏனைய உதவிகளை வழங்குவதற்கும் பொருத்தமானதொரு செயன்முறையை தயார் செய்து, இந்த வேலைத்திட்டம் குறித்து 2023 நவம்பர் 08ஆந் திகதிக்கு முன்னர் குழுவை அறிவுறுத்துமாறு நீர்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் பி.க.அ. / க.அ. இற்கு குழு விதப்புரை செய்தது.
08	**NANO Filters இதன் மீது பொருளாதார ரீதியற்ற கிரயத்தை மேற்கொள்ளுதலும் மேற்கொள்ளப்படாத பணிகள் மற்றும் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படும் விதப்புரைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ளுதலும்.**	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்கு குழுவொன்றை நியமித்து, இந்நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை மற்றும் இத்தாபித்தல் நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்பட்டிருப்பின் இதற்கான காரணங்களையும் உள்ளடக்கிய அறிக்கையை 2023 செத்தெம்பர் மாதம் 22ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு முன்வைக்குமாறு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் பி.க.அ. / க.அ. இற்கு குழு விதப்புரை செய்தது. **நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது FIN/01/01/16 ஆம் இலக்க மற்றும் 2023.09.25ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக குறிப்பிட்ட அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
சப்ரகமுவா மாகாண சபை ***(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்)*** **விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023 ஆகஸ்ட் 24**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மகாண சபைகள் அமைச்சு ❖ சபரகமுவா மகாண சபை		
1	**<u>2019.06.07ஆந் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ள சப்ரகமுவா மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றம்.</u>**	**<u>விதப்புரைகள்</u>** குறிப்பிட்ட குழுவில் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு விதப்புரையினையும் செயற்படுத்துவதிலான முன்னேற்றம் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை குறித்த அறிக்கையை ஒரு மாத காலப்பகுதியில் (2023.09.25ஆந் திகதிக்கு முன்னர்) குழுவுக்கு முன்வைக்குமாறு குழுவானது, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர்(பி.க.அ.) மற்றும் சபரகமுவா மாகாண சபையின் கணக்கீட்டு அலுவலருக்கு (க.அ.) விதப்புரை செய்தது. **சபரகமுவா மாகாண சபையின் தலைமை செயலாளரின்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		CSAC/18/FR03/01/28/2023ஆம் இலக்க மற்றும் 2023.09.21ஆந் திகதிய கடிதத்தின் வழியாக பதில் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
2	**2022ஆம் ஆண்டு கணக்காய்வுக்கு ஏற்ப, சப்ரகமுவ மாகாண சபை நிறுவனங்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்**	2022ஆம் ஆண்டில் சபரகமுவ மாகாண சபையின் 61 நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்களுக்கு ஏற்ப, 16 நிறுவனங்கள் முனைப்பழி செய்யப்படாத கணக்காய்வு அபிப்பிராயங்களையும் 45 நிறுவனங்கள் முனைப்பழி செய்யப்பட்டுள்ள கணக்காய்வாளரது அபிப்பிராயத்தையும் பெற்றுக் கொண்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி குழு முன்னிலையில் தெரிவித்தார். மேலும், குருவிட்ட பிரதேச சபை மாத்திரம் கணக்காய்வுக்கான கணக்கீட்டு தரவுகளை வழங்காமையினால், கணக்காய்வாளரது பொறுப்புத் துறப்பு அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. ஆகையால், இதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சப்ரகமுவ மாகாணத்தின் சகல

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		உள்ளூராட்சி நிறுவனங்களினதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை முறையாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழுவானது க.அ. இற்கு விதப்புரை செய்தது.
3	**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.1 (கௌரவ அரசாங்க அதிபர் அலுவலகம் - தொடர் இலக்கம் – 2022,1.5.1.(அ))</u>** *பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/2 மற்றும் 2018 ஒக்தோம்பர் மாதம் 12ஆந் திகதிய ஜனாதிபதி செயலக சுற்றிக்கையில் ஒருவருக்கு உரித்தான எரிபொருள் கொடுப்பனவினை பிறிதொருவருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படாத நிலையில், கௌரவ அரசாங்க அதிபர் நாட்டிலிருந்து வெளியேறியிருந்த சந்தர்ப்பத்தில் அவருக்கான ரூ.725,000 எரிபொருள்*	கௌரவ அரசாங்க அதிபர் வெளிநாட்டிலிருக்கையில் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு, குறிப்பிட்ட மாதத்துக்கான அவரது எரிபொருள் கொடுப்பனவை அவரது பிரத்தியேக செயலாளருக்கு செலுத்துமாறு கௌரவ அரசாங்க அதிபர் 2022.08.04ஆந் திகதி அறிவித்துள்ளதாக க.அ. தெரிவித்தார். மேலும், ஜனாதிபதி செயலாளர் சப்ரகமுவ பிரதான செயலாளருக்கு முன்வைத்த குறிப்பிட்ட கடிதத்துக்கு தலைமை செயலாளர் பதில் கடிதம் அனுப்பியுள்ளதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டமையால் இக்கடிதத்துக்கான ஜனாதிபதி செயலாளரின் பதில் கிடைக்கப்பெற்றதன் பின்னர் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு பி.க.அ. / க.அ. இற்கு விதப்புரை செய்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	கொடுப்பனவை பிரத்தியேக செயலாருக்கு செலுத்தியிருத்தல். *குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டுள்ள இக்கொடுப்பனவினை, இக்கொடுப்பனவினை அங்கீகரித்துள்ள மற்றும் உறுதிப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டுமென ஜனாதிபதி செயலாளர் சபரகமுவ பிரதம செயலாளருக்கு அறிவித்தல்.*	
4	**<u>கணக்காய்வாளரின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.1 (கௌரவ அரசாங்க அதிபர் அலுவலகம் – தொடர் இலக்கம் 2022,1.5.1(அ))</u>** *அரசாங்க அதிபர் செயலகத்துக்குச் சொந்தமான வாகனமொன்று 2020ஆம் ஆண்டில் விபத்துக்கு உட்பட்டு பழுதுபார்க்கப்பட்டுள்ளபோதிலும் பழுதுபார்ப்பதற்கான*	தனியார் வாகன திருத்துமிடத்துக்கு வாகனத்தை அனுப்புகையில் உரிய காப்புறுதி முகவர் நிறுவனமான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உடன்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக க.உ. குழு முன்னிலையில் தெரிவித்தார். உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் மதிப்பீடு வழங்குவது தாமதமடைந்துள்ளதாகவும், உரிய முழுமையான நஷ்ட ஈட்டுத் தொகையை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செலுத்தாமையிட்டு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ரூ.5,983,937 நஷ்ட ஈட்டுத் தொகை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படாமை. **<u>கணக்காய்வாளரின் சுருக்கக் குறிப்பு (Brief Note) – பந்தி இலக்கம் 4.2</u>** *2017ஆம் ஆண்டில் பிரதான அமைச்சொன்றுக்குரிய வாகனத்துக்கு ஏற்பட்ட சேதத்தை முழுமையான தேசமாகக் கருதி காப்புறுதி நிறுவனம் ரூ.25 மில்லியன் காப்புறுதி நஷ்ட ஈட்டை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தபோதிலும், அப்போதிருந்த தலைமைச் செயலாளர் இந்த நஷ்ட ஈட்டை நிராகரித்தவாறும் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாகவும் 2018ஆம் ஆண்டில் இதனைப் பழுதுபார்ப்பதற்கு தனியார் வாகன பழுது பார்க்கும் இடத்துக்கு வழங்கியுள்ளதுடன், 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்*	ஆணைக்குழுவை அறிவுறுத்தியதாகவும் இது குறித்து நிதி அமைச்சிடம் ஆலோசனை கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. <u>விதப்புரைகள்</u> அரசாங்க அதிபர் செயலகம் மற்றும் தலைமை அமைச்சுக்கு உரித்தான இந்த இரு வாகனங்கள் பற்றிய அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் (2023.09.25இற்கு முன்னர்) குழுவுக்கு முன்வைக்குமாறு குழுவானது பி.க.அ. / க.அ. இற்கு விதப்புரை செய்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் தலைமை செயலாளரின் CSAC/22/FR/04/03 ஆம் இலக்க மற்றும் 2023.09.12ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ரூ.3,063,690 முற்பணத் தொகையும் குறிப்பிட்ட காப்புறுதி முகவராண்மையினால் வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 4 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இது வரையில் மோட்டார் வாகனம் மாகாண சபைக்கு கொண்டு வரப்படவில்லை என்பதுடன், முழுமையான காப்புறுதி பணத்தொகையும் பெற்றுக்கொள்ளப்படவில் லை.	
5	<u>**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.2 (மாகாண சபை செயலகம்- தொடர் இலக்கம் 2022, 1.5.2 (ஆ))**</u> *மாகாண சபை செயலகத்தில் இணைந்து 22 பேர் பணியாற்றுகின்றபோதிலும், மாகாண சபை கலைக்கப்பட்டமையால் குழுக்கள் உள்ளிட்ட பல*	<u>**விதப்புரைகள்**</u> கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் மிகை ஊழியர்களை மாகாண சபையினுள் பயனுறுதிமிக்க வகையில் ஈடுபடுத்துவது தொடர்பில் பொது நிருவாக, உள்ளாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டு 2023.10.24ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிக்கையிட வேண்டுமென குழு பி.க.அ. இற்கு விதப்புரை செய்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	பணிப்பொறுப்புகள் முன்னெடுக்கப்படாதிருத்தல். *எனினும், 05 வருட காலமாகக் காணப்படும் மிகை ஊழியர்களை சபைப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் வரையில் பயனுறுதிமிக்க வகையில் வேறு அலுவலகங்களுக்கு இணைப்பதற்கான இயலுமை குறித்து ஆராய்ந்து பார்க்கப்படாமை.*	**பொது நிருவாக, உள்ளாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது PL/6/7/4/SGP ஆம் இலக்க மற்றும் 2024.01.17ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது.**
6.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.4 [பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியலாளர் சேவை) அலுவலகம் – தொடர் இலக்கம் 2022, 1.5.5(அ)]</u>** *03/2022 இலக்கம் மற்றும் 2022.04.26 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்திற்கு அமைவாக, பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் அவசியமான பகுதிகளை*	**<u>விதப்புரை</u>** பகுதியளவில் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக பின்னாய்வொன்றினை மேற்கொண்டு, அக்கருத்திட்டங்களை பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதனுடன் ஏற்புடைய அறிக்கையொன்றினை ஒரு மாதத்திற்குள் (2023.09.25 ஆம் திகதிக்கு முன்னர்) குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் பி.க.அ. / க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாணத்தின் பிரதான செயலாளரின்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	நிறைவு செய்ய வேண்டியுள்ளது. *அதற்கமைவாக கேகாலை, தெஹியோவிட்ட, ரம்புக்கனை பிரதேசங்களில் ரூ. 524,613,811 பெறுமதியுடைய 40 நிர்மாணங்கள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளமை.*	**CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்கமுடைய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. – நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு ஒப்பந்தக் காரர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பட்டியல்களை செலுத்துவதற்கு போதியளவு முற்பணம் கிடைக்காமை, மதிப்பிடப்பட்ட விலையை விட இன்றளவில் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமை போன்றவையே இத்தாமதத்திற்கான காரணங்கள் ஆகும்.**
7	**<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.5 [மாகாண இறை வரித் திணைக்களம் – தொடர் இலக்கம் 2022, 1.5.6(அ) ii]</u>** *2019, 2021 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ரூ. 95,400,000 பெறுமதியுடைய 59 நன்கொடை உறுதிகள் மற்றும் 2021 ஆம் ஆண்டு இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ரூ. 5*	40,000 உறுதிகளை ஒரு வருடத்திற்குள் பதிவு செய்த போதும் நிலவுகின்ற அலுவலர் வெற்றிடங்கள் காரணமாக 4000 உறுதிகளை மாத்திரமே அதில் பரீட்சிக்க முடியுமென மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்தார். அவ்வாறு பரீட்சிக்கப்பட்ட உறுதிகளிலிருந்து மேலதிகமாக கணிப்பிடப்பட்ட வரித் தொகையானது 50%இற்கு அண்மித்த தொகை என குழுக்கூட்டத்தின் போது தெரிய வந்தது. **<u>விதப்புரை</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய 3004 உறுதிகளுக்கு அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்களின் துல்லியத்தன்மை மாகாண இறைவரித் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்டிருக்காமை	09 மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட்ட நன்கொடை உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட நன்கொடை உறுதிகளுக்காக அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்களின் துல்லியத்தன்மையை மதிப்பிடும் போது மேலதிகமாக கணிக்கப்பட்ட கட்டணத் தொகையை உரிய முறையில் பெற்றுக் கொண்டு மாகாணத்திற்குள் வருமானத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றினைத் தயாரித்து 2023.10.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பி.க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/6/7/4/SGP ஆம் இலக்கமுடைய 2024.06.30 ஆம் திகதிய கடிதம் மூலம் இது தொடர்பாக பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் சகல மாகாண இறைவரித் திணைக்கள ஆணையாளர்களுடன் கலந்துரையாடியதாகவும், அதன்போது**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		முத்திரைக் கட்டணத்தை வசூலிக்கும் பணியில் 05 நிறுவனங்கள் (நொத்தாரிசு அலுவலகம், வங்கி, காணி பதிவாளர் அலுவலகம், உள்ளூராட்சி மன்றம்,மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம்) ஈடுபடுவதாகவும், அந்நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகளை பேணாததன் காரணமாக வருமானத்தை சேகரிக்கும் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் இன்றளவில் வட மேல் மாகாண இறைவரித் திணைக்களத்தினால் பயன்படுத்துகின்ற இணைய வழி முறையியலைப் பயன்படுத்துவதன் மூலம் இச்சிக்கலைத் தீர்க்க முடியுமென முன்மொழியப்பட்டதெனவும், அதற்கமைவாக 2024.02.06 ஆம் திகதி இடம்பெற்ற மாகாணங்களுக்கிடையிலான விடய ஒருங்கிணைப்பு மாநாட்டின் போது இந்த இணையவழி முறையியல் தொடர்பாக சகல மாகாணச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		விழிப்புணர்வூட்டப்பட்டதெனவும், அம்முறையியலை ஒவ்வொரு மாகாணத்திற்குள்ளும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதெனவும், அம்முறையியலை மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்தியதன் பின்னர் முத்திரை வருமானத்தை அதிகரிக்க முடியுமெனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.
8.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.6 (கணக்காய்வாளர் தலைமையதிபதி தொடர் இலக்கம் 2019.5.6)</u>** மாகாண முதல் அமைச்சர் அலுவலகத்தினால் புஸ்செல்ல பயிற்சி நிலையத்தில் ஐந்து மாடிகளைக் கொண்ட விடுதியொன்றினை நிர்மாணிப்பதற்காக 2019ஆம் ஆண்டளவில் ரூ. 120,710,188 செலவழிக்கப்பட்டு, அதன் பின்னர் அந்நிர்மாணம் கைவிடப்பட்டதுடன்,	மேற்குறிப்பிட்ட நிர்மாணத்திற்கான முற்பணமாக ரூ. 42 மில்லியனுக்கு மேற்கொண்ட பணிகளுக்காக ரூ. 36 மில்லியன் என ரூ. 78 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தமையினை குழு அவதானித்தது. **<u>விதப்புரை</u>** கட்டட நிர்மாணத்தை கைவிடல் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்படாத முற்பணம் உட்பட இச்சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு க.அ. இற்கு குழு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கிய முற்பணத்தில் ரூ. 24,702,328 இதுவரை அறவிடப்படவில்லை என்பதுடன் அவ்வொப்பந்தத்துக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே இவ்வொப்பந்தத்திற்காக ரூ. 6,035,509 செயலாற்றுகை பாதுகாப்புத் தொகையை பெற்றுக் கொள்ளாததனால் கிடைக்க வேண்டிய தொகையை ஈடு செய்ய முடியாமலும் இருந்தது.	**சம்பரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.09.27 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
9.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.7 (சுகாதாரத் திணைக்களம் – தொடர் இலக்கம் 2022 ,1.5.8 (அ))</u>** 2006ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க தனியார் மருத்துவக் கல்லூரிகளை பதிவு செய்யும் சட்டத்திற்கு அமைவாக, தனியார் மருத்துவ	தனியார் சுகாதார சேவை ஒழுங்குப்படுத்தல் சபையால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகள் குழாம் ஊடாக அவ்வாறு மாகாணத்தில் பதிவு செய்யப்படாத மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது என்பது குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது. **<u>விதப்புரை</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	நிறுவனங்களை தனியார் சுகாதாரச் சேவை ஒழுங்குப்படுத்தல் சபையில் பதிவு செய்ய வேண்டும் எனினும் 68 மருத்துவ நிறுவனங்களை அமைத்து, மாகாணத்தில் பதிவு செய்யாமல் நடத்திச் சென்றமை மற்றும் அந்நிறுவனங்கனை ஒழுங்குப்படுத்துவதன் மூலம் ஈட்டிய வருமானத்தை உரிய வகையில் மாகாண சபைக்கு அனுப்பாமை.	அவ்வாறு மாகாணத்திற்குள் பதிவு செய்யப்படாத மருத்துவ நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களை ஒழுங்குபடுத்தும் பிரச்சினை தொடர்பான அறிக்கையொன்று 2023.09.01 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ. / க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **தனியார் மருத்துவக் கல்லூரிகளை பதிவு செய்யும் சட்டத்திற்கு அமைவாக அந்நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குப்படுத்துவதில் நிலவும் சிக்கல்கள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அறிக்கை சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.09.12 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** மாகாண சபைக்குள் தனியார் மருத்துவ நிறுவனங்கள் சார்ந்த சிக்கல்கள் பற்றி சுகாதார அமைச்சின் செயலாளர்களை விழிப்புணர்வூட்ட வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது. இதன் போது சப்ரகமுவ வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருத்துவர்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பற்றாக்குறை தொடர்பாக குழுக் கூட்டத்தின் போது மேலும் கலந்துரையாடப்பட்டது. மேற்குறிப்பிட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்திற்கு அமைவாக, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக ஈட்டும் கட்டணத்தில் 50%இனை மாகாண சபைக்கு அனுப்ப வேண்டுமெனினும், கடந்த வருடம் அவ்வொழுங்குபடுத்தல் சபையால் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கிய ரூ. 3,921,192இனை மாகாண சபைக்கு அனுப்புவதற்கு பதிலாக வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்திருந்தமை தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. மேலும், அவ்வங்கிக் கணக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் 2022 ஒக்டோபர் 30 ஆம் திகதி அம்மீதி ரூ. 566,992 என குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்ததுடன் இது தொடர்பாக ஆராயுமாறு குழு பி.அ. இற்கு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
10.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.9 (கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் - தொடர் இலக்கம் 2021,1.5.6 (இ))</u>** *கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக உரிய சங்கங்களிடமிருந்து நடுத்தீர்ப்பாளர் கட்டணத்தை அறவிட்டு, பிணக்குகளைத் தீர்க்கும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கு நடுத்தீர்ப்பாளர் கொடுப்பனவொன்றினை செலுத்துவதாக குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் போது 2021ஆம் ஆண்டின் நடுத்தீர்ப்பாளர் கட்டணமாக ரூ. 4,276,848 கட்டணம் செலுத்தப்பட்டதுடன், நீதிமன்றத்தை வலுவூட்டும் செயற்பாடுகளில் அலுவலர்களுக்கு ரூ.1,863,515 ஊக்கத் தொகையாக 2021ஆம் ஆண்டு செலுத்தப்பட்டுள்ளமை*	இதன் போது 2007ஆம் ஆண்டு 03ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச்சட்டத்திற்கு அமைவாக, நடுத்தீர்ப்பாளர் பணிகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் அந்நடுத்தீர்ப்பாளர் செயற்பாடுகளை தமது சாதாரண கடமைக்கு மேலதிகமாக ஆற்றுவதாகவும் குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	குழுவின் கவனத்திற்குட்பட்டது.	
11.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.10 (உள்ளூராட்சித் திணைக்களம் – தொடர் இலக்கம் 2019,5.4(அ))</u>** *உள்ளூராட்சி மன்ற பிரதானிகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் லீற்றர் தொகையொன்று மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த போதும் உள்ளூராட்சி மன்றத்தினால் ரூ. 5000 தொகைக்குட்பட்டு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குழுவின் கவனத்திற்குட்பட்டது.*	பிரதேச சபைச் சட்டத்தின் 138(ஔ) மற்றும் 184 (ஊ) பிரிவுகளின் பிரகாரம், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு அவ்வாறான கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகாரம் உள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக, யாதேனும் பிரதேச சபையொன்றுக்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அமைவாக யாதேனும் கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்குவற்கு அதிகாரம் இருப்பதாகவும், அவ்வாறு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட செலவாக இருப்பின் அது கணக்காய்வாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படக்கூடாது எனவும் குழுக்கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவ்விடயங்கள் தொடர்பாக மற்றும் யாதேனும் ஆளுநர் ஒருவருக்கு,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		மாகாண சபையொன்று வலுவில் உள்ள போது அமைச்சரவைக்கு அல்லது யாதேனும் உள்ளூராட்சி மன்றத்திற்கு அவ்வாறு கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்குள்ள அதிகாரம் தொடர்பான சட்டரீதியான பொருள்கோடல் அடங்கிய அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ. இற்கு விதப்புரைத்தது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினுடைய செயலாளரின் PL/6/7/4/SGP ஆம் இலக்க மற்றும் 2024.03.29 ஆம் திகதிய கடிதம் மூலம்,** • **உள்ளூராட்சி மன்ற பொது மக்கள் பிரதிநிதிகளின் கடமை நிமித்தமான பயணங்களுக்கு மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் கொடுப்பனவை வழங்குவதுடன் தொடர்புடைய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளைக் கருத்திற் கொண்டு, உரிய சுற்றுநிருபங்களைத் திருத்தி 2023.11.14 ஆம் திகதிய திருத்தப்பட்ட புதிய சுற்றுநிருபமொன்றினை**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		வெளியிடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. • **பிரதேச சபை சட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதுடன் தொடர்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக கருதப்படுவது யார் எனபது தொடர்பான சட்டரீதியான பொருள்கோடலை வழங்குவதற்கான தத்துவம் உயர்நீதிமன்றத்திற்கு மாத்திரமே உள்ளது என்பதால் அது தொடர்பாக சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்திற்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**
12.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 2.11 (</u>மாகாண <u>வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை மற்றும்</u>**	நிலுவை முற்பணம் அறவிடப்பட வேண்டிய ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2021.02.22 ஆம் திகதி சட்டத்துறை தலைமையதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>இளைஞர் விவகார அமைச்சு – தொடர் இலக்கம் 2022,1.5.12(ஆ))</u> *மாகாண வீதி அமைச்சால் கைத்தொழில்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட ரூ. 4,812,643 முற்பணம், 2021ஆம் ஆண்டு நிறைவின் போது, 14 ஆண்டுகளை கடந்துள்ள போதும் தீர்க்கப்படாமல் இருந்தமை*	**<u>விதப்புரை</u>** அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த முற்பணம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறுபி.க.அ./க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதானச் செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க மற்றும் 2023.09.27 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
13.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 2.14 (கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் – தொடர் இலக்கம் 2022,1.5.15.1(அ))</u>** *கேகாலை மாவட்டத்தில் 03 நெசவுக் கைத்தொழில் நிலையங்கள் மூடப்பட்டதன் காரணமாக ரூ. 6,200,000 காணி மற்றும் கட்டங்கள் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை உபயோகமற்றிருந்தமை*	**<u>விதப்புரை</u>** நெசவு நிலையமொன்றில் பத்திக் பயிற்சி நிலையமொன்று நடத்திச் செல்லப்படுவதாகவும், ஏனைய இரண்டு நெசவு நிலையங்களையும் பொறுப்பேற்குமாறு பிரதேச செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் க.அ. குழுக்கூட்டத்தின் போது தெரிவித்ததுடன் அவ்வாறு பயன்படுத்தப்படாமல் இருக்கும் கட்டங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு குழுவுக்கு அறிக்கை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபை பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.09.27 ஆம் திகதிய கடிதம் மூலம், எரவ்பொலமுல்ல ஜனசலு நிறுவனம் ருவன்வெல்ல பிரதேசச் செயலாளருக்கு 2023.09.12 கையளிக்கப்பட்டுள்ளதுடன், ஹேவாதிவெல ஜனசலு நிறுவனத்தை ரம்புக்கனை பிரதேச செயலாளரை பொறுப்பேற்குமாறு 2023.03.22 ஆம் திகதி அறிவித்துள்ளதாகவும் அதற்காக வரைபடம் மற்றும் உரித்துச்சான்றிதழ்கள் கோரப்பட்டுள்ள போதிலும் அவ்வரைபடம் மற்றும் உரித்துச்சான்றிதழ்கள் இத்திணைக்களத்திடம் இல்லாதது பற்றி ரம்புக்கனை பிரதேசச் செயலாளருக்கு 2023.04.25 ஆம் திகதி அறிவித்துள்ளதுடன், புவக்தெனிய ஜனசலு நிறுவனத்தை 2021.04.19 ஆம் திகதி தொடக்கம் பத்திக் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடத்துவதற்காக கேகாலை பிரதேசச் செயலாளருக்கு கையளித்துள்ளதாகவும் அதனை முறையாக**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		சாட்டிக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
14.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.15 (கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு – தொடர் இலக்கம் 2020,1.5.13(அ))</u>** *மாகாண கல்வி அமைச்சினால் கேகாலை / அம்பேபூஸ்ஸ மகா வித்தியாலயத்தில் கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2019ஆம் ஆண்டு வரை ரூ. 8,977,624 செலவழிக்கப்பட்டு, நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டுள்ளமை மற்றும் ரூ. 1,041,656 செயலாற்றுகை பிணை 2019 ஒக்டோபர் மாதமும், முற்பண பிணை 2020 மார்ச்சு மாதமும் காலாவதியாகி இருந்தமை. அத்துடன், செலுத்தப்பட்ட முற்பணத்தில் ரூ.4,066,315 அறவிடப்படாமை.*	**<u>விதப்புரை</u>** அவ்வாறு அறவிடப்படாத முற்பணம் தொடர்பாக மற்றும் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்ட வித்தியாலயத்தின் கட்டடத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதுடன் தொடர்புடைய வேலைத்திட்டத்தை 2023.10.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க மற்றும் 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
15.	<u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இலக்கம் 2.16 (கல்வித் திணைக்களம் – தொடர் இலக்கம் 2022,1.5.17(ஏ))**</u> *மாகாணத்தில் 475 அதிபர் வெற்றிடங்களும், 67 பிரதி அதிபர் வெற்றிடங்களும், 116 உதவி அதிபர் வெற்றிடங்களும் நிலவுகின்றமை மற்றும் மாவனெல்ல கல்வி வலயத்தில் 14 பிரதி அதிபர் பதவிகள் மிகையாக காணப்படுகின்றமை*	ஒரு மாதத்திற்குள் அம்மேலதிக பதவிகளை கஸ்டப் பிரதேச வலயங்களுடன் சமநிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளதாக க.அ. குழுவிடம் தெரிவித்தார்.
16.	<u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 2.17 (காணி ஆணையாளர் திணைக்களம் – தொடர் இலக்கம் 2022,1.5.19(இ))**</u> *சப்ரகமுவ மாகாணத்தில் 2019 – 2022 ஆம் ஆண்டுக்*	இது தொடர்பாக காணி ஆணையாளர் நாயகம் மற்றும் நில அளவையாளர் தலைமையதிபதிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாக க.அ. குழுவிடம் தெரிவித்தார். மேலும், மாகாணத்தின் நீர் மின் நிலையங்களுக்கு வழங்கிய காணிகளிலிருந்து கிடைக்கப் பெற வேண்டிய நிலுவை வரி வருமானத்தை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற 615 அளவீட்டுக் கோரிக்கைகள் அந்தந்த வருடத்தில் திணைக்களத்தின் அளவிடல் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதும், அவற்றுள் 526இன் அளவிடல் பணிகள் 2022 செத்தெம்பர் மாதம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்காமை	அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், வருமானத்தை ஈட்டக் கூடியவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமெனவும் குழு, க.அ. இற்கு விதப்புரைத்தது.
17.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 2.19 (கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் – தொடர் இலக்கம் 2022,1.5.21(அ))</u>**	தனியார் கட்டடங்களில் நடத்திச் செல்லப்படுகின்ற 04 கால்நடை மருத்துவ அலுவலகங்களுக்காக 1993 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை ரூ. 4,213,900 செலுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்ததுடன், அக்கால்நடை மருத்துவ நிலையங்களை அரச கட்டடங்களில் நடத்திச் செல்வதற்குள்ள இயலுமை தொடர்பாக தேடிப்பார்க்குமாறு க.அ.இற்கு குழு விதப்புரைத்தது.
18.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.1(அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை – தொடர் இலக்கம் 2022,1.5.7.1(ஆ)i)</u>**	ஆரம்ப விசாரணை அறிக்கைக்கு அமைவாக இனங்கண்ட சேத மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக இழப்பீடுகளுக்கான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக குழுக் கூட்டத்தின் போது தெரியவந்தது. <u>விதப்புரை</u>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	மாகாண பிரதான அமைச்சின் செயலாளரால் சப்ரகமுவ அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை தொடர்பாக 2022 சனவரி மாதம் வெளியிட்ட ஆரம்பக் கட்ட விசாரணை அறிக்கைக்கு அமைவாக இனங்கண்ட ரூ. 54,394,444 பெறுமதியுடைய சேதத்தை, பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளாமை.	அவ்வாறு இனங்கண்ட சேதங்கள், பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்கள் மற்றும் அந்நிதியை அறவிடுவதுடன் தொடர்புடைய விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை 2023.10.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் இவ்விழப்பீட்டு நடவடிக்கைகளுக்காக விசாரணை குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், நிறுவனத்தின் ஆவணங்கள் ஊடாக சாட்சியங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
19.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.1(அபிவிருத்தி வடிவமைப்பு</u>**	**<u>விதப்புரைகள்</u>** அவ்வாறு பயன்படுத்தப்படாமல் இருக்கும் இயந்திரங்களை மாற்று வழிமுறைகளின் கீழ் பயனுள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	<u>மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை – தொடர் இலக்கம் 2020,1.5.4.2(அ))</u> *நன்கொடையாக அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற ரூ. 29,900,000 பெறுமதியுடைய 02 அஸ்பால்ட் உற்பத்தி இயந்திரங்கள், 2015 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற திகதியிலிருந்து இது வரையிலும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றமை.*	வகையில் பயன்படுத்துவதுடன் தொடர்புடையதாக அறிக்கையொன்றினை 2023.09.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
20.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.2 (கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை – தொடர் இலக்கம் 2021,1.5.9.1(அ))</u>** *பலவின்ன முன் பூர்த்தி செய்யப்பட்ட கொங்கிரீட் வேலைத் தளத்துடன் தொடர்புடையதாக ஒரு வருடத்தை விட பழமையான*	37 கடன்படுநர்களுடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட கடன்படுநர் மீதிகள், 12 கடன்படுநர் மீதிகளுடன் தொடர்புடையதாக ரூ. 3.1 மில்லியன் நிதி அறவிடப்பட்டுள்ளதாக க.அ.குழுவிடம் தெரிவித்தார். **<u>விதப்புரைகள்</u>** அக்கடன்படுநர் மீதியை அறவிடுவதற்கான வேலைத் திட்டம் மற்றும் அறவிட வேண்டியுள்ள நிதியை உள்ளடக்கிய (Outstanding Balance)

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ரூ. 5,564,032 கடன்படுநர் மீதியை தீர்க்காமை.	அறிக்கையொன்றினை 2023.09.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ. / க.அ. இற்கு பணிப்புரை வழங்கியது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023** ஆம் **இலக்க 2023.10.30** ஆம் **திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
21.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.3 (முன் பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தி அதிகார சபை – தொடர் இலக்கம் 2022, 1.5.16.1)</u>** *1537 முன்பள்ளிகளில் சேவையாற்றும் 1450 ஆசிரியர்கள் மாகாண நியதிச் சட்டத்திற்கு அமைவான முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியுடன் தொடர்புடைய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்துள்ளமை.*	<u>விதப்புரை</u> அவ்வாறு டிப்ளோமாவை பூர்த்தி செய்யாத 87 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், முன் பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்தியுடன் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு க.அ. இற்கு குழு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
22.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.4(வீதி அபிவிருத்தி அதிகார சபை – தொடர் இலக்கம் 2022, 1.5.7.4.(ஆ) iii)</u>** *சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகாரச் சபைக்குச் சொந்தமான 74 பேருந்து தரிப்பு நிலையங்களிடமிருந்து 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களில் நிலுவையாக இருந்த லொக் பத்திர வருமானம் ரூ.7,462,850 மற்றும் 46 பேருந்துகளிடமிருந்து மாகாணங்களுக்கிடையிலான ஒப்பந்தக் கட்டணம் ரூ. 1,134,500 அறவிடப்படவில்லை.*	சப்ரகமுவ மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகாரச் சபைக்குச் சொந்தமான சகல வீதிகளினதும் தகவல்களை (பேருந்துகளின் எண்ணிக்கை, பேருந்துகளின் ஒன்றிணைந்த நேரசூசி, இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைக்கப்பட்டுள்ள வீதிகளின் தகவல்கள்) சேகரித்து வைத்துக் கொள்ளுமாறு பி.க.அ./க.அ. இற்கு குழு விதப்புரைத்தது. **<u>விதப்புரை</u>** பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு, அனுமதியின்றி மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் தகவல்களை உள்ளடக்கிய ஆவணமொன்றினை 2023.09.24 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ./க.அ. இற்கு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கொண்டு அனுமதியின்றி மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் விபரங்கள் அடங்கிய ஆவணமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
23.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 3.5 (சப்ரகமுவ நூலகச் சேவை சபை – தொடர் இலக்கம் 2022, 1.5.7.3.(ஆ))</u>** *நூலகச் சேவை சபை 17 குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும் அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள தவறியமை, 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை ரூ. 5,545,424 கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தாலும் நூலகச் சேவை சபையை ஸ்தாபித்ததன் குறிக்கோள்களை அடையவில்லை என்பதும், சப்ரகமுவ நூலகச் சேவை சபையால் 2016ஆம் ஆண்டு*	அவ்வாறு நூலகத்தின் தரையில் குவிக்கப்பட்டிருந்த புத்தகங்கள் இன்றளவில் உரிய வகையில் இறாக்கைகளில் அடுக்கப்பட்டிருப்பதாகவும், 2023 ஆம் ஆண்டளவில் 17 குறிக்கோள்களின் கீழ் 23 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	ரூ.8,800,000 பெறுமதியான 20,651 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும், அதில் 7028 புத்தகங்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் 08 வருடங்களாக நூலகத்தில் தரையில் குவிக்கப்பட்டிருந்தமையும்.	
24.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.2 (எம்பிலிபிட்டிய நகர சபை – தொடர் இலக்கம் 3.1(அ))**	2019ஆம் ஆண்டு ரூ. 2,689,200 செலவில் LED அறிவித்தல் பலகையொன்றை அமைத்து அச்செலவை 20 மாதங்களில் ஈடு செய்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அறிவித்தல் பலகை அமைக்கப்பட்டு 34 மாதங்களில் பெற்றுக் கொண்ட வருமானம் ரூ. 35,500 மாத்திரமாகும். செயலிழந்த நிலையில் இருந்த அவ்வறிவித்தல் பலகைகளை இன்றளவில் வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக க.அ. குழுவிடம் தெரிவித்தார்.
25.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.3**	**விதப்புரைகள்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>(எம்பிலிபிட்டிய பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.2(உ))</u> *மீளாய்வாண்டில் 1080 மெற்றிக்டொன் திண்மக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக 09 பணியாளர்களுக்கும், 06 வாகன இயந்திர உபகரணங்களுக்கும் ரூ. 11,189,389 செலவிடப்பட்டிருந்தாலும் அக்கழிவுகளை சூழல் நேயமிக்கவாறு வெளியேற்றாமை.*	அக்கழிவுகளை சந்திரிக்கா வாவியில் இடாமல் வெளியேற்றுவதற்கு பொருத்தமான வேறு மாற்று வழிமுறைகளை கையாளுமாறு க.அ.இற்கு குழு விதப்புரைத்தது.
26.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.4 (எஹலியகொட பிரதேச சபை – தொடர் இலக்கம் 2.2.2 (அ))</u>** *2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை விட பழமையான ரூ. 15,181,158 சோலை வரி மீதியும், ரூ. 127, 459 ஏக்கர் வரி மீதியும் நிலுவையாக காணப்பட்டமை.*	நிலுவை சோலை வரியை அறவிடுவதற்கு வருமானத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்தம் வருமானம் பற்றி கலந்துரையாடுவதற்கான கூட்டங்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
27.	<u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.5 (இம்புல்பே பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.3 (அ))**</u> *பஹன்துடாவ நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் ரூ.1,852,279க்கு நிறைவு செய்யப்பட்ட மலசலக் கூடத் தொகுதி அமைந்துள்ள காணி சபைக்கு பொறுப்பேற்கப்படவில்லை என்பதுடன் சபைக்குச் சொந்தமான 133 பொது மயான பூமிகளின் உரித்து தொடர்பான சிக்கல்களும் தீர்க்கப்படாமல் இருந்தமை.*	அவ்வாறு பிரதேச சபைகளுக்கு பொறுப்பேற்கப்படாத மற்றும் சிக்கல்கள் தீர்க்கப்படாத காணிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது.
28.	<u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.6 (கலவான பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.4)**</u> *மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட தாங்கிக்கு பிரவேசிப்பதற்கு குக்குலேகம நீர் மின் நிலையத்தினால் அனுமதி வழங்கப்படாததன்*	மின்சார சபையுடன் கலந்துரையாடி அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூ.902,100 பயனற்ற செலவாக இருந்ததுடன், மலக்கழிவுகளை வெளியேற்றும் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருந்தமை	
29.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.7 (கஹவத்த பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.1 (அ))** *2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்ட 29 சட்டவிரோதமான நிர்மாணங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசச் சபைச் சட்டத்தின் 47ஆவது பிரிவுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை*	பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக சட்டரீதியாக்கக் கூடிய சட்டவிரோதமான நிர்மாணங்களை சட்டரீதியாக்குவதற்கும், அவ்வாறு மேற்கொள்ள முடியாத சட்டவிரோதமான நிர்மாணங்களை நீக்குவதற்கும் எதிர்பார்ப்பதாக குழுக் கூட்டத்தின் போது உரிய அலுவலர்கள் தெரிவித்தார்கள்.
30.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.8 (குருவிட்ட**	இச்சம்பவங்கள் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	<u>பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.4)</u> *சபையின் வழக்கு நடவடிக்கைகளுக்காக ரூ. 25,000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு சட்டத்தரணி ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு 2021.07.16 ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டு, அன்றைய தினமே பெறுகை நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு சட்டத்தரணி ஒருவருடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டமை. மேலும் 2021 யூலை தொடக்கம் 2022 திசெம்பர் மாதம் வரை ரூ.425,000 மாதாந்தக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டமை மற்றும் சபையின் வழக்கு நடவடிக்கைகளுக்காக அவருக்கு மேலும் ரூ.103,920வும், வேறு சில சட்டத்தரணிகளுக்கு ரூ. 578,627வும் செலுத்தப்பட்டிருந்தமை.*	அதற்கமைவாக இதனுடன் தொடர்புடைய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் க.அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
31.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.9 (கொலொன்ன பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.1 (அ))** *கூட்டுப்பசளைத் தளமொன்றினை நிர்மாணிப்பதற்குத் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூ. 7,612,713 செலவிடப்பட்டிருந்ததுடன், 2022 யூலை மாதம் மாகாண சபையிடமிருந்து ரூ. 950,000 பெறுமதியான பேலர் இயந்திரமொன்று கிடைக்கப் பெற்றது. எனினும் மீளாய்வாண்டு நிறைவடையும் போதும் கூட்டுப் பசளை கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படாமலிருந்தமை*	அக்கூட்டுப்பசளை கருத்திட்டத்தின் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குழுக்கூட்டத்தின் போது தெரிய வந்தது.
32.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.10**	எதிர்காலத்தில் சந்தைகளை நிர்மாணிக்கும் போது வர்த்தகர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	<u>(கொடக்கவெல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.1 (அ))</u> *ரூ. 5,654,649 கிரயமுடைய மீன் சந்தையை மீண்டும் நிர்மாணிப்பதற்கு ரூ. 2,771,927 செலவிடப்பட்டிருந்த போதும் நிர்மாணக் குறைபாடுகளை சுட்டிக்காட்டி, வர்த்தகர்களில் ஒரு தரப்பினர் சந்தைக்கு முன்பாக மீன் விற்பனை செய்கின்றமை.*	நிர்மாணப் பணிகளை திட்டமிடுமாறு குழு விதப்புரைத்தது.
33.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.11 (நிவித்திகல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.3 (அ))</u>** *வழங்கப்பட்ட 96 கொடிக் கம்பங்கள் மீண்டும் கையளிக்கப்பட்டிருக்கவில் லை. அதில் 15 கம்பங்களின் பெறுமதி அறவிடப்பட்டிருந்த போதும், பொதுச் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக 81 கம்பங்களின் பெறுமதியான*	மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்கு நி.ஒ. 104 இற்கு அமைவாக விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் க.அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ரூ. 1,032,750இனை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே குறைவாக இருந்த 35 பொருட்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்காணமை.	
34.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.12 (பெல்மடுல்ல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.2)</u>** *விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி பெல்மடுல்ல வாராந்த சந்தைக்கு அண்மையில் காணியொன்றினை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டவர் 2006ஆம் ஆண்டு தொடக்கம் நில குத்தகைத் தொகையை செலுத்தாமல் ஒப்பந்தத்திற்கு முரணாக செயற்பட்டிருந்தாலும் அதற்கெதிராக சபையால்*	இது தொடர்பாக விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கைக்கு அமைவாக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமை.	
35.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.15 (இரத்தினபுரி பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.3)</u>** *2006ஆம் ஆண்டு சபையால் முறையற்ற வகையில் தனியார் காணியொன்றின் ஊடாக பாதையொன்று அமைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புக்கு அமைவாக முறைப்பாட்டாளருக்கு (பெண்) மீண்டும் அக்காணியின் அமைதியான உடைமையை கையளித்ததுடன் நட்டயீட்டுத் தொகை, வழக்குக் கட்டணம் மற்றும் சட்டத்தரணி கட்டணமாக ரூ.479,505இனை செலுத்த வேண்டி ஏற்பட்டமை.*	அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களை இனங்கண்டு அவர்களால் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது.
36.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு -</u>**	**<u>விதப்புரை</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>பந்தி இலக்கம் 4.13 (பலாங்கொடை நகர சபை – தொடர் இலக்கம் 3.5 (அ))</u> *திட்டமிடல் குழுவின் தீர்மானத்திற்கு முரணாக தவிசாளரின் தற்றுணிபின் பிரகாரம் 02 சட்டவிரோதமான கட்டடங்களுக்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, இயைபுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. அவ்வங்கீகாரத்தை வழங்கும் போது பலாங்கொடை நகர சபைக்கு அறவிட வேண்டியிருந்த வருமானம் ரூ. 886,301 அறவிடப்பாடமல் இருந்த மை.*	பலாங்கொடை நகர சபை இழந்த வருமானத்தை பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களிடமிருந்து அறவிடுவதுடன் தொடர்புடையதாக குழுவொன்றினை அமைத்து விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையொன்றினை குழுவிடம் 2023.10.24 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
37.	<u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.16 (வெலிகேபொல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.1(ஆ))**</u> *2021 ஆம் ஆண்டு ரூ.2,031,180 இற்கு கொள்வனவு செய்த 349 நீர் மானிகள் 2023 சனவரி*	நீர்மானியை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரும் போது மாவட்டத்தின் கிராமிய நீர் கருத்திட்ட அலுவலகத்திடமிருந்து தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	மாதமளவில் பயன்படுத்தப்படாமல் இருந்தமை. அவ்வாறே 449 நீர்மானிகள் செயலிழந்தமையின் காரணமாக நிலையான கட்டணம் மட்டுமே அறவிடப்பட்டு வந்தது. 2022.12.31 ஆம் திகதியளவில் ரூ. 2,700,036 இனை நீர்க்கட்டணமாக அறவிடவேண்டியிருந்ததுடன் அம்மீதியில் ஒரு வருடத்தை விட பழமையான மீதியாக ரூ.921,744 காணப்பட்டமை.	
38.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 4.17 (இரத்தினபுரி மாநகர சபை – தொடர் இலக்கம் 3.2(ஆ))</u>** *இரத்தினபுரி மாநகர சபை கட்டிடத்தின் மின்சாரக் கட்டமைப்பினை நவீன மயப்படுத்தும் போது ரூ. 5,265,787 மின்சார உதிரிப்பாகங்களுக்கும், 1046 நாட்கள் உழைப்புக்காகவும் செலவிடப்பட்டது. எனினும் அதற்கு முறையான*	**<u>விதப்புரை</u>** இது தொடர்பாக ஆராய்ந்து 2023.09.25 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு குழு க.அ. விதப்புரைத்தது. **சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரின் CSAC/18/FR03/01/28/2023 ஆம் இலக்க மற்றும் 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	திட்டமொன்றும், கிரய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு பட்டயப் பொறியியலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	
39.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.1(கேகாலை நகர சபை – தொடர் இலக்கம் 3.1(இ)</u>** *நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான வாடிவீட்டை 2009ஆம் ஆண்டு 1589/20 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிக்கை அறிவித்தலின் பிரகாரம் மீண்டும் கையளிக்க வேண்டுமெனினும், 2022 திசெம்பர் மாதம் வரையிலும் அது கையளிக்கப்பட்டிருக்கவில்லை.* *அவ்வாறே 2020 செத்தெம்பர் மாதம் தொடக்கம் 2022 மே மாதம் வரையான காலப்பகுதியுடன்*	நகர அபிவிருத்தி அதிகார சபையால் உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடையதாக சுவீகரிக்கப்பட்ட வாடி வீடுகள் தொடர்பாக அவ்வதிகார சபையால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டிய ஆனால் செலுத்தப்படாத கட்டணங்களுக்குரிய தகவல்களை சகல உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு, உரிய சபைக்கு அறவிட்டுக்கொள்ளவேண்டிய கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்கான கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு குழு பி.க.அ. இற்கு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	தொடர்புடையதாக அவ்வதிகார சபையிடமிருந்து ரூ. 1,506,700 வாடி வீடு முகாமைத்துவக் கட்டணத்தை அறவிட வேண்டியுள்ளது. மேலும் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015 யூலை மாதம் வரை வெளித் தரப்பினரால் அவ்வாடி வீட்டிலிருந்து வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன் அக்காலப்பகுதியில் நிலுவையாக காணப்பட்ட ரூ. 502,026 கட்டணத்தை பதிவழிப்பதற்கான வேண்டுகோள் பொருத்தமற்றதாகவும், சிக்கலுக்குரியதாகவும் இருந்தது.	
40.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.2 (கேகாலை பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.4)</u>** *01/2021 ஆம் இலக்கமுடைய பொது நிதி சுற்றுநிருபத்திற்கு முரணாக, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட மொத்த*	**<u>விதப்புரை</u>** கேகாலை பிரதேச சபை போன்று ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்வாறான சிக்கல்கள் தொடர்பாக மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சப்ரகமுவ உள்ளூராட்சி அமைச்சின் க.அ. இற்கு குழு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	ஒப்பந்த எண்ணிக்கையில் ஒழுங்கு முறைப்படி 78% மற்றும் 68% ஒரே ஒப்பந்தக்காரரிடமே வழங்கப்பட்டிருந்தது.	
41.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.3 (மாவனெல்ல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.5)</u>** *வெற்றிடங்கள் நிலவாத துறைகள் மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிக்கு நேரடி உழைப்பின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு 2006 ஆம் ஆண்டு சபை தீர்மானித்ததற்கு அமைவாக, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 31 பணியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.* *எனினும்,மேற்குறிப்பிட்ட சபைத் தீர்மானத்திற்கு அமைவாக, வேறு பணிகளில் அவர்களை ஈடுபடுத்தி 2022 ஓகத்து வரை ரூ. 57,524,942 சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, அதில் 10 பணியாளர்களின் நியமனக்*	உள்ளூராட்சி மன்றங்களின் கருத்திட்டங்களுக்கு பணியாளர்களை பெற்றுக்கொள்ளும் போது தொழிலாளர் ஒப்பந்த (Labour Contract) அடிப்படையில் தேவையான உழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றினை தயாரிக்குமாறு பி.க.அ. இற்கு குழு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	கடிதங்கள் பிரத்தியேக கோப்புக்களில் இடப்பட்டிருக்க வில்லை.	
42.	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.4 (வரக்காபொல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.2(ஆ))** *உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றுநிருபம் 11/2020 இன் பிரகாரம் வருமானம் ஈட்டக் கூடிய இயந்திர உபகரணங்களை இலவசமாக வழங்கக் கூடாது எனினும் தவிசாளரின் ஆலோசனைக்கு அமைவாக அண்ணளவாக ரூ. 3,361,500 ஈட்டக்கூடிய இயந்திரங்கள் 747 மணித்தியாலங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளமை மற்றும் பெக்கோ இயந்திரம் வெளியேறுவது மற்றும் மீள உள்ளே வருவது தொடர்பான நுழைவாயில் அறிக்கை பேணப்படவில்லை என்பது குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தமை*	இது தொடர்பாக பின்னாய்வொன்றினை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு க.அ. இற்கு விதப்புரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
43.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.5 (எட்டியாந்தோட்டை பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.2 (அ))</u>** *கிதுல்கல பிரதேசத்தில் 2021ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட ரூ. 1,950,822 பெறுமதியான 14 விற்பனைக் கூடங்கள் 2022 ஒக்டோபர் மாதம் வரையிலும் பயன்படுத்தப்படாமல் இருந்தமை*	இது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்விற்பனைக் கூடங்களில் ஒரு கூடம் மாத்திரம் விலைமனுக்கோரலுக்கு அப்பாற்பட்டு பெறப்பட்டிருப்பதாகவும் ஏனைய கூடங்களை தற்போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார்.
44.	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு - பந்தி இலக்கம் 5.6 (ருவன்வெல்ல பிரதேச சபை – தொடர் இலக்கம் 3.5)</u>** *மத்திய நூலகத்தின் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாததன் காரணமாக அந்நூலகத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூ. 1,173,419 பெறுமதியான உபகரணங்கள்*	நூலகத்தின் எஞ்சிய பணிகளை சபையின் நிதியத்திலிருந்து நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், அதற்காக ரூ. 3.3 மில்லியன் செலவாகும் என எதிர்பார்ப்பதாகவும் க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	பயன்படுத்தப்படாமல் இருந்தமை	
45	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.7 (தெஹியோவிட்ட பிரதேச சபை – தொடர்பு இல. 3.5)</u>** *கிராமமொன்றின் ஊடாக நீர் வழங்கும் கருத்திட்டம் ஒன்றை அமைக்கும் பணியின் முதற் கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட கிணற்றின் நீரானது பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதால் குறித்த கிணற்றை நிர்மாணிப்பதற்குச் செலவாகிய ரூ. 909,710 ஆனது பயனற்ற செலவொன்றாகக் காணப்பட்டதுடன் நீர் வழங்கல் கருத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதுவும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை.*	இது தொடர்பான பரிசோதனை அறிக்கையினைப் (Testing Report) பெற்றுக்கொண்டதன் பின்னர், ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவது தொடர்பில் தீர்மானிப்பதாக க.அ. குழுவின் முன் தெரிவித்தார்.
46	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.8</u>**	குறித்த கம்பெக்டர் இயந்திரத்தை கொடக்கவெல பிரதேச சபையுடன் பரிமாற்றிக் கொண்டதாகவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	<u>(புலத்கொஹுபிட்டிய பிரதேச சபை – தொடர்பு இல.3.3)</u> *2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற சுமார் ரூ. 6,221,373 பெறுமதியான கம்பெக்டர் இயந்திரமானது கிடைக்கப்பெற்ற நாள் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றமை.*	இன்றளவில் அது சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதாகவும் குழுவில் தெரியவந்தது.
47	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.9 (அரநாயக்க பிரதேச சபை - தொடர்பு இல. 3.2 (இ)</u>** *பிரதேச மக்களின் எதிர்ப்புக் காரணமாக திண்மக் கழிவு முகாமைத்துவத்துவ செயற்பாடுகளுக்காக பெறப்பட்ட காணியில் குப்பைகளை அகற்றாது 2022 ஆம் ஆண்டில் ரூ. 880,000 இற்கு வருடாந்தக் குத்தகை அடிப்படையில் காணியொன்றைப் பெற்று கழிவு அகற்றப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் கழிவு முகாமைத்துவ*	குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட காணியில் கழிவகற்றல் இடம்பெற்றுள்ளதால் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு களுகல தெபத்கம எனும் பிரதேசத்தில் காணியொன்று பெறப்பட்டதாக குழுவில் தெரியவந்ததுடன் அது தொடர்பான மதிப்பீடு மற்றும் முன்மொழிவுத் திட்டம் என்பவற்றை பொது பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதாகவும் எதிர்காலத்தில் கட்டம் கட்டமாக குறித்த பணிகளை மேற்கொள்வதாகவும் க.அ. குழுவின் முன் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	செயற்பாடுகளுக்கு ரூ. 6,746,686 தொகை செலவு செய்யப்பட்டுள்ள போதிலும் அதன் மூலம் உரம் தயாரித்து வருமானம் ஈட்டுவதற்கு சபை தவறியுள்ளமை.	
48	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.10 (கலிகமுவ பிரதேச சபை - தொடர்பு இல. 3.3(ஆ)</u>** *காணி ஏல விற்பனையின் போது பொதுப் பணிகளுக்காக சபைக்கு ஒப்படைக்க வேண்டிய ரூ. 4,668,000 பெறுமதியான 31.12 பேர்ச்சஸ் காணியினைக் கையகப்படுத்தாமை குழுவில் தெரியவந்தது.*	சபையின் ஆதனங்கள் குறித்து முழுமையான பொருள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.
49	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.11 (தெரணியகல பிரதேச சபை - தொடர்பு இல. 3.2 (ஆ)</u>** *பேருந்து நிலையத்திலுள்ள கடை அறைகளை நிர்மாணிப்பதற்கு 2014*	குறித்த கடை அறைகளை கடை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு அவர்களுடன் உடன்படிக்கை செய்துள்ளதாகவும், தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் மேற்படி பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	மற்றும் 2015 ஆண்டிகளில் 29 கேள்வி மனுதாரர்களிடம் அறவிடப்பட்ட முற்பணத் தொகையாகிய ரூ. 24,299,000 மீளாய்வு வருட இறுதியாகியும் குறித்த பணிக்குப் பயன்படுத்தாமை.	
50	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்பு – பந்தி இல. 5.12 (ரம்புக்கனை பிரதேச சபை -தொடர்பு இல. 2.2.2 (ஆ)</u>** *பிரதேச சபை அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியை 02 வருடங்களுக்கு மேலாக குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாமையால் ரூ. 3,750,000 வருமானம் இழக்கப்பட்டுள்ளமை.*	ரூ. 125,000 ஆன மதுப்பீட்டுப் பெறுமதியுடைய மேற்படி கட்டிடப் பகுதி மூன்று சந்தர்ப்பங்களில் டென்டர் விடப்பட்ட போதிலும், டென்டரை எவரும் பெற்றுக்கொள்ளாத காரணத்தால் மதிப்பீட்டுப் பெறுமதியை ரூ. 100,000 வரையில் குறைத்ததாகவும் மீளவும் குறித்த கட்டிடத்தை கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்துடன் எதிர்காலத்தில் டென்டர் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் க.அ. தெரிவித்தார்.
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் ***(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்)*** **விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023 செத்தெம்பர் 06**		

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு ❖ விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்		
1	விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்க வேண்டிய 4 உதவி விளையாட்டுப் பணிப்பாளர்களில் 2 பேர் மாத்திரமே இன்றளவில் விளையாட்டு திணைக்களத்தில் பணியாற்றுகின்றமை தெடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.	இதன்போது, பதில் கடமையாற்றுவதற்காக 2 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் வெற்றிடமாகவுள்ள 2 பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தியுள்ளதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.)/கணக்கீட்டு அலுவலர் (க.அ) குழுவிற்குத் தெரிவித்தார். ☐**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2023.12.03 மற்றும் 2023.05.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக அறிக்கை ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**
2	**<u>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்கக்</u>**	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்கக் குறிப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள அனைத்துக் கருத்திட்டங்கள் தொடர்பாகவும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பங்கேற்புடன் விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து குழுவொன்றை நியமித்து குறித்த ஒ

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	குறிப்பில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தியுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை ஆராய்தல்.	வ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் ஆய்வொன்றை மேற்கொண்டு - 1. குறித்த கருத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதா என்பதையும்? 2. அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்? 3. தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்? 4. கருத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்? பற்றி விரிவான அறிக்கையொன்றை 2023 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதியாகும் போது குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கும் (பி.க.அ.)/கணக்கீட்டு அலுவலருக்கும் (க.அ.) குழுவால் விதந்துரைக்கப்பட்டது.
3	2016-2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 31.8 மில்லியன்களை செலவு செய்து புனரமைக்கப்பட்ட	குறித்த விளையாட்டரங்கு 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகவும்,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	டொரின்டன் ஹொக்கீ விளையாட்டரங்கின் ஒளித்தொகுதியின் தேவைப்பாடு தொடர்பில் விவரக் குறிப்புகளில் காணப்பட்ட போதிலும், சர்வதேச போட்டிகளை நடாத்துவதற்குப் போதுமான உயரம் காணப்படாமையால் எதிர்காலத்தில் முதற் தரத்திலான ஹொக்கீ விளையாட்டு மைதானமாக மாற்ற முடியாதுள்ளமை மற்றும் விளையாட்டரங்கு பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளமை/ பழுதடைந்துள்ளமை தொடர்பாகவும் குழுவால் வினவப்பட்டது.	கடந்த ஆண்டில் ஹொக்கீ சம்மேளனத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த கருத்திட்டத்தை மேற்கொண்ட பொறியியலாளர் வெளிநாட்டில் இருப்பதாகவும், தற்போது குறித்த விளையாட்டரங்கு பயன்படுத்தப்படுவதால் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சின் அலுவலர்கள் தெரிவித்தனர்.
4	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அறிக்கைகளைக் கோருதல்.</u>**	இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படாத விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட சுருக்க குறிப்பில் உள்ளடங்கியுள்ள கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு, குறித்த ஒவ்வொரு ஐய வினாக்கள் தொடர்பாகவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வெவ்வேறாக அவதானிப்புகளை / விதப்புரைகளையும் தயாரித்து குறித்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதி உள்ளடங்கிய அறிக்கையொன்றை 2023 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் பி.க.அ./ க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது.
5	இலங்கையின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றம் தொடர்பில் விளையாட்டுத்துறை, இளைஞர் அலுவல்கள் அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பொறுப்புகள்/இடையீடு மற்றும் அது தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்படும் பணிப்பொறுப்பு மற்றும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பாகவும் குழுவால் வினவப்பட்டது.	விளையாட்டு வீர வீராங்கனைகளின் நலன் தொடர்பில் செயற்படுதல் மற்றும் விளையாட்டுத்துறையில் சர்வதேச ரீதியான வெற்றிகளின்பால் தேசிய மட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளை ஈடுபடுத்துதல் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கமாகுமென திணைக்கள அலுவலர்கள் தெரிவித்தனர். தற்போது சுமார் 66 தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்கள் இதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றினூடாக சர்வதேச போட்டிகளில் விளையாட்டு வீரர்களை பங்கேற்கச் செய்வதற்கான பணிகளை மேற்கொள்வதோடு, ஒலிம்பிக் போட்டித் தொடர், உலக சாம்பியன்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		போட்டித் தொடர், ஆசிய மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டித் தொடர் போன்ற பிரதான விளையாட்டுப் போட்டித் தொடர்களில் விளையாட்டு வீர வீராங்னைகளைப் பங்குபற்றச் செய்தல் மற்றும் அதற்காக நீண்டகால அடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சியளிக்கும் பணிகளை தமது திணைக்களம் மேற்கொள்வதாகவும், விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் மற்றும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் தொடர்பில் காணப்படுகின்ற அசௌகரியங்கள் காரணமாக விளையாட்டுச் சம்மேளனங்களில் உள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தேசிய குழுமத்திலுள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளை பிரதான போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்வதற்குரிய செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள், போஷாக்குக் கொடுப்பனவுகள் மற்றும் பயிற்சிகளுக்கான உபகரணங்கள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை குறித்த விளையாட்டு வீர வீராங்னைகளுக்கு வழங்குவதை விளையாட்டு அபிவிருத்தி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		திணைக்களம் மேற்கொள்வதாகவும் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.
6	**<u>இலங்கை கலந்துகொள்ளும் சர்வதேச விளையாட்டுப் போட்டித் தொடர் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெறுதல்.</u>**	ஒலிம்பிக் போட்டித் தொடர், உலக சாம்பியன்சிப் போட்டித் தொடர், ஆசிய மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில், 1. இன்றளவில் வகைப்படுத்தலுக்கு அமைவாக காணப்படுகின்ற விளையாட்டுக்களின் எண்ணிக்கை, 2. மேற்படி ஒவ்வொரு விளையாட்டுக்களின் தரப்படுதல்களுக்கு அமைவாக தற்போது இலங்கை பெற்றுள்ள இடம், 3. தேசிய சபையினால் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைவாக விளையாட்டினை முன்னேற்றுவதற்கான இலக்கிடப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக அடுத்த கூட்டத்தின்போது கனனிச் சமர்ப்பணமொன்றைச் மேற்கொள்ள வேண்டுமெனவும், அதன்போது மேற்குறித்த போட்டிகளில் எந்தெந்த வருடங்களில் எவ்வகையான பதக்கங்களைப் பெறுவது என்பது

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தொடர்பில் காணப்படுகின்ற இலக்கிடப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பிலும் உள்ளடக்குதல் வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது. 2023 ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் போது குழுவிற்கு விடயங்களைச் சமர்ப்பிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் பி.க.அ. /க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. **விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2023.10.18 ஆம் திகதிய கடிதத்தினூடாக குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**
7	அமைச்சுக்காக எதிர்பார்க்கின்ற மற்றும் ஒதுக்கப்பட்ட வருடாந்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளின் ஒதுக்கீடுகள் தொடர்பில் குழு வினவியது. அதன்போது பாடசாலை மட்டத்திலான விளையாட்டுக்களின் முன்னேற்றங்களுக்கு நிதி ஒதுக்குதல் தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன்,	இது தொடர்பில் அமைச்சின் அலுவலர்கள் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 75% இற்கும் அதிகமான அளவினை விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதாகவும் அதேபோன்று மீண்டெழும் செலவில் இருந்தும் குறிப்பிட்டளவு சதவீதமானது விளையாட்டு வீரர்களின் உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் விமான பயணச்சீட்டுகளை வழங்குதல் போன்றவற்றுக்குப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	மீண்டெழும் செலவுகளுக்கு ஒப்பீட்டு அடிப்படையில் அதிகளவான தொகையினைச் செலவு செய்துள்ளமை தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.	பயன்படுத்துவதாகவும் அமைச்சின் அலுவலர்கள் தெரிவித்தனர். அதேபோன்று குறித்த அமைச்சின் கீழ் வரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி போன்ற விளையாட்டுடன் நேரடித் தொடர்புகள் இல்லாத நிறுவனங்களுக்கும் அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படுவதாகவும் அமைச்சின் பி.க.அ/ க.அ. தெரிவித்தார்.
8	தேசிய விளையாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்காமை மற்றும் மாவட்ட விளையாட்டுக் குழுக்களை அமைக்காமை தொடர்பிலும் குழுவில் கலந்துரையாடப்பட்டன.	மாவட்ட விளையாட்டுக் குழுக்களை அமைப்பது தொடர்பான சுற்றறிக்கைகள் அனைத்து மாவட்டங்களுக்கும் மூன்று மாதங்களுக்கு முன்னராக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் மூன்று மாவட்டங்களில் இருந்து மாத்திரமே குறித்த குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சின் பி.க.அ./க.அ. அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. குறித்த சுற்றறிக்கைக்கு அமைவாக 2023 ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதியாகும் போது விளையாட்டுக் குழுவை அமைப்பது நிறைவு செய்யவேண்டியுள்ள போதிலும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இன்றளவில் எந்தவொரு விளையாட்டுக் குழுவையும் அமைத்ததற்கான ஆதாரங்கள் குழுவில் வெளிப்படுத்தப்படவில்லை.
9	விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வருடாந்த செலவு மதிப்பீடு சுமார் ரூ.500 மில்லியன்களாக காணப்பட்ட போதிலும், இது தொடர்பில் எழுத்து மூலமாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் நிதி அமைச்சினால் ரூ. 125 மில்லியன்கள் மாத்திரமே இதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விடயங்களை முன்வைத்த அமைச்சு அலுவலர்கள் தெரிவித்தனர்.	தேசிய வரவுத் செலவுத்திட்ட திணைக்கள அலுவலர்கள் இங்கு கருத்துத் தெரிவிக்கையில் நாட்டின் நிதிப் பாய்ச்சலில் காணப்படுகின்ற திருப்திகரமற்ற நிலைமை மற்றும் அமைச்சரவையால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைவாக புதிய கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் கோரப்பட்ட நிதி ஒதுக்கீட்டை முழுமையாக வழங்க முடியாதெனவும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவால் வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் 50% இற்கும் அதிகமான பணிகளை நிறைவு செய்துள்ள கருத்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.
10	இலங்கையின் தேசிய விளையாட்டை தீர்மானிப்பது தொடர்பான தெளிவூட்டல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.	கரப்பந்தாட்ட விளையாட்டை தேசிய விளையாட்டாகப் பெயரிடுவதற்கு முன்மொழியப்பட்ட விதம், அதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள், அது தொடர்பில் பின்பற்றப்பட்ட முறையியல் மற்றும் அதன் சட்டத்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தன்மை தொடர்பில் 2023 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது.
11	**<u>இலங்கை பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.</u>**	ஒலிம்பிக் போட்டித் தொடர், உலக சாம்பியன் போட்டித் தொடர், பொதுநலவாய போட்டித் தொடர், ஆசிய மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டித் தொடர்களில், 1. தற்போது குறித்த ஒவ்வொரு போட்டித் தொடரின் வகைகளின் அடிப்படையில் எத்தனை போட்டிகள் காணப்படுகின்றன? 2. மேற்படி ஒவ்வொரு போட்டியினதும் தரப்படுத்தலுக்கு அமைவாக தற்போது இலங்கை வகிக்கும் நிலை யாது? 3. தேசிய விளையாட்டுச் சபையினால் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைவாக விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதற்காக காணப்படுகின்ற வேலைத்திட்டங்கள் யாவை?

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		4. மேற்குறிப்பிட்ட போட்டித் தொடர்களில் எந்தெந்த போட்டிகளில் எந்ததெந்த வருடங்களில் பதக்கங்களை எதிர்பார்க்க முடியும்? அது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கிடப்பட்ட வேலைத்திட்டம் யாது? என்பது தொடர்பில் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்து வரும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தின்போது கணனிச் சமர்ப்பணத்தைச் மேற்கொள்ளுமாறு விளையாட்டுத்துறை அமைச்சிற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. **விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2023.10.18. ஆம் திகதிய கடிதத்தினூடாக குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**
12	**<u>இலங்கையில் விளையாட்டுத் துறை மற்றும் அதன் நிருவாகம் தொடர்பில் விஷேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள்</u>**	2018 ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட இலங்கையின் விளையாட்டுத் துறை மற்றும் அதன் நிருவாகம் தொடர்பில் விஷேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் முழுமையான அறிக்கையொன்றை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	தொடர்பாகவும் அறிக்கைகளைக் கோருதல்.	2023 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது.
13	**கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கிடையில் காணப்படுகின்ற ஒருங்கிணைப்பு.**	உடற்றகைமைக்கு அமைவாக பாடசாலை மாணவ மாணவிகளைப் பொருத்தமான விளையாட்டுக்களில் ஈடுபடுத்துதல் மற்றும் பாடசாலை மட்டத்தில் உருவாகின்ற விளையாட்டு வீரர்களை தேசிய மட்டம் வரை கொண்டு செல்லும் வேலைத்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது.

அரச நிறுவனங்களிலுள்ள நிதியல்லாத சொத்துக்களின் முகாமைத்துவச் செயன்முறையின் தற்போதைய நிலைமை மற்றும் அது தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களை ஆராய்தல்.

விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023 செத்தெம்பர் 13

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</th></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள்
❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
❖ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
❖ கல்வி அமைச்சு
❖ கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம்
❖ அரச மதிப்பீட்டுத் திணைக்களம்</td></tr>
<tr><td>1.</td><td><u>அரச நிதியல்லாத சொத்துக்களை முறையாக கணக்குப் பதிவதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான செயற்பாட்டுக் குழு</u></td><td>குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் அலுவலர்களையும் உள்ளடக்கியதான செயலாற்றுகைக் குழுவொன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும், அதற்கமைவாக 2023 ஆம் ஆண்டிற்குரிய அரசாங்க நிதிக் கூற்றுக்களை முடியுமானளவு சரியான முறையில் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் தெரிவிக்கப்பட்டது. அரச நிறுவனங்களிலுள்ள நிதியல்லாத சொத்துக்களை முகாமை செய்கையில் சுமார் 8 ரிலியன்கள் பெறுமதியான கருத்திட்ட கடன்களிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள சொத்துக்களைப் பற்றி ஆராய்வது</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		முக்கியமானதாகுமென கணக்காய்வாளர் தலைமையதிபதியால் மேலும் தெரிவிக்கப்பட்டது. **<u>விதப்புரை</u>** மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுக் குழு தொடர்பில் குழுவின் அழைப்பாளர் உட்பட அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலுடன் கூடிய அறிக்கையொன்றை வழங்குமாறும், 2023 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான குழுவின் வேலைத்திட்டங்கள் தொடர்பான செயல் திட்டமொன்றைத் (work Plan) தயாரித்து 2023.10.13 ஆம் திகதி குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் குழுவால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு விதந்துரைக்கப்பட்டது. **அரச கணக்குகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் இல. SA/MAA/AG/01 மற்றும் 2023.10.17 ஆம் திகதிய கடிதத்தினூடாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** **அதற்கமைவாக குறித்த குழுவின் அழைப்பாளர் உட்பட அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலொன்று**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 3 உப குழுக்களை அமைத்து அதன் அங்கத்தவர்களின் பெயர்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. **செயல் திட்டமொன்று (work Plan) தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வின் மூலம் கிடைக்கும் விதப்புரைகளுக்கு அமைவாக 2023 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக நிதி அறிக்கையிடல் தொகுதியை அதற்கு ஏற்றவாறு மாற்றுவதனை 2024.02.28 ஆம் திகதியளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**
2.	**<u>அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் கணக்குப் பதிதல்.</u>**	அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்களை அடையாளங்கண்டு கணக்குப் பதிதல் மற்றும் அது தொடர்பான ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் உலகலாவிய ரீதியில் ஏனைய நாடுகளில் பின்பற்றும் வழிமுறைகள் மற்றும் கடந்த காலத்தில் இலங்கையில் இது தொடர்பான வேலைத்திட்டமொன்று காணப்பட்டதா என்பது தொடர்பில் ஆராய்வது முக்கியமானதெனக் சுட்டிக்காட்டிய குழு 2023 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்க எதிர்பார்க்கும் சரியான கணக்குப் பதிதல் முறைகளை தொடராகப் பேணிச் செல்வதற்குத்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தேவையான கொள்கை ரீதியான சட்டகமொன்றைத் தயாரித்து அதனை சட்டமாக்குதல் வேண்டுமெனவும் வலியுறுத்தியது. அரசாங்கத்தின் பல்வேறு கருத்திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற கடன் தொகையானது, அரசாங்க கணக்கில் பொறுப்பொன்றாக உள்ளடக்குவதுடன் நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் குறித்த கடன் தொகை (பொறுப்பின் பெறுமதி) மாற்றமடையலாம் என்றும், குறித்த கருத்திட்டங்களை வழங்கும் நிறுவனத்தின் கணக்கில் சொத்தாக (கிரய அடிப்படையில் (Cost)) கணக்கு வைக்கப்படுவதுடன் குறித்த சொத்தின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படலாம் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. குறித்த விடயங்களின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு இடையில் வித்தியாசம் ஏற்படுவதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** எவ்வாறாயினும் நாட்டிலுள்ள மொத்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முழுமையாக ஒரு கணக்கினூடாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வெளிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய குழு அரசாங்கச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கணக்குப் பதியும்போது பின்பற்ற வேண்டியுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு விதந்துரைத்தது.
3.	<u>**அரசாங்க நிறுவனங்களிடம் காணப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுதல்**</u>	இலங்கையில் காணப்படுகின்ற அனைத்து அரச நிறுவனங்களினதும் சொத்துக்கள் தொடர்பான தரவுகளை நிகழ்நிலை முறைமைக்கமைய திரட்டுவதற்கான பணிகளை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தினூடாக ஆரம்பித்துள்ளதாகவும், வாகனங்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டும் பணிகளை 2023.09.01 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாகவும் அதற்கமைவாக 06 வகைகளின் கீழ் சொத்துக்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டி நிறைவு செய்வதற்கான காலச் சட்டகமொன்று தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும் கம்ப்ரோலர் ஜெனரல் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
4.	**<u>மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள்</u>**	**<u>விதப்புரை</u>** அரச திரட்டு நிதியம் தவிர்ந்த, வேறு வழிகளில் பெற்றுக்கொண்ட மாகாண சபைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் பற்றிய தகவல்களை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கன், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழுவால், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான சொத்துக்களின் ஆவணங்களைத் தயாரித்து தரவுகளை உள்ளடக்குவதற்கு காலம் எடுப்பதாயின் அது பற்றிய விடயங்களை உள்ளடக்கிய மொத்தச் சொத்துக்கள் தொடர்பான ஆவணமொன்றைத் தயாரிக்குமாறும், குறித்த சொத்துக்கள் பற்றிய தரவுகளை இற்றைப்படுத்த வேண்டுமாயின் அதற்கமைவாக உரிய சொத்துக்களின் கீழ் பொருத்தமான குறிப்புக்களை உள்ளடக்கி அதன் பின்னர் அளவீடு செய்து அவை பற்றிய சரியான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெறுமதிகளை உள்ளடக்குவதற்கான இயலுமை தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்குமாறு குழுவால் விதந்துரைக்கப்பட்டது.
5.	<u>**பொதுவான விடயங்கள்**</u>	அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், தரவுக் கட்டமைப்புக்களை இற்றைப்படுத்தி முறையாகப் பேணிச் செல்வதன் முக்கியத்துவம் மற்றும் அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து குறித்த நிறுவனங்களிடம் காணப்படுகின்ற தகவல்களைப் பரிமாறுவதன் தேவைப்பாடு தெடர்பிலும் குழுவால் வலியுறுத்தப்பட்டது. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட பெரும்பாலான அரச நிறுவனங்களின் பதவிகளுக்கு குறித்த நிறுவனங்களின் விடயப்பரப்பு தொடர்பான அறிவினைக் கொண்டிராத அலுவலர்களை நியமிப்பது தொடர்ந்து இடம் பெற்றுள்ளதாகவும், இதன் காரணமாக குறித்த நிறுவனங்களால் மேற்கொள்ள வேண்டியுள்ளதான சேவைகள் முறையாக இடம்பெறுவதில்லை எனவும் சுட்டிக்காட்டிய குழு, அரச நிறுவனங்களுக்கு அலுவலர்களை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		நியமிக்கும்போது அது தொடர்பான விடய அறிவினைக் கொண்ட அலுவலர்களை நியமிப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் வலியுறுத்தியது. குழுவால் வழங்கப்படும் தீர்மானங்கள்/விதப்புரைகள் மற்றும் கலந்துரையாடப்படும் முக்கியமான விடயங்கள் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது தொடர்புபடுத்துவது முக்கியமாகும் என்பதால் அது தொடர்பில் குழுவில் கலந்து கொள்ளும் நிதி அமைச்சின் பிரதிநிதிகள் குறித்த தீர்மானங்களை/விதப்புரைகளை, முக்கியமான அவதானிப்புக்களை மற்றும் விடயங்களை பொறுப்புக்கூற வேண்டிய பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியும் குழுவால் சுட்டிக் காட்டப்பட்டது. குறித்த தீர்மானங்களை பொதுத் திறைசேரியின் செயலாளர்/ பிரதிச் செயலாளர்களுக்கு ஆற்றுப்படுத்தக்கூடியதான தகவல் தொழில்நுட்ப முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அரச நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு

(2023 யூன் மாதம் 23 ஆம் திகதியன்று அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளின் முன்னேற்றமும் சுகாதார அமைச்சின் தற்போதைய பிரச்சினைகளை விசாரித்தலும்)

விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி 2023 செத்தெம்பர் 20

அழைக்கப்பட்ட நிறுவனங்கள்
- ❖ சுகாதார அமைச்சு
- ❖ தேசிய மருந்தக ஒழுங்குறுத்துகை அதிகாரசபை
- ❖ அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்
- ❖ அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

1.	**<u>உப குழுக்களை அமைத்தல்</u>**	சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைக் கட்டமைப்பு மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை அவதானித்த குழு, குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து துரிதமாக அதற்கான தீர்வுகளை வழங்கும் தேவைப்பாட்டையும் வலியுறுத்தியது. அதற்கமைவாக குறித்த பிரச்சினைகளை ஆராய்ந்து விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		உபகுழு I – சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் உபகுழு உபகுழுவின் அங்கத்தவர்கள் 01. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க பா.உ. (தவிசாளர்) 02. கௌரவ (திருமதி) டயனா கமகே பா.உ. 03. கௌரவ கபீர் ஹஷீம் பா.உ. 04. கௌரவ அஸோக அபேசிங்ஹ பா.உ. 05. கௌரவ ஜயந்த கெடகொட பா.உ. 06. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி பா.உ. 07. கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய பா.உ. உபகுழு II – தகவல் தொழில்நுட்பம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் சுகாதார அமைச்சின கீழ் காணப்பப்படுகின்ற வைத்தியசாலைகள்/ நிறுவன முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை ஆராயும் உபகுழு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		உப குழுவின் அங்கத்தவர்கள் 01. கௌரவ (கலாநிதி) (மேஜர்) பிரதீப் உந்துகொட பா. உ. (தவிசாளர்) 02. கௌரவ விமலவீர திசாநாயக்க பா.உ. 03. கௌரவ இசுரு தொடன்கொட பா. உ. 04. கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி பா.உ. 05. கௌரவ வீரசுமன வீரசிங்ஹ பா.உ. 06. கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக, பா.உ.
2.	**<u>சுகாதார அமைச்சின் பணியாட்டொகுதி</u>**	சுகாதார அமைச்சின் மருத்துவப் பணியாட்டொகுதி தொடர்பில் சுகாதார அமைச்சினால் கணனிச் சமர்ப்பணமொன்று (Computer presentation) மேற்கொள்ளப்பட்டது. • அதற்கமைவாக மத்திய அரசாங்கத்தில் 14,688 பேரும் மாகாண சபையில் 7853 பேருமாக 2023.06.30 ஆம் திகதியில் மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை 22,541 ஆகக் காணப்பட்டது. • 2022.08.30 தொடக்கம்2023.08.30 வரையிலான காலப்பகுதியினுள் சுமார் 526 மருத்துவர்கள் 05 வருட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளமை, 163 பேர் இராஜினாமாச் செய்துள்ளமை, 197 பேர் அறிவித்தலின்றி வெளிநாடு சென்றுள்ளமை மற்றும் 71 பேர் ஓய்வு பெற்றுள்ளமை எனும் அடிப்படையில் மொத்தமாக 957 பேர் சேவையிலிருந்து வெளியேறியுள்ளனர். 2024.12.31 ஆம் திகதியில் சுமார் 670 பேர் ஓய்வு பெறவுள்ளனர். • இந்த நிலைமையில் குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளை / நிறுவனங்களை நடாத்திச் செல்வது சிரமமாக இருப்பது குறித்த கணனிச் சமர்ப்பணத்தினூடாக குழுவிற்கு எடுத்துக்காட்டப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியை விஞ்சிய எண்ணிக்கையிலான மருத்துவர்கள் சுகாதார அமைச்சில் இருப்பதாகவும், பணியாட்டொகுதி தொடர்பான சரியான தரவுகளைப் பேணிச் செல்வது தொடர்பில் குறைபாடு காணப்படுவதாகவும் குழுவில் தெரியவந்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தேவைக்கு மேலதிகமான மருத்துவர்கள் சுகாதார அமைச்சில் பணியாற்றுகின்றார்களா என்பது தொடர்பில் ஆராய்ந்து மேலதிக மருத்துவர்களை தேவையான ஏனைய இடங்களுக்கு இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பி.க.அ./ க.அ. தெரிவித்தார். சுகாதார அமைச்சில் உள்ள பணியாட்டொகுதியினர் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகள் குழுவின் முன் வெளிக்கொணரப்பட்டதுடன் பணியாட்டொகுதி தொடர்பான அறிக்கையொன்றை உபகுழுவிற்கு பெற்றுக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது. நிபுணத்துவ மருத்துவர்களின் பணியாட்டொகுதி தொடர்பான திட்டவட்டமானதும் சரியானதுமான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட குறைபாடுகளை அவதானித்த குழு, மருத்துவச் சேவையில் காணப்படுகின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் விசாரிப்பதற்கு தகவல் தொழில்நுட்பம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வைத்தியசாலைகள்/நிறுவனங்களின் முகாமைத்துவ விடயங்களை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட உப குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது.
3.	**<u>“சுவஸ்த”தரவுக் கட்டமைப்பு</u>**	இன்றளவில் சுமார் 737 இடங்களில் குறித்த தரவுக் கட்டமைப்பு செயற்படுவதாகவும், கணனிகள் மற்றும் இணைய வசதிகள் இல்லாமையால் அனைத்து வைத்தியசாலைகளிலும் குறித்த தரவுக் கட்டமைப்பை செயற்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. முன்னர் காணப்பட்ட தரவுக் கட்டமைப்பில் முக்கியமான தரவுகள் புதிய தரவுக்கட்டமைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. **<u>விதப்புரை</u>** இப்புதிய “சுவஸ்த”தரவுக் கட்டமைப்பினை அனைத்து வைத்தியசாலைகளிலும் முழுமையாகச் செயற்படுத்தும் காலப்பகுதி உள்ளடங்கிய தெளிவான அறிக்கையொன்றை 2023.10.06 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு அரசாங்க கணக்குகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பற்றிய குழுவால் சுகாதார அமைச்சின் பி.க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது. **சுகாதாரச் செயலாளரின் இல. CA/AQ/FCC 02/COPA/2019-2021/MOH/2023 (IV) மற்றும் 2023.10.06 ஆம் திகதிய கடிதத்தினூடாக இது தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து, தேவையான கணனிகள் மற்றும் இணைய வசதிகள் உரிய காலப்பகுதியினுள் கிடைக்குமாயின் புதிய சுவஸ்த தரவுக் கட்டமைப்பை 1159 வைத்தியசாலைகளுக்கும் 2023.12.31 ஆம் திகதிக்கு முன்னராக விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.**
4.	**<u>மருந்துகளின் அவசரக் கொள்வனவு</u>**	**விதப்புரைகள்** குறிப்பிட்ட சில மருந்துகள் காணப்பட்ட போதிலும் மருந்துக் கொள்வனவின் போது அதிக விலைக்கு அவசரமாக கொள்வனவு செய்துள்ளமை தொடர்பில் குழுவால் வினவப்பட்டதுடன் மருந்துக் கொள்வனவின் போது விலை மனுக்கள் கோரப்படும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களை உள்ளடக்கிய ஆவணமொன்றை (2023.09.27) ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் பி.க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. **சுகாதாரச் செயலாளரின் இல. CA/AQ/FCC 02/COPA/2019-2021/MOH/2023 (IV) மற்றும் 2023.10.06 ஆம் திகதிய கடிதம் மூலமாக குறித்த நிறுவனங்கள் உள்ளடங்கிய பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
5.	**<u>சுகாதார அமைச்சில் தாபிக்கப்பட்டிருந்த Medical Supply Management Information System (MSMIS) கட்டமைப்பு மற்றும் "சுவஸ்த" கட்டமைப்பு</u>**	<u>விதப்புரை</u> Medical Supply Management Information System (MSMIS) கட்டமைப்பைச் செயற்படுத்த முடியுமென 77 பக்கங்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றை கொழும்பு பல்கலைக் கழகத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்டு இருக்கையில் புதிய கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துமாறு குறித்த அறிக்கைக்கு புதிதாக இணைக்கப்பட்ட"78 ஆம் பக்கம்" மூலமாக முன்மொழியப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து 2023.09.27 ஆம் திகதிக்கு முன்னராக அறிக்கையொன்றை தகவல் தொழில்நுட்பம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் சுகாதார

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைச்சின கீழ் காணப்பபப்படுகின்ற வைத்தியசாலைகள்/நிறுவன முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள உப குழு (உப குழு 2) இற்குச் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் பி.க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. **சுகாதாரச் செயலாளரின் இல. CA/AQ/FCC 02/COPA/2019-2021/MOH/2023 (IV) மற்றும் 2023.10.06ஆம் திகதிய கடிதத்தினூடாக இது தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** **அதற்கமைவாக UCSC இன் பேராசிரியர் திரு. கே.எல். ஜயரத்ன உட்பட நிபுணர் குழுவினூடாக MSMIS கட்டமைப்பின் குறைபாடுகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட 77 பக்கங்களையுடைய அறிக்கையை இது தொடர்பாக நடைபெற்ற விஷேட கூட்டத்திற்கு 2021.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் அதில் அடங்கும் அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய சுருக்கமான அறிக்கையினை இறுதி விதப்புரைகளுடன் கூடியதாக 78**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பக்கங்கங்களைக் கொண்ட அறிக்கையாக 2021.09.29 ஆம் திகதி கௌரவ இராஜாங்க அமைச்சருக்கு பேராசிரியர் கே.எல். ஜயரத்ன அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. UCSC நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வறிக்கைகளில் அடங்காத எந்தவொரு விடயமும் அப்போது காணப்பட்ட இராஜாங்க அமைச்சினால் ஒரு போதும் வழங்கவில்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
6.	**ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் – கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்**	கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றும் பெண் அலுவலர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வருட வெளிநாட்டுப் பயிற்சிக் காலப்பகுதியில் சுமார் 08 மாதங்களுக்கு அதிகமாக இலங்கையினுள் தங்கியிருந்து வெளிநாட்டுப் பயிற்சிக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளத்தைப் பெற்றுள்ளார். பயிற்சியின் இடையில் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் உரிய தனிமைப்படுத்தல் செயன்முறையின் பின்னர் அமைச்சுக்கு கடமைக்காக சமூகமளிக்க வேண்டியுள்ள போதிலும், குறித்த அலுவலர் 2020 மாச்சு மாதம் 28 ஆம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		திகதி தொடக்கம் 2020 ஓகத்து மாதம் 09 ஆம் திகதி வரையில் கடமைக்குச் சமூகமளிக்காது நாட்டில் தங்கியிருந்துள்ளார். குறித்த விடயம் தொடர்பில் அமைச்சுச் செயலாளரால் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த விதப்புரையின் அடிப்படையில் குறித்த பெண் அலுலவர் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக குழுவின்பொது தெரிய வந்ததுடன் குறித்த சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை 2023.10.10 ஆம் திகதிக்கு முன்னராக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு குழுவால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.
7.	**<u>தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்</u>** **<u>நோயாளர்களுக்குரிய உயர் தரத்திலான அதிசக்திவாய்ந்த கதிரியக்க உபகரணங்களை நிறுவுதல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை</u>**	இது தொடர்பில் சுகாதார அமைச்சினால் கணனி சமர்ப்பணமொன்று (Computer presentation) முன்வைக்கப்பட்டது. • அதற்கமைவாக இலங்கையில் புற்றுநோயின் காரணமாக இடம்பெறுகின்ற மரணங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதாகவும்,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		• புகையிலைப் பயன்பாடு மற்றும் புகை பிடித்தலைக் கட்டுப்படுத்தும் வழிமுறையினூடாக இலங்கையுலுள்ள சனத்தொகையில் ஆண்களிடம் அதிகமாகப் பரவியுள்ள வாய் மற்றும் நுரையீரல் புற்றுநோயைத் தடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாகவும், • சுகாதார அமைச்சு கொள்வனவு செய்துள்ள Linear Accelerator இயந்திரம் இன்றளவில் மஹரகம அபேக்சஷா வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளதுடன் கண்டியிலுள்ள இயந்திரத்திற்கு வளிச் சீராக்கி வசதிகள் இன்மையால் செயற்படுத்த முடியாமல் இருப்பதாகவும் குறித்த கணனிச் சமர்ப்பணத்தினூடாக குழுவிற்கு எடுத்துக்காட்டப்பட்டது.
கிழக்கு மாகாண சபை		

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்) **விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023 செத்தெம்பர் 21**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் ❖ பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ❖ கிழக்கு மாகாண சபை		
01	**<u>2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்</u>**	•விதப்புரை இல. 07 - “ ஆளுநரின் நம்பிக்கை பொறுப்பு நிதியக் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல்” குறித்த அறிக்கை குழுவிற்கு கிடைக்கவில்லையென்றும், ஆளுநரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் அவசர சந்தர்ப்பங்களின் போதான நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதும் குழுவின் போது தெரியவந்தது. குறித்த நிதியத்தை சட்ட ரீதியாக்குவதற்கான நியதிச் சட்டங்கள் வரையப்பட்டு வருவதுடன் குறிப்பிட்ட சில வருடங்களாக இருந்து மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளதால் நியதிச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சட்டத்தை அங்கீகரிப்பதற்கு முடியாமல் உள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) தெரிவித்தார். மாகாண சபையினைத் தாபிக்கும் வரையில், உரிய நியதிச் சட்டம், சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வேண்டியதான அனைத்து தேவைப்பாடுகளையும் நிறைவுசெய்து வைத்துக் கொள்ளுமாறு குழுவால் பி.க.அ./ க.அ. இற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2017.04.05 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக்கூட்டத்தில் குழுவால் வழங்கப்பட்ட விதப்புரை இல.12,13,14,15, மற்றும் 16 உடன் தொடர்புடைய எந்தவொரு அறிக்கைகளும் 06 வருடங்களுக்கும் அதிகமாகச் சென்றுள்ள போதிலும் குழுவிற்கு சமர்ப்பிக்காமை தொடர்பில் அதிருப்தியைத் தெரிவித்த குழு குறித்த அறிக்கைகள் அனைத்தையும் 2023 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ./க.அ.) இற்கு விதந்துரைக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கிழக்கு மாகாண பிரதமச் செயலாளரின் இல. EP/09/FR/01/2023/COPA/01 மற்றும் 2023.10.05 ஆம் திகதிய கடிதத்தினுடாக உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
02	**முத்திரைக் கட்டண அறவீடுகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்காமை**	ரூ. 349 மில்லியன்கள் பெறுமதியான முத்திரைக் கட்டண திரட்டுதல்களை 2 வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்காது மாகாண சபையில் வைத்துக் கொண்டமை தொடர்பில் கணக்காயவாளர் தலைமையதிபதியால் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதற்கு மேலதிகமாக மேலும் ரூ. 700 மில்லியன்கள் அளவான தொகையினை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யாது, நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்தமையால் சுமார் ரூ. 280 மில்லியன்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சுட்டிக் காட்டப்பட்டது. இது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் , இது அனைத்து மாகாண சபைகளுக்குமான பொதுவான நிலைமை என்பதால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டியுள்ள பணத்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தொகையினை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறையொன்றைத் துரிதமாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பி.க.அ. இற்கு குழுவால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.
03	<u>**அதிபர் வெற்றிடங்கள்**</u>	கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயங்களில் சுமார் 566 அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அம்பாறை மாவட்டத்திலுள்ள 2 கல்வி வலயங்களில் சுமார் 20 அதிபர்கள் மேலதிகமாக காணப்படுவதாகவும் குழுவின்போது தெரியவந்தது. இங்கு கருத்துத் தெரிவித்த போது கிழக்கு மாகாணத்தில் சுமார் 1531 அதிபர்கள் இருக்க வேண்டியுள்ளதுடன், இன்றளவில் சுமார் 837 அதிபர்கள் மாத்திரமே காணப்படுவதுடன் அதற்கமைவாக மிகையன்றி 691 அதிபர்களுக்கான வெற்றிடங்களே காணப்படுவதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். அதிபர்கள் இல்லாத பாடசாலைகளில் அப்பதவிக்குரிய கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		ஆசிரியர்களையும் (ACTING PRINCIPALS) அதிபர்களாக கணிப்பீடு செய்தமையால் மிகையாகக் காட்டப்பட்டு உள்ளதாகவும் பி.க.அ. /க.அ. மேலும் தெரிவித்தார். அதிபர்களின் பதவிக்குரிய கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு சிரேஷ்ட ஆசிரியர்கள், பதில் அதிபர்களாக (ACTING PRINCIPALS) நியமிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களை வெற்றிடம் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யவில்லையென்றும் குழு தெரிவித்தது. அதிபர் வெற்றிடங்களைப் நிரப்புவது தொடர்பில் கல்வி அமைச்சிடம் முறையான வேலைத்திட்டமொன்று காணப்படுவதன் முக்கியத்துவம் பற்றியும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.
04	**<u>அகழ்வு நடவடிக்கைகளுக்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினூடாக (GSMB) அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.</u>**	குச்சவெளி பிரதேசத்தில் குடியிருப்புக்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தால் தனியார் நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் குழுவால் வினவப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில், குடியிருப்புகள், அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தளங்கள் உட்பட ஏனைய பொது இடங்கள் அமைந்துள்ள நிலப்பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றுக்கு அகழ்வுப் பணிகளுக்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். இது தெடார்பில் பூர்வாங்கத் தெளிவுபடுத்தல் மேற்கொள்ளாமை காரணமாக பல்வேறு தரப்பினர்களிடம் இருந்தும் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டதால் மாகாண ஆளுநரால் அது தொடர்பில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடம் எழுத்து மூலமாக வினவியுள்ளதாகவும் பி.க.அ. /க.அ. தெரிவித்தார். அதன் பின்னர் சுற்றாடல் அமைச்சர் , மாகாண ஆளுநர், மாகாணப் பிரதம செயலாளர், குச்சவெளிப் பிரதேச செயலாளர் உட்பட்ட தரப்பினர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சென்றுள்ளதாகவும் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனமொன்றாகிய புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் தமது அமைச்சரையும் பிரதிவாதியாக்கி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் வியப்படைந்த குழு, குறித்த வழக்குத் தொடர்பில்(வழக்குத்தாக்கல் செய்வதற்கான காரணம், பிரதிவாதிகளின் பெயர்கள் மற்றும் பதவிகள், தற்போதைய நிலைமையை உள்ளடக்கிய) விரிவான அறிக்கையொன்றை 2023 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்க்குமாறு பி.க.அ./க.அ. இற்கு குழுவால் விதந்துரைக்கப்பட்டது. **கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் இல. EP/09/FR/01/2023/COPA/01 மற்றும் 2023.10.05 ஆம் திகதிய கடிதத்தினூடாக உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**
05	**<u>ஆசிரியர் வெற்றிடங்கள்</u>**	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கு அமைவாக, கிழக்கு மாகாணத்திலுள்ள 17 வலயங்களில் 11 வலயங்களில் சுமார் 1509 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படும்போது 6 வலயஙகளில் சுமார் 644 ஆசிரியர்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		மேலதிகமாக காணப்படுவதாகவும் குழுவால் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மாகாணத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவும் மேலதிகமாகவும் காணப்பட்ட போதிலும் தற்போது குறித்த நிலைமையானது 90% சமநிலைப்படுத்தி இப்பதாகவும் பி.க.அ. /க.அ. குழுவின் முன் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) இற்கென ஆசிரியர் ஒருவரேனும் ஆட்சேர்க்கப்படவில்லை என்றும் சுமார் 3608 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையிலும் 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் தமது மாகாணத்தை முதலாமிடத்திற்குக் கொண்டுவர முடிந்ததாகவும் மேலும் தெரிவித்தார். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கல்வித்துறையில் பெற்றுள்ள முன்னேற்றம் தொடர்பில் வாழ்த்துத் தெரிவித்த குழு ஆசிரியர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தரவுக் கட்டமைப்பொன்றை பெணிச் செல்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் வலியுறுத்தியது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
06	**<u>மல்வது சூரியபோடை வீதியில் இரண்டு பாலங்களை நிர்மாணிக்கும்போது இடம்பெற்றுள்ள நிதி ரீதியான நட்டம்</u>**	உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் மல்வது சூரியபோடை வீதியில் இரண்டு பாலங்களை நிர்மாணிப்பது தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பான நியாயசபை செயன்முறையின் போது நட்டஈடாக ரூ. 40 மில்லியன்களும் தாமதக் கட்டணமாக ரூ. 37.8 மில்லியன்களுமாக ரூ. 77.8 மில்லியன்களைச் செலுத்தி இணக்கப்பாட்டை எட்டக்கூடியதாக இருந்த போதிலும் தீர்ப்பாயச் செயன்முறைக்குச் சென்றமையால் ரூ. 150 மில்லியன்கள் நட்ட ஈடாகச் செலுத்தவேண்டி ஏற்றபட்டதால் மாகாண சபைக்கு ரூ.72.2 மில்லியன்கள் நட்டம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் குழுவின் விஷேட கவனம் செலுத்தப்பட்டது. மேற்படி முறுகல் நிலையை தீர்ப்பாயத்திற்கு ஆற்றுப்படுத்தியதன் பின்னர் ஒப்பந்தக்கார நிறுவனத்திற்கு நட்டஈடாகச் செலுத்துவதற்கு இணங்கிய தொகை தொடர்பில் இரு தரப்பினர்களும் திருப்தியடையாததால் மீண்டும் தீர்ப்பாயச் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதாகவும் இறுதியாக ரூ.150 மில்லியன்களைச் செலுத்தி குறித்த பிரச்சினை தொடர்பில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும் பி.க.அ. மேலும் தெரிவித்தார். அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக, மாகாண சபையின் நிதி நிலைமையினையும் கவனத்திற் கொண்டு மாகாண சபையின் 2021 ஆம் ஆண்டுக்குரிய செலவு மதிப்பீட்டினூடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டை அல்லது மாகாண சபையின் வருமானத்தைப் பயன்படுத்தி உரிய நிதி ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்துகொள்ளுமாறு குறித்த நட்ட ஈட்டைச் செலுத்துவது தொடர்பில் பொதுத் திறைசேரியின் விதந்துரைப்பாக உள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. பொதுத் திறைசேரியினால் விதந்துரைக்கப்பட்டவாறு குறித்த நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்த குழு இது தேவையற்ற செலவாகுமெனவும் முடிவு செய்தது. குறித்த சம்பவம் தொடர்பில் ஊழியர்கள் யாதேனும் தவறு செய்திருப்பின் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்திய குழு,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		குறித்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு பிரதிச் செயலாளர் ஒருவரின் கீழ் குழுவொன்றை நியமித்து குறித்த குழு அறிக்கையை 2023 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்க்குமாறு பி.க.அ. /க.அ. இற்கு விதந்துரைத்தது. **கிழக்கு மாகாண பிரதமச் செயலாளரின் இல. EP/09/FR/01/2023/COPA/01 மற்றும் 2023.10.05 ஆம் திகதிய கடிதத்தினூடாக குறித்த அறிக்கைகள் சமர்க்கப்பட்டுள்ளன.**
07	**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கான பங்களிப்புத் தொகை செலுத்துகையில் சேர்பெறுமதி வரி (VAT) அறவிடப்பட்டமை.**	பாதுகாப்புச் சேவைகள் மற்றும் துப்பரவேற்பாட்டுச் சேவைகள் தொடர்பில் உடன்படிக்கை செய்துள்ள ஒப்பந்தகார கம்பனிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களில் பதிவு செய்துள்ளனவா என்பது பற்றி மதிப்பீடு செய்யாது மாகாண சபையால் குறித்த கம்பனிகளுக்கு 2020.05.01 தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரையில் ரூபா. 9.04 மில்லியன்களை பங்களிப்புத் தொகையாக செலுத்தியுள்ளமை மற்றும் உரிய நன்மைகள் குறித்த பணியாளர்களுக்குக் கிடைக்காமை தொடர்பிலும் குழு தனது மிகுந்த கவனத்தைச் செலுத்தியது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		<u>விதப்புரை</u> சம்பந்தப்பட்ட இரண்டு கம்பனிகளையும் அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடி ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துவதற்கு அறிவிக்குமாறும் அவ்வாறு இல்லாவிடின், மேற்படி இரண்டு கம்பனிகளுக்கும் மாகாண சபையால் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகையிலிருந்து உரிய பங்களிப்புத் தொகையினைச் செலுத்துமாறும் அவ்வாறு முடியாவிடின் மேற்படி கம்பனிகளுடன் காணப்படுகின்ற உடன்படிக்கைகளை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கிய குழு, இது தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையொன்றை 2023 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னராக குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் பி.க.அ./க.அ. இற்கு விதந்துரைத்தது. **கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் EP/09/FR/01/2023/COPA/01 மற்றும் 2023.10.05 ஆம் திகதிய**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கடிதத்தினூடாக குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியங்களுக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்புத் தொகைக்கு சுமார் ரூ. 6.3 மில்லியன்கள் மேலதிக தொகையாக சேர்பெறுமதி வரியாகச் (VAT) செலுத்தியுள்ளதாக இதன்போது தெரியவந்தது. இது தொடர்பில் குழுவால் விரிவாக விடயங்கள் வினவப்பட்டதுடன், 2023 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னராக இது தொடர்பான அறிக்கையினை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./ க.அ. இற்கு விதந்துரைக்கப்பட்டது. **கிழக்கு மாகாணப் பிரதமச் செயலாளரின் EP/09/FR/01/2023/COPA/01 மற்றும் 2023.10.05 ஆம் திகதிய கடிதத்தினூடாக குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
08	**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடத்துத்தல்</u>**	மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்களால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுகின்றனவா என குழு வினவியது. பல நிறுவனங்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கணக்காய்வுக் குழுக் கூட்டங்களைக் கூட்டவில்லை எனவும், மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் கடந்த பல ஆண்டுகளாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒரு கூட்டத்தைக்கூட நடத்தவில்லை என குழுவில் வெளிக்கொணரப்பட்டது. உள்ளூராட்சி நிறுவனங்களால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதாகவும், இதனைத்தவிர காலாண்டுக்கு ஒருமுறை மாகாண சபையினால் நடத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களும் அழைக்கப்படுவதாகவும் பி.க.அ/க.அ. இங்கு தெரிவித்தார். அனைத்து நிறுவனங்களையும் அமைச்சுக்கு அழைத்து கூட்டங்களை நடத்துவதன் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியாதெனவும், குறித்த நிறுவனங்களுக்குச் சென்று கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதன் மூலம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குழு சுட்டிக்காட்டியது. இது தொடர்பில், பிரதமச் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டு, முனைப்புடன் தலையிட வேண்டுமெனவும், அடுத்த ஆண்டு குழுக் கூட்டத்திற்கு அழைக்கும் போது இந்த நிலைமை சீர்செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது. தங்கள் நிறுவனங்களின் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் தனித்தனியே நடத்தப்பட வேண்டும் என இக்கூட்டத்தில் ZOOM தொழில்நுட்பம் ஊடாக இணைந்துகொண்ட அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கிய குழுவானது, கூட்டங்களை ஒருங்கிணைக்கும் முழுப் பொறுப்பும் தலைமைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்படுவதாக தெரிவித்தது.
09	**<u>அட்டாளைச்சேனை வைத்தியசாலைத் தொகுதி பயன்படுத்தப்படாமல் 2 ஆண்டுகளாக கைவிடப்பட்டுள்ளமை</u>**	ரூ.81 மில்லியன் செலவில் 2021 ஆம் ஆண்டு மே மாதம் கட்டி முடிக்கப்பட்ட அட்டாளைச்சேனை வைத்தியசாலை தொகுதி எவ்வித உபயோகமும் இன்றி 2 வருடங்களாக கைவிடப்பட்டுள்ளமை குறித்தும், கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள் குறித்தும் குழு கேள்வி எழுப்பியது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அட்டாளைச்சேனை வைத்தியசாலையின் கட்டிட நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள போதிலும் மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்த பி.க.அ/க.அ., இன்னும் சில வாரங்களில் விநியோகம் கிடைக்குமெனவும், அதன் பின்னர் இங்கு கடமைகளை ஆரம்பிக்க முடியும் எனவும் அறிவித்தார்.
10	**வாகன பராமரிப்பு**	மாகாண சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படாமல், பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் பாவனைக்கு உகந்தவை அல்லவென அகற்றப்பட்டதன் பின்னர் அல்லது ஏலவிற்பனைக்கு விடப்பட்டதன் பின்னர் குறித்த வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்படாமை காரணமாக இவ்வாகனங்களின் உரிமையானது மாகாண சபையின் பெயரில் உள்ளதாக சுட்டிக்காட்டிய குழு, வாகனங்கள் ஏலம் விடப்பட்டால் அல்லது பாவனைக்கு உகந்தவை அல்லவென அகற்றப்பட்ட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பின்னர் உடனடியாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவித்து, இவ்வாகனங்களின் பதிவை இரத்துச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என அறிவுறுத்தியது. மாகாண சபையால் ஏலம் விடப்பட்ட வாகனங்கள் பற்றிய ஆவணத்தை 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 05ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது. **கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் EP/09/FR/01/2023/COPA/01 ஆம் இலக்க மற்றும் 05.10.2023 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** இதனைத்தவிர, 9 மாகாண சபைகளில் உள்ள கடந்த 10 ஆண்டுகளில் ஏலம் விடப்பட்ட மற்றும் பாவனைக்கு உகந்தவை அல்லவென அகற்றப்பட்ட வாகனங்களின் பட்டியல் 2023.12.29 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென, பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது. **பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/6/7/4/EP ஆம் இலக்க மற்றும் 2023.11.23 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
11	**<u>பிரதமச் செயலாளர் அலுவலகத்துக்கு கட்டிடம் நிர்மாணிப்பதற்கு ரூ. 150 மில்லியனுக்கும் அதிகமான பணம் செலுத்தப்பட்ட போதிலும், கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் இதுவரை முடிக்கப்படாமை</u>**	கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தினால் ரூ. 150 மில்லியனுக்கும் அதிகமான பணம் செலுத்தப்பட்டபோதிலும் இதுவரை கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என குழுவில் வெளிக்கொணரப்பட்டது. இக் கட்டிடமானது பிரதமச் செயலாளர் அலுவலகத்திற்கு மட்டுமின்றி பல நிறுவனங்களை நிறுவுவதற்காகவும் வடிவமைக்கப்பட்ட கட்டிடமென பி.க.அ/க.அ. இங்கு குறிப்பிட்டார். பல்வேறு காரணங்களால் இக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை திட்டமிட்ட திகதியில் பூர்த்தி செய்யமுடியவில்லை என தெரிவித்த பி.க.அ/க.அ., தற்போது, இரண்டு மாடிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய நிர்மாணப் பணிகளில் 75% நிறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். எனினும், மூன்றாவது மற்றும் நான்காவது மாடிகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய மேலும் சுமார் ரூ. 164 மில்லியன் தேவைப்படுவதாகவும், இதற்கான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் அடுத்த ஆண்டு அனைத்து நிர்மாணப் பணிகளையும் நிறைவுச் செய்ய முடியுமெனவும் பி.க.அ/க.அ. நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் தொல்பொருள் மரபுரிமைகளின் முகாமைத்துவம் பற்றிய செயலாற்றுகை மதிப்பீடு – இரண்டாம் கூட்டம்

(கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசாரணை)

விசாரணை செய்யப்பட்ட திகதி –2023 ஒக்டோபர் 03

அழைக்கப்பட்ட நிறுவனங்கள்-

- ❖ புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
- ❖ தொல்பொருளியல் திணைக்களம்
- ❖ தேசிய நூதனசாலை திணைக்களம்
- ❖ தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்
- ❖ மத்திய கலாசார நிதியம்
- ❖ வன பாதுகாப்புத் திணைக்களம்
- ❖ வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- ❖ புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
- ❖ இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</th></tr>
<tr><td colspan="3">❖ தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனம்</td></tr>
<tr><td>1.</td><td>தொல்பொருளியல் திணைக்களத்தில் நிலவும் நிறைவேற்றுத்தர பதவிகளுக்கான வெற்றிடங்கள் குறித்து குழு கவனம் செலுத்தியது. இங்கு, 27 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், இவ்வெற்றிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட திகதி தொடக்கம் வெற்றிடங்கள் தொடர்ந்து இருந்துவருவதாக குழுவில் வெளியானது.</td><td>ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பாக நிறுவனத்தின் ஊழியர்கள் குழுவொன்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கு தொடர்ந்துள்ளமையால் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு தடையாக இருப்பதாக அமைச்சின் பி.க.அ/க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார். குறித்த நிறைவேற்றுத் தர பதவிகளுக்கு விண்ணப்பிக்க அந்த அதிகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குமாறு இந்த வழக்கின் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>2.</td><td><u>தொல்பொருளியல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவி வெற்றிடமாக காணப்படுதல்</u></td><td>தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 வெளியிடப்பட்டதையடுத்து குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக பகிரங்க சேவைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதாகவும், நிதி,</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லையெனவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ தெரிவித்தார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இதற்கான அதிகாரம் கிடைத்துள்ளதாகவும் குறித்த பதவி வெற்றிடங்களுக்கான அங்கீகாரம் இந்த வாரத்தில் பெற்றுக்கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். **<u>விதப்புரை</u>** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொண்ட பின்னர், திணைக்களத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து 2023.10.10 ஆம் திகதியளவில் குழுவிற்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர்/கணக்கீட்டு அலுவலர் குழுவிற்கு விதப்புரை வழங்கியுள்ளார். **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.**
3.	**<u>தொல்பொருட்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல் மற்றும் பாதுகாத்தல்</u>**	தற்போது நாடு முழுவதும் 5664 தொல்பொருள் இடங்கள் அடையாளம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 2793 இடங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார். தொல்பொருளியல் சட்டத்தின்படி, 1815 ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதிக்கு முன் இருந்த புராதனப் பொருட்கள் அனைத்தும் தொல்பொருட்களாக கருதப்படுவதாகவும், அவற்றை விசேடமாக வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடத்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். __விதப்புரை__ நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்காக மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள்/கட்டமைப்புகளையும் இணைத்துக் கொண்டு வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறும் இதுவரை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படாத தொல்பொருட்களை வெளியிடுவதற்கு முறையொன்றை தயாரிக்குமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ.க்கு குழு விதப்புரை வழங்கியது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.**
4.	__**நாட்டில் உள்ள தொல்பொருள் இடங்களை**__	இது சம்பந்தமாக, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்தில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>வரைபடமாக்கலும் இணையதளத்தில் வெளியிடுதலும்.</u>	குறிப்பிடப்பட்டுள்ள திகதி குறித்து திருப்தி அடைய முடியாதெனவும் பொறுப்பான அமைச்சரினதும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மத்திய கலாசார நிதியம் போன்ற ஏனைய தொடர்புடைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு, தாமாக முன்வருகின்ற துறைசார்ந்த நிபுணர்களின் ஆதரவையும் ஆலோசனையையும் பெற்றுக்கொண்டு, சரியான தரவு அமைப்பைத் தயாரித்து, நாட்டில் உள்ள அனைத்து தொல்பொருள் தளங்களையும் வரைபடமாக்குதல் மற்றும் இவற்றை இணையதளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இதற்குத் தேவையான நிதி மற்றும் குறித்த காலப்பகுதி குறிப்பிடப்பட்ட செயல்பாட்டுத் திட்டத்தினையும் அதன் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்பரை வழங்கியது. **<u>விதப்புரை</u>** தகவல் தொழில்நுட்ப சிக்கல்களுக்கு (IT) தொடர்புடைய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பல்கலைக்கழகங்களுடன் கலந்தாலோசித்து தேவையான ஒத்துழைப்பை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு பி.க.அ/க.அ.கு குழு அறிவுறுத்தல் வழங்கியது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டது.**
5.	**<u>கடல்சார் தொல்பொருட்களை வரைபடமாக்கல்.</u>**	தொல்பொருள் இடங்களை வரைபடமாக்குவதற்கு தொல்பொருளியல் திணைக்களம் பயன்படுத்தும் மென்பொருளானது விலை உயர்ந்ததெனவும், இதற்கு பயிற்சி பெற்ற மனித வளம் தேவை எனவும், கடல்சார் தொல்பொருட்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு பிறிதொரு மென்பொருளை தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டுள்ளதாகவும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவிடம் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இதில் 60% மூழ்கிய கப்பல்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இடம் பெற்றுள்ளதாகவும், மீதமுள்ள இடங்களில் இது தொடர்பான அடிப்படை தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், கப்பல் மூழ்கிய திகதி, மூழ்கியமைக்கான காரணம் மற்றும் மூழ்கிய இடத்திற்கு பொதுமக்கள் பிரவேசிக்க முடியுமா போன்ற தகவல்கள் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் என மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.
6.	**<u>கடல்சார் தொல்பொருட்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல்</u>**	கடல்சார் தொல்பொருட்கள் அசையும் தொல்பொருட்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தொல்பொருள் இடங்கள் மற்றும் தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டாலும், கடலில் மூழ்கிய தொல்பொருட்கள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுவதில்லை எனவும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள கடல்சார்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தொல்பொருட்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி கண்டறியுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது.
7.	**<u>இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ள கடல்சார் தொல்பொருள் இடங்களை பிரவேசிப்பதற்கான பாதையை காட்சிப்படுத்தல்.</u>**	**<u>விதப்புரை</u>** இலங்கையைச் சுற்றியுள்ள கடல்சார் இடங்களை அண்மித்த சுழியோடும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்கக்கூடிய இடங்களின் பெயர்களை குறிப்பிட்டு, அங்கு செல்லக்கூடிய தரைவழிப்பாதைகளை இவ்வரைபடத்தில் சேர்க்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது.
8.	**<u>கடல்சார் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான சேவை வசதிகளை வழங்குவது தொடர்பில் குழு வினவியது.</u>**	ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அபிவிருத்தித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தற்சமயம் அதன் பணிகள் 60%-70% வரை நிறைவடைந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். இதன் எஞ்சிய பகுதியை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இந்த வருடத்தில் பூர்த்தி செய்ய முடியும் எனவும், இம்மாத இறுதிக்குள் 13 பிரிவுகளின் கீழ் நீர்நிலைசார் சுற்றுலாத் துறைக்கான பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட எதிர்ப்பார்ப்பதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.
9.	**<u>தொல்பொருள் பற்றிய தேசிய கொள்கையைத் திருத்துதல்</u>**	தேசிய தொல்பொருளியல் கொள்கை திருத்தம் தொடர்பான குறிப்பு விதிமுறைகள் (Terms of reference) தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சின் பி.க.அ/க.அ தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தொல்பொருளியல் தேசியக் கொள்கையின் திருத்தம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் (TOR) உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் தேசியக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய நிறுவனங்களை அழைத்து அவர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் 2023 நவம்பர் 03 ஆம் திகதியளவில் இது தொடர்பான அறிக்கையை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.**
10.	சுழியோடிகளுக்கு காப்புறுதி பெற்றுக்கொடுப்பது தொடர்பாக 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் குழு வழங்கிய விதப்புரைகள் குறித்து குழு வினவியது.	குழுவின் விதப்புரைகளின்படி காப்புறுதியைப் பெறுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், செலிங்கோ காப்புறுதி நிறுவனம் மட்டும் உள்நாட்டு சுழியோடிகளுக்கு காப்புறுதி வழங்க இணங்கியதாகவும், வெளிநாட்டு சுழியோடிகளுக்கான காப்புறுதியைப் பெறுவதற்கான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைச்சின் பி.க.அ/க.அ. குழுவிற்கு தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** மேலே குறிப்பிட்டவாறு சுழியோடிகளுக்கு ஆயுள் காப்புறுதி பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ.கு. குழு அறிவுறுத்தல்களை வழங்கியது.
11.	முடிவுகளை எடுக்கும் போது தொல்பொருளியல் ஆலோசனைக் குழு மற்றும் தொல்பொருளியல் தொடர்பான பிற நிறுவனங்களில் நிறுவப்பட்ட தொடர்புடைய சபைகள்/குழுக்களுக்கும் இடையே சரியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பொறிமுறை இல்லாமை குறித்து 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுக் கூட்டத்தில் கவனத்திற்குக்	தொல்பொருளியல் தொடர்பில் செயற்படும் அனைத்து நிறுவனங்களையும் இணைத்து தொல்பொருள் வழிநடத்தல் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும் என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	கொண்டுவரப்பட்டதுடன், இக்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகள் பற்றி குழு வினவியது. இது தொடர்பில் மேற்கூறிய திகதியில் அரசாங்கக் கணக்குக் குழு வழங்கிய விதப்புரைகளின்படி வேலைத்திட்டமும் தயாரிக்கப்படவில்லை என அக்குழுவின் முன்னிலையில் தெரியவந்தது.	
12.	**<u>விதந்துரைக்கப்பட்ட உலக மரபுரிமைகள் பற்றிய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.</u>**	தற்போது, உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு யுனெஸ்கோவிற்கு (UNESCO) முன்மொழிவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 10 இடங்கள் தொடர்பில் நிர்வாக சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அந்த இடங்களுக்குரிய அறிக்கைகள் தனித்தனியாக தயாரிக்கப்பட வேண்டும் எனவும், இந்த நடைமுறைகளுக்குத் தேவையான ஆளணி தொல்பொருளியல் திணைக்களத்திடம் இல்லாமையினால் இந்த சேவையை வேறொரு நிறுவனத்திடமிருந்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு யுனெஸ்கோவிற்கு முன்மொழிவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் வரைவினை யுனெஸ்கோவிற்கு அனுப்பும் வரையிலான நடவடிக்கைகள், அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் குறிப்பிட்ட திகதிகள் (காலவரையறை) அடங்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. குழு விதப்புரை வழங்கியது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.**
13.	**<u>தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை</u>**	தற்போது இது தொடர்பில் கோப்புகளில் உள்ளடக்கப்பட்ட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>மேற்கொள்ளல்/கண்காணித்தல், பாதுகாப்பு மற்றும் தரவுகளை சேமித்தல்.</u> இது தொடர்பாக, 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுக் கூட்டத்தில், குழு வழங்கிய விதப்புரைகள் குறித்து, குழு வினவியது.	தகவல்கள் அடங்கிய அகழ்வாராய்ச்சி இடங்களின் பட்டியல் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், இந்த அகழ்வாராய்ச்சிகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு அகழ்வாராய்ச்சி அறிக்கையையும் ஆராய வேண்டுமெனவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் தொடர்பான தகவல்கள் அதாவது அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள், அந்த அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கிடைத்த கண்டுபிடிப்புகள் மற்றும் அவற்றின் சாதக, பாதக தன்மை, அகழ்வாராய்ச்சிகள் தொடர வேண்டுமா என்பது, அகழ்வாராய்ச்சிகள் செய்யப்பட வேண்டிய வேறு முக்கியமான இடங்கள் யாவை போன்ற தகவல்களை ஒரு தரவு கட்டமைப்பில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அமைச்சின் பி.க.அ/க.அ.கு. குழு விதப்புரை செய்துள்ளது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.**
14.	**<u>அத்தனகல்ல பாதைப் படகுச் சேவையைப் பாதுகாத்தல்</u>**	இந்த பாதைப் படகில் சில பகுதிகளின் பாதுகாப்பு வரம்பு கடந்துள்ள நிலையில் இருப்பதாகவும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு 8 வழிமுறைகள் கொண்ட செயல்திட்டத்தை முன்வைத்துள்ளதாகவும், தற்போது இதில் 5 வழிமுறைகள் நிறைவடைந்துள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. அடுத்த 3 வழிமுறைகளுக்கு, மத்திய கலாசார நிதியம் மற்றும் தேசிய மாதிரி உருவமைப்பு பாடசாலையுடன் இணைந்து செயல்படுவதற்கான மதிப்பீடு தற்சமயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்நடவடிக்கைகளுக்கு தொல்பொருளியல் ஆலோசனைக்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		குழுவின் அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** படகுச் சேவையினை பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு விசேட கவனத்துடன் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது.
15.	**<u>தொல்பொருட்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துதல்</u>** தொடர்பாக, 2023.05.24 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில், குழு வழங்கிய விதப்புரைகளின் படி வேலைத்திட்டமொன்றை	இதன் கீழ் தற்போது ஜப்பானிய KOIKA நிதி உதவித் திட்டத்தில் இருந்து பெறப்படவுள்ள நிதியுதவியின் அடிப்படையில் சீகிரியாவின் தொல்பொருட்களை டிஜிட்டல் மயமாக்கல்/முப்பரிமாண கட்டமைப்புகளை தயாரிப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	குழுவிற்கு பெற்றுக்கொடுக்காமை குறித்து குழு வினவியது.	
16.	**<u>வடகிழக்கிலுள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாத்தல்</u>**	**<u>விதப்புரை</u>** கணக்காய்வு வினவல்களின் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் அமைந்துள்ள அனைத்து தொல்பொருள் இடங்களும் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளனவா என்பது குறித்த அறிக்கை 2023 நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன்பதாகவும்; மற்றும் அந்த இடங்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்கள்/ பிரச்சினைகள் இருப்பின் அவை குறித்த அறிக்கையை 2024 ஜனவரி 7 ஆம் திகதிக்கு முன்பதாகவும் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது. **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் MNH/AD/11/ARC/01 ஆம் இலக்க**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		மற்றும் 2024.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் பதில் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் **(2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி நடைபெற்ற நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் மீதான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அமர்வில் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் தற்போதைய நிலைமை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகை)** **விசாரணை செய்யப்பட்ட திகதி – 2023 ஒக்டோபர் 04**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு ❖ நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு ❖ பாதுகாப்பு அமைச்சு ❖ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ❖ இலங்கை பொலிஸ் திணைக்களம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை		
01	**<u>2023 ஜூலை 04 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கிய விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.</u>**	(i) 2023.07.19ஆம் திகதி திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும், C தொகுதியைச் சேர்ந்த திணைக்களமாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	(i) 2023 ஜூன் 25 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளக கணக்காய்வு பிரிவைப் நிறுவி குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்தல். (ii) தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து, United Nations Convention on the Rights of Child (UNCRC) தரவுக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் திகதி அடங்கிய அறிக்கையை 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பித்தல். (iii) சிறுவர்கள் கட்டாயம் பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டுமென்ற விதப்புரையை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்றை	சேவைகள் திணைக்களத்தின் பணியாட்தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி கிடையாதெனவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) தெரிவித்தார். மேலும் நி.பி133. (ஆ) படி அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.08.07 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை DMA/01-2019 இன் படி நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு அதன் முதலாவது கூட்டம் 2023.07.19 ஆம் திகதி நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	த் தயாரித்து 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதிக்கு முன்னர் அது பற்றிய அறிக்கையை குழுவிற்குச் சமர்ப்பித்தல். (iv) சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தமாக ஒருவரை நியமித்தல். (v) சிறுவர்கள் சம்பந்தமான பிரச்சினைகள்/முறைப்பாடுகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொழிற்பாட்டுக் குழுக்களை நடைமுறைப்படுத்தும் முறை மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மாகாண நன்னடத்தை திணைக்களம் ஆகிய	(ii) 2023.08.06 ஆம் திகதி இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் (ICTA) இத்தரவுக் கட்டமைப்பின் சேவை வழங்குநராக (hosting) தொழிற்படுவது சிரமமென கடித மூலம் அறிவிக்கப்பட்டமையால் இதற்குத் தீர்வாக Save the Children நிறுவனத்தினால் இத்தரவுக் கட்டமைப்பின் சேவை வழங்குநராக தொழிற்படுவதற்கு (hosting) நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் இதற்கு அமைவாக அரசாங்க அனுமதி பெற்ற நிறுவனமொன்றிடமிருந்து விலை மனுவைக் கோரி சேவை வழங்குநர் (hosting) தொடர்பான வசதிகளைப் பெற்று கட்டமைப்பில் காணப்படும் ஏனைய சிக்கல்களையும் தீர்த்து உரிய கால வரையறைக்குள் தரவுக் கட்டமைப்பை இயக்குவதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் பி.க.அ/க.அ. தெரிவித்தார். மேலும், 2023.11.10 ஆம் திகதியளவில் பெற்றுக்கொடுக்க வேண்டிய இலங்கைக்கான ஐக்கிய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் முறையியல் அடங்கிய விரிவான அறிக்கையை ஆகஸ்ட் 08 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பித்தல். (vi) நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் உட்பட தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களான தொழில் திணைக்களம், இலங்கை பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) மற்றும் பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் தேசிய தரவுக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்த 2023.08.08 ஆம் திகதிக்கு முன்னர்	நாடுகள் சபையின் சிறுவர் சாசனத்தின் (UNCRC) இடைக்கால அறிக்கை எழுதப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். எனினும், 2021 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்படும் இந்நடைமுறையை சிறப்பாக நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டமை பற்றியும் இத்தரவுக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் போது அதன் வசதிகள் குறித்து கவனம் செலுத்தாமை தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்ட குழு இந்த நடைமுறையை நிறைவு செய்து அது தொடர்பில் அறிக்கையொன்றை 2023.11.04 ஆம் திகதி குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறு பி.க.அ/க.அ.கு விதப்புரை செய்தது. **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.11.03 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தரவுக் கட்டமைப்பில் குறித்த மாற்றங்களுடன் 2023.12.31 ஆம் திகதியளவில் அனைத்து நிறுவனங்களும் தரவுகளை**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	இது பற்றி குழுவிற்கு அடிப்படை அறிக்கையையும் அடுத்ததாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அடங்கிய அறிக்கையையும் 2023.10.04 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல். (vii) சிறுவர் சம்பந்தமாக தத்தெடுத்தல் கட்டளைச் சட்டம் உட்பட ஏனைய சட்டங்களை காலத்தின் தேவைக்கேற்ப திருத்தங்களை துரிதப்படுத்தி நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இவ்விடயம் தொடர்பாக திகதிகள் அடங்கிய அறிக்கையை 2023 ஆகஸ்ட் 08 ஆம்	**உள்ளிட்டு கட்டமைப்பை முழுமையாக இயங்கும் நிலைக்கு கொண்டுவரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.** (iii) கட்டாயம் கல்வி கற்ற வேண்டிய சிறுவர்கள் பாடசாலை செல்லாமை பற்றி கல்வி அமைச்சினால் புதுப்பிக்கப்பட்ட தரவுகளை பேண வேண்டுமெனவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர்களுக்கான கல்வியை உறுதிப்படுத்துதல் தொடர்பில் தேசிய கொள்கையை தயாரிக்க வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது. சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டத்தின் படி “சிறுவர்” என்ற பொருள்கோடலின் படி நிர்ணயிக்கப்பட்ட வயதெல்லை 16 இலிருந்து 18 வரை திருத்தப்பட்டிருந்த போதிலும் அதனை நடைமுறை ரீதியாக நன்னடத்தை செயற்பாடுகளின் போது அமுலாக்கும் போது திணைக்களம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.	மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். எதிர்காலத்தில் சிறுவர்கள் தொடர்பில் அமுலிலுள்ள பல சட்டங்களுக்குப் பதிலாக தனியொரு சட்டத்தினை அறிமுகப்படுத்துவதன் பொருட்டு அச்சட்டமூலம் சட்டமா அதிபரின் அவதானிப்புகளை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.08.07 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இது பற்றி சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளரினால் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் அவ்வமைச்சின் முடிவு சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.** **அக்கடிதத்தின் படி,**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இச்செயற்பாடுகளுக்கு ஒன்றிணைந்த அணுகுமுறையின் கீழ் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இவ்வேலைத்திட்டத்தை வலுவூட்டுவதற்கு கல்வி அமைச்சுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (iv) தற்போது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரியிருப்பதாகவும் அனுமதி விரைவில் கிடைத்தவுடன் ஆர்சேர்ப்பு மேற்கொள்ளப்படுமெனவும் பி.க.அ. தெரிவித்தார். (v) இது பற்றி மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மாகாண நன்னடத்தை திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது சிறுவர்களை நிறுவனங்களின் பொறுப்பில் சேர்த்தல் தொடர்பில் உரிய செயற்பாடுகளை மாகாண நன்னடத்தை திணைக்களத்தினாலும் “தடுத்தல்” என்ற பிரிவிற்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மேற்கொள்வதற்கும் சிறுவர்கள் தொடர்பான சட்ட நிலைமை, பாதுகாப்பு, பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் பற்றிய அலுவல்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்வதற்கும் இங்கு இணங்கப்பட்டது. மாகாண நன்னடத்தை விடயத்தினை ஒருங்கிணைப்புச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		செய்வதற்காக சட்டத்தை அமுலாக்குவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் பற்றி உரிய நீதிவான்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுத்தல் பற்றிய நிகழ்ச்சித்திட்டமொன்றையும் மாற்று பராமரிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தியுள்ளதாக க.அ. தெரிவித்தார். **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.11.15 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இத்தொழிற்பாட்டுக் குழுக்களை நடத்துவதற்குரியதாக நிகழ்ச்சி நிரலொன்று அமைச்சினால் மாகாண குழுக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாகாண பிரச்சினைகளை தேசிய மட்டத்தில் கலந்துரையாடுவதற்கு**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தேசிய தொழிற்பாட்டுக் குழுக் கூட்டம் 2023.11.21ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. (vi) நிறுவன தரவுக் கட்டமைப்பை தேசிய தரவுக் கட்டமைப்பு வரை மேம்படுத்தி பராமரித்தல் இதுவரையில் மேற்கொள்ளப்படாமை குறித்து குழு அதன் அதிருப்தியை வெளியிட்டது. தற்போது பயிற்சிக்கு முன்னதாக இரத்தினபுரி மாவட்டத்தில் இணையவழி முறையில் தரவுக் கட்டமைப்பு ஒத்திகையாக இயக்கப்படுவதாக க.அ தெரிவித்தார். மேலும் ஆரம்ப கட்டத்தில் தரவுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார். 2023.10.04ஆம் திகதிக்கு முன்னர் விதப்புரை செய்யப்பட்ட அறிக்கையை விரைவாக பெற்றுக்கொடுக்குமாறு குழு பி.க.அ/க.அ.கு விதப்புரை வழங்கியது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தேசிய தரவுக் கட்டமைப்பை நிறுவுவதற்குரிய திகதி அடங்கிய அறிக்கையை எதிர்வரும் காலங்களில் பெற்றுக்கொடுக்க இருப்பதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.08.07 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக, பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்கள் மற்றும் அனுமதியை பெற்றுக்கொண்ட பின்னர் தகவல் தொழில்நுட்பத்தில் தேர்ச்சிபெற்றவர்கள், ICTA மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றை இணைத்துக்கொண்டு இந்த தேசிய தரவுக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்து நிறுவுவதற்கு உரிய காலவரையறையுடன் கூடிய அறிக்கை எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் என அவர் தெரிவித்தார். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளரின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		2023.11.13 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிறுவன தரவுக் கட்டமைப்பை தேசிய தரவுக் கட்டமைப்பாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்திற்கான உத்தேசிக்கப்பட்ட காலச்சட்டகம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (vii) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதறாக ஒரு மாத கால அவகாசம் கோரப்பட்டதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பி.க.அ. தெரிவித்தார். இது தொடர்பில் மாகாண சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திடமிருந்தும் பிரதிநிதியொருவரை கலந்துகொள்ளச் செய்யுமாறும் இறுதி முன்னேற்றம் பற்றி திகதியுடன் கூடிய அறிக்கையை 2023.11.04ஆம் திகதிக்கு முன்னர்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறும் குழு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பி.க.அ/க.அ.கு விதப்புரை வழங்கியது. **நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் 2023.10.17 ஆம் திகதிய MOJ/L(1)/124/2022 மற்றும் MOJ/L(4)/563/2023 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திகதியுடன் கூடிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.** **சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி பற்றிய சட்டமூலம் 2024 ஜனவரி-பெப்ரவரியிலும் தத்தெடுத்தல் சட்டமூலம் 2024 ஏப்ரலிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
02	**பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள்**	நன்னடத்தைக்காக சேர்க்கப்படும் பாடசாலை செல்லாத 15-18 இடைப்பட்ட வயதெல்லையிலுள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>தேசிய நிலையத்தை நடத்திச் செல்லல்.</u>	பெண் பிள்ளைகளுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் இருந்த ஒரே ஒரு தேசிய நிலையமான பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம் 2021 மே 12 ஆம் திகதி கொவிட் தொற்றுநோய் சிகிச்சை நிலையமாக பயன்படுத்தப்பட்டமையால் அந்நிலையத்தின் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருப்பதால் அந்நிலையத்தை பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதன் காரணமாக பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை தொடர்பில் குழு கவனம் செலுத்தியது. இந்த நிலையத்தை திருத்தியமைப்பதற்கு செலவின மதிப்பீடொன்றைத் தயாரித்து ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) சமர்ப்பித்து நிதியுதவி பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் ஒரு மாத காலத்திற்குள் திருத்தப் பணிகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் க.அ. தெரிவித்தார்.
03	**<u>மாகாண தொழிற்பாட்டு குழுக் கூட்டங்களை நடத்துதல்.</u>**	காலாண்டுப் பகுதியில் குறைந்தபட்சம் 1 தொழிற்பாட்டு குழுக் கூட்டத்தையாவது நடத்த

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வேண்டுமென்ற போதிலும் பெரும்பாலான மாகாணங்கள் இவ்விலக்கினை அடையாமல் இருப்பது குறித்து குழு அதிருப்தி வெளியிட்டது. இச்செயற்பாட்டு குழுக் கூட்டங்கள், குறித்த சுற்றறிக்கைகளின் படி முறையாக நடத்தப்பட வேண்டுமென அரசாங்க கணக்குக் குழுவின் அறிவித்தல் கடிதத்தை சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதமச் செயலாளர்களுக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குழு அறிவித்தது. 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் 9 மாகாணங்களிலும் தொழிற்பாட்டு குழுக் கூட்டங்களை நடத்த வேண்டுமெனவும் கூட்ட அறிக்கைகளை மாகாண ஆணையாளர்கள் குழுவிற்கு அனுப்ப வேண்டுமெனவும் குழு பி.க.அ/க.அ.கு விதப்புரை வழங்கியது. இக்குழுவில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இக்கூட்டத்திற்கு பொதுவான நிகழ்ச்சி நிரலை தயாரித்து சிறுவர்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் தீர்வுகளை கலந்துரையாடி அவை தொடர்பில் ஒவ்வொரு மாகாணத்தினதும் வேலைத்திட்டத்தை குறிப்பிட்டு 2023.11.15 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு 9 மாகாணங்களினதும் அறிக்கைகளை பெற்றுக்கொடுக்குமாறும் பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது. **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2023.11.15 ஆம் திகதிய PCC/2/2/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிக்கை வழங்கப்பட்டது.** அத்துடன், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சும் இதனை அறிவிக்க வேண்டுமென குழு பி.க.அ/க.அ.கு விதப்புரை வழங்கியது. இச்சுற்றறிக்கை மத்திய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருப்பதனால் இது

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பற்றி பின்னாய்வை மேற்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்தியது. மாகாண ஆணையாளர்களுக்கு இது பற்றி அறிவுறுத்தல் மற்றும் நினைவூட்டல் மேற்கொள்ளப்படவுள்ளதாக க.அ. தெரிவித்தார். மேலும், தேசிய தொழிற்பாட்டு குழுக் கூட்டங்களை முறைப்படி நடத்த வேண்டுமேன பி.க.அ/க.அ.கு குழு விதப்புரை வழங்கியது.
மதுவரித் திணைக்களம் ***(2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் தற்போதைய செயலாற்றுகையும்)*** **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2023 ஒக்டோபர் 05**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு ❖ மதுவரித் திணைக்களம்		
1.	**<u>மதுவரித் திணைக்களத்தில் செயற்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள RASED கணினித் தகவல் முறைமை</u>**	இன்றளவில் மதுவரித் திணைக்களத்தில் எந்தவொரு கணினித் தரவு முறைமையும் செயற்படுவதில்லை எனவும், கணினித் தரவு முறைமையை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைச் சேவையை (Consultancy)

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		மொரட்டுவை பல்கலைக் கழகத்தினூடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பி.க.அ/க.அ தெரிவித்தார். மேற்படி தரவு முறைமைக்கு 2022 ஆம் ஆண்டில் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இன்று வரையில் மேற்படி முறைமையினை செயற்படுத்த போதுமானளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் குழு தமது அதிருப்தியை வெளிப்படுத்தியது. __விதப்புரைகள்__ மேற்படி கணினித் தரவு முறைமையினை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய ஒவ்வொரு படிமுறைகள் (கேள்விமனுக் கோரல் உட்பட), அதற்காகச் செல்லும் காலம் மற்றும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையினை 2023.11.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு மதுவரித் திணைக்களத்திற்கு விதப்புரை செய்தது. **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		அமைச்சின் செயலாளரின் MF06/4/Excise/COPA/2023 ஆம் இலக்க மற்றும் 2023.11.07 ஆம் திகதிய கடிதம் மூலமாக மொரட்டுவை பல்கலைக் கழகத்திடமிருந்து ஆலோசனைச் சேவையை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும், அவர்களது ஆலோசனையின் பிரகாரம் முழுமையான செயற்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்ததன் பின்னர் அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் இது தொடர்பிலான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் இணை இலக்க மற்றும் 2024.01.04ஆம் திகதிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்து மொரட்டுவை பல்கலைக்கழகத்தினூடாக வழங்கப்பட்டிருந்த நிதி முன்மொழிவின் நிதி ரீதியான பெறுமதி மிக அதிகமாக இருந்தமையால் வேறொரு பல்கலைக்கழகத்தில் இருந்து ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு உரியதாக நிதி முன்மொழிவொன்றினைப் பெறுவதற்கு நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அதன்படி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் இருந்து ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்குரியதாக நிதி ரீதியான முன்மொழிவொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
2.	**போலி பாதுகாப்பு சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) பயன்படுத்தியமை**	போலி பாதுகாப்பு சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) பயன்படுத்தப்பட்டதன் மூலமாக அரசாங்கத்திற்கான வரிகள் கிடைக்காமை, சட்டம் மீறப்படுகின்றமை மற்றும் நுகர்வோர் உரிமைகள் மீறப்படுகின்றமை இடம்பெறுவதாகவும் குழு சுட்டிக்காட்டியது. **விதப்புரை** மதுபானத்தை உற்பத்தி செய்து விநியோகிக்கின்ற போது சில உற்பத்திச்சாலைகள் போத்தல்களில் உரிய சுட்டுத்துண்டுக்கு (ஸ்ரிக்கர்) பதிலாக போலி சுட்டுத்துண்டை (ஸ்ரிக்கர்) ஒட்டியமை தொடர்பில் மேற்படி உற்பத்திச்சாலைகளில் சேவையில் ஈடுபடுத்தியிருந்து இடமாற்றம் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட மதுவரித் திணைக்கள ஊழியர்களின் பெயர்ப்பட்டியல், இடமாற்றம் வழங்கப்பட்ட திகதி,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இடமாற்றம் வழங்கப்பட்ட இடம் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற இடம் என்பவை உள்ளடங்கிய அறிக்கையினை 2023.10.06ஆம் திகதி பி.ப. 12.00 மணிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு விதப்புரை செய்தது. மதுபான போத்தல்களில் போலி பாதுகாப்பு சுட்டுத்துண்டை (ஸ்ரிக்கர்) ஒட்டி விற்பனைக்காக விநியோகித்தமை தொடர்பில் விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் மதுபான உற்பத்தி நிலையத்தின் மதுவரி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறின்றேல் அதற்கெதிராக தீர்மானம் மேற்கொண்ட தரப்பினர் அதற்கு பொறுப்புக் கூற வேண்டுமெனவும் குழு மதுவரித் திணைக்களத்திற்கு விதப்புரை செய்தது. மதுவரித் திணைக்களத்தில் போதுமானளவு பணியாட்டொகுதியினர் இல்லையென்பது குழுவில் தெரிய வந்ததுடன் அவசியமான பணியாட்டொகுதியினரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு ஆலோசனை வழங்கியது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		மதுவரி ஆணையாளர் நாயகத்தின் ED/02/01 பாராளுமன்ற வினாக்கள் மற்றும் 2023.10.06ஆம் திகதிய கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மீண்டும் விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு குழு விதப்புரை வழங்கியிருந்த அதேவேளை அந்த அறிக்கையும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் ED/02/01 பாராளுமன்ற வினாக்கள் மற்றும் 2023.10.13ஆம் திகதிய கடிதம் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/4/Excise/COPA/2023 இலக்க மற்றும் 2024.01.04ஆம் திகதிய அறிக்கையினூடாக போலி பாதுகாப்பு சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இன்றளவில் மதுவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடம் வாக்குமூலம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. **மேலும், போலி சுட்டுத்துண்டுகளைக் கொண்ட உற்பத்திகள் காணப்பட்ட நிறுவனங்கள் தொடர்பிலான விசாரணைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட சபையினூடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மதுவரித் திணைக்களத்தில் போதுமானளவு பணியாட்டொகுதியினர் இல்லாத காரணத்தினால் பணியாட்டொகுதிக்கு அவசியமான தரப்பினரை இணைத்துக்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
3.	**<u>மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) வழங்கும் இந்திய நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம்</u>**	**<u>விதப்புரை</u>** இந்திய நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக நிறுவனம் அதனை மீறிய சந்தர்ப்பங்களும் மேற்படி ஒப்பந்தம் மூலமாக பயன்மிகு வகையில் பாதுகாப்பு சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) முகாமைத்துவ செயற்பாட்டினை பேணிச்செல்ல முடியாதென்பதனை அவதானித்த குழு மேற்படி சுட்டுத்துண்டு (ஸ்ரிக்கர்) செயற்பாடு தொடர்பாக அமைச்சு மற்றும் திணைக்களம் ஆகியன இணைந்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		குழுவொன்றினை அமைத்து விதப்புரைகளை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், உரிய விதப்புரைகள் அடங்கிய அறிக்கையொன்றினை (ஒப்பந்தத்தின் உடன்படிக்கைகள் மீறப்படாதிருப்பின் அது தொடர்பிலும் சுட்டிக்காட்டி) 2023.10.13 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ.கு விதப்புரை செய்தது. மேலும் இவ்வாறான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் போது சட்டத்துறை தலைமை அதிபதியின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் குழு சுட்டிக்காட்டியது. **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/4/Excise/COPA/2023 ஆம் இலக்க மற்றும் 2023.10.30 ஆம் திகதிய கடிதம் மூலமாக உரிய விதப்புரைகள் அடங்கிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 8 விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் டிஜிட்டல் குறியீட்டு முறைமையை சகல உள்ளூர் மதுபான உற்பத்திகளிலும்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பயன்படுத்துவது பொருத்தமானதெனவும், இன்றளவில் இடம்பெற்று வருகின்ற சகல விசாரணை நடவடிக்கைகளையும் துரிதமாக நிறைவு செய்து அரச வருமானத்தினைப் பாதுகாப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டமொன்றினை தலைமை முகாமைத்துவம் உருவாக்க வேண்டும் என்பதும் அதில் அடங்கியுள்ளது.
4.	**<u>மதுவரி மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இயந்திரங்களை உபயோகித்து போலி சுட்டுத்துண்டுகளுடன் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ள மதுபானங்களை அடையாளம் காணல்.</u>**	**<u>விதப்புரை</u>** இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி விற்பனை நிலையங்களில் மற்றும் உற்பத்திச் சாலைகளில் உள்ள மதுபான போத்தல்களில் போலி சுட்டுத்துண்டுகள் ஒட்டப்பட்டுள்ளதாவென பரிசோதித்து உரிய தகவல்களை (பரிசோதனை செய்த திகதி, நேரம், பரிசோதனை செய்த அளவு) செயலி (App) ஒன்றினூடாக கையடக்கத் தொலைபேசிக்கு பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றினை மதுவரி திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவினூடாக (IT Solution) தயாரித்து அதன் முன்னேற்றத்தினை 2023.10.15 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு அறிக்கையிடுமாறும், அவ்வாறு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெறப்படுகின்ற தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையினை 2023.10.31ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் ஒப்படைக்குமாறும் குழு மதுவரி திணைக்களத்திற்கு விதப்புரை செய்தது. அத்துடன் உற்பத்திச் சாலைகளில் உள்ள மதுவரி உத்தியோகத்தர்கள் 20 நிமிடங்களுக்கொரு தடவை உற்பத்திகளை பரிசோதனை செய்வதாக குழுவில் தெரிய வந்ததுடன் அவர்களிடமிருந்தும் அறிக்கைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு மதுவரி திணைக்களத்திற்கு விதப்புரை செய்தது. **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/4/Excise/COPA/2023 ஆம் இலக்க மற்றும் 2023.11.07 ஆம் திகதிய மற்றும் இணை இலக்கம் கொண்ட 2024.01.04ஆம் திகதிய கடிதங்கள் மூலமாக இன்றளவில் உரிய தகவல்களை வாட்ஸ்அப் குழுவொன்றினூடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், உரிய செயலியை (App) தயாரிக்கக் கூடிய தொழில்நுட்ப அறிவுடைய**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		உத்தியோகத்தர்கள் எவரும் திணைக்களத்தில் இல்லை என்பதால் நிதி அமைச்சின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
5.	**நிலுவை வரி செலுத்தாத மதுபான உற்பத்திச் சாலைகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்தல்**	2022.12.31ஆம் திகதிக்கு மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து ரூ.5,491,066,488/- என்ற நிலுவை வருமானத் தொகை மதுவரித் திணைக்களத்திற்கு அறவிடப்பட உள்ளதாக குழுவின் முன்னிலையில் தெரியவந்தது. அந்த நிலுவை வரித் தொகையில் அதிகளவான தொகையானது மேற்படி போலி மதுபான சுட்டுத்துண்டுகளை பயன்படுத்திய உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தே அறவிட வேண்டியுள்ளதாக பி.க.அ/க.அ தெரிவித்தார். இந்த மதுபான உற்பத்தி நிறுவனங்கள் மதுவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை வரிகள் காணப்படுவதால், உரிய நிலுவைத் தொகைகளை 2023.10.30 ஆம் திகதியளவில் செலுத்தி முடிக்குமாறும், அவ்வாறு செலுத்தாவிடின் மதுபான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		உரிமங்களை இரத்து செய்வதாகவும் குறித்த மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக பி.க.அ/க.அ தெரிவித்தார். அவ்வாறு நிலுவை வரியை செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை இரத்துச் செய்யுமாறு குழு விதப்புரை செய்த அதேவேளை, குறித்த நிலுவை வரித் தொகை, நிலுவை வரி செலுத்தாதுள்ள கால எல்லை, நிலுவை வரியின் பொருட்டு விதிக்கப்பட்ட தண்டப்பணம் மற்றும் வரி செலுத்துதல் தொடர்பில் அந்தந்த நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகள் மற்றும் நிலுவை வரி செலுத்தியதன் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையை 2023.11.15ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு மதுவரி திணைக்களத்திற்கு விதப்புரை செய்தது. **மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2023.11.15ஆம் திகதிய ED/11/2/COPA-2023 இலக்க கடிதம் மூலமாக 09 நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 4 நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		3 நிறுவனங்கள் தொடர்பில் வழக்குகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் 2024.01.04 ஆம் திகதிய மற்றும் MF06/4/Excise/COPA/2023 ஆம் இலக்க கடிதம் மூலமாக வரி செலுத்துதல் தொடர்பில் மற்றும் நிலுவை வரித் தவணை செலுத்தல்கள் தாமதமாதல் தொடர்பில் கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரை தெளிவுபடுத்தி அதற்கமைவாக கிடைக்கின்ற ஆலோசனைகளின் பிரகாரம் முடிந்தளவில் மேற்படி உற்பத்திச் சாலைகளை செயற்பாட்டு ரீதியில் பேணிச் செல்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரிகள் மற்றும் தாமதக் கட்டணங்களை உச்ச அளவில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
6.	<u>**நிலுவை வரி தவணைத் தொகையை செலுத்தாத உற்பத்தி நிறுவனமொன்று தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமை.**</u>	உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு மீள உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து நிலுவை வரித் தொகையாகிய ரூ.1,292,877,138/- மற்றும் தாமதக் கட்டணமாகிய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		ரூ.1,456,079,040/- அறவிடப்பட வேண்டியுள்ள நிலையில் மேற்படி நிறுவனமானது நிலுவை வரியை செலுத்தத் தவறியமை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை தொடர்பில் குழு மதுவரித் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பியது. மதுவரித் திணைக்களம் நிலுவை வரித்தொகையை தவறாக கணிப்பீடு செய்துள்ளதெனத் தெரிவித்து குறித்த உற்பத்தி நிறுவனம் திணைக்களத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வழக்கின் தீர்ப்பு கிடைத்தவுடன் அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் பி.க.அ/க.அ தெரிவித்தார்.
7.	**<u>கள்ளு உற்பத்தி மற்றும் கள்ளுக்கான வரி அறவிடல்</u>**	இலங்கை முழுவதும் செயற்கை கள்ளுற்பத்தி செய்யப்படுவதாகவும் செயற்கை கள்ளுற்பத்தியை அடையாளம் காண்பதற்காக ITI (Industrial Technology Institute) நிறுவனத்துடன் இணைந்து பரிசோதனையொன்றினை மேற்கொண்டு அறிக்கையொன்றினை வெளியிட்டதாகவும் மேற்படி பரிசோதனை பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இலங்கை கட்டளைகள் நிறுவனத்துடன் மீண்டும் ஒரு தடவை பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பி.க.அ/க.அ தெரிவித்தார். அத்துடன் மேற்படி பரிசோதனையின் இறுதியில் செயற்கை கள்ளு தொடர்பிலான தரப்படுத்தலை மேற்கொண்டு அதற்கமைவாக சட்டரீதியான அளவுகோல்களை உருவாக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது. இன்றளவில் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு மாதிரிகளைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் அறிக்கைகளுக்கமைவாக செயற்கை கள்ளு உற்பத்தி தொடர்பிலான தண்டப் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பி.க.அ/க.அ மேலும் தெளிவுபடுத்தினார். இலங்கை முழுவதும் உற்பத்தி செய்யப்படுகின்ற கள்ளு, வடிசாலைகள், போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளுற்பத்திச் சாலைகள், கள்ளுத் தவறணைகள் மற்றும் வினாகிரி உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படுவதாகவும் கள்ளுத் தவறணை வாடகை முறையின் கீழுள்ள தவறணைகள் தவிர்ந்த ஏனைய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இடங்களில் இருந்து கள்ளுக்கான வரியொன்றினை அறவிடுவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன்போது குறிப்பிடப்பட்டது. இன்றளவில் ஒரு லீட்டர் கள்ளுக்கு ரூ. 7.50 வரித்தொகையினை அறவிடுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ/க.அ தெரிவித்தார்.
8.	**மதுபானத்துக்கான வரி அதிகரித்தமையால் மதுபான உற்பத்தி குறைவடைந்தமை**	மதுபான வரிகள் அதிகரித்த காரணத்தால் மதுபான உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென்பதும், சட்ட விரோத விஷத்தன்மை கொண்ட மதுபான பாவனை அதிகரித்துள்ளதென்பதும் குழுவினால் அவதானிக்கப்பட்டது. மதுபான விற்பனை நிலையங்களை நிறுவுகின்ற போது ஒன்றுக்கொன்று அண்மித்ததாக நிறுவுதல் காரணமாக விற்பனை வீழ்ச்சியடையக் கூடுமெனவும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் மதுவரித் திணைக்களத்திற்கு குழு அறிவுறுத்தல் வழங்கியது.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்		

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
(2019, 2020, 2021 ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்) **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2023 ஒக்டோபர் 18**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ கைத்தொழில் அமைச்சு ❖ கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்		
01	**<u>தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு அவசியமான உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படாமை.</u>**	கம்பனிப் பதிவு நடவடிக்கைளை கணினிமயப்படுத்துவதற்கான (e-Roc கட்டமைப்பு) மென்பொருளை உருவாக்கும் பணிகள் 2017ஆம் ஆண்டில் ரூ. 57 மில்லியன்கள் செலவில் 9 மாத கால ஒப்பந்தத்தில் நிறைவு செய்யும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 வரையில் அதற்கு அவசியமான பணியாட்டொகுதியினரை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வாளர் தலைமை அதிபதி குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். மேற்படி திணைக்களத்தின் e-Roc தரவு முறைமை தொடர்பான சகல நடவடிக்கைகளும் தனியார் நிறுவனமொன்றினூடாக செயற்படுத்தப்பட்டதன் காரணமாக தரவுக் கட்டமைப்பின் பாதுகாப்பு தொடர்பில் திருப்தியடைய முடியாதென

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக் காட்டினார். தமது திணைக்களத்திற்கு அவசியமான தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் ஒருவரை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பிரகாரம் இணைத்துக் கொள்ளுமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் விதப்புரை வழங்கியிருந்த போதிலும், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் விதப்புரையானது அரசாங்க தகவல் தொழில்நுட்ப சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்ளுமாறு உள்ளதெனவும், எனினும் தமது திணைக்களத்திற்கு அவசியமாவது மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தரவு முறைமைக் கட்டுப்பாடு தொடர்பிலான அனுபவத்தைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் எனவும் பி.க.அ/க.அ. மேலும் தெரிவித்தார். 2023 செத்தெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக தகவல் தொழில்நுட்பச் சேவையின் உதவிப் பணிப்பாளர் ஒருவரை பெற்றுத் தருவதாக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்த போதிலும் இதுவரையில் பெற்றுக்கொடுக்கவில்லை எனவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		பி.க.அ/க.அ. மேலும் தெரிவித்தார். அத்துடன் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுத் தருவதாயின் மேற்படி தரவு முறைமையை தமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பேணிச்செல்ல முடியுமெனவும் பி.க.அ/க.அ. மேலும் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் ஒருவர் அவசியம் இருக்க வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டிய குழு, இதற்கு முன்னுரிமையளித்து தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் ஒருவரை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்குமாறு குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.
02	**<u>கம்பனியொன்று பதிவு செய்யப்படும் போது அதன் குறிக்கோள்களை ஆராய்தல்.</u>**	கம்பனியொன்று பதிவு செய்யப்படுவதற்கு முன்னதாக அது தாபிக்கப்படுவதன் நோக்கம் மற்றும் அதனூடாக பாதிப்பான விளைவுகள் ஏற்படாதிருப்பதனை உறுதி செய்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		கொள்வதன் முக்கியத்துவம் குறித்து குழு கவனம் செலுத்தியது. இதன்போது கருத்துத் தெரிவித்த பி.க.அ/க.அ. கம்பனியொன்றை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கின்ற போது குறித்த கம்பனி தாபிக்கப்படுவதன் குறிக்கோள்கள் குறிப்பிடப்பட வேண்டுமென்ற எந்தவொரு ஏற்பாடும் 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையென தெரிவித்தார். எனவே அது சட்டரீதியான ஒரு தேவைப்பாடு இல்லை என்பதால் கம்பனிப் பதிவின் போது அதன் குறிக்கோள்கள் குறித்து தமது திணைக்களம் விசாரிப்பதில்லை என பி.க.அ/க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** ஒரு கம்பனி பதிவு செய்யப்படுகின்ற போது அக்கம்பனி தாபிக்கப்படுவதன் தெளிவான குறிக்கோள்கள் குறிப்பிடப்படுவது மிகவும் அவசியமென சுட்டிக்காட்டிய குழு, கம்பனிகளுக்குரியதான சட்டங்கள் தொடர்பில் கைத்தொழில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனை ஆணைக்குழுவின் (Advisory Commission) கவனத்திற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		இவ்விடயத்தினை ஆற்றுப்படுத்துமாறும் அது தொடர்பாக ஆலோசனை ஆணைக்குழு கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பிக்கும் விதப்புரைகள் அடங்கிய அறிக்கையின் பிரதியொன்றினை 2023 திசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலருக்கு (க.அ.) குழு விதப்புரை செய்தது. **ஒரு கம்பனி தாபிக்கப்படுகின்ற போது அதன் குறிக்கோள்களை வெளிப்படுத்துவது பொருத்தமாக அமையாதென ஆலோசனை ஆணைக்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் MIC/FIN/08/05/01 இலக்க மற்றும் 2023.11.17ஆம் திகதிய கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய அறிக்கையை 2023.12.15ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
03	**வருடாந்த காலமுறைஅறிக்கைகளை (Annual Returns) சமர்ப்பித்தல்**	2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 131 (1) ஆவது பிரிவின் பிரகாரம் சகல கம்பனிகளாலும் வருடாந்த காலமுறை அறிக்கைகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		(Annual Returns) சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற போதிலும், 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2023 யூன் 30 வரையில் சமர்ப்பிக்கப்படாத வருடாந்த காலமுறை அறிக்கைகள் காரணமாக நிலுவை வருமானமாக ரூபா நான்காயிரம் மில்லியனையும் விட அதிகமாக இருப்பது இங்கு தெரியவந்தது. அத்துடன் இந்த நிலுவை வருமானம் எந்த விடயம் தொடர்பில் கம்பனிக்கு கிடைக்க வேண்டியவை என்பது தொடர்பில் குழு கேள்வி எழுப்பியது. வருடாந்த காலமுறை அறிக்கை சமர்ப்பிக்கின்ற போது சகல கம்பனிளாலும் செலுத்த வேண்டிய கட்டணமொன்று இருப்பதாகவும், அதற்கு மேலதிகமாக உரிய தினத்தில் அறிக்கைகளை சமர்ப்பிக்காமை தொடர்பில் தண்டப்பணத் தொகையொன்று அறவிடப்படுவதாகவும் க.அ. தெரிவித்தார். 2007ஆம் ஆண்டு தொடக்கம் சில கம்பனிகள் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை எனவும், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டால் அக்கம்பனிகளிடமிருந்து திணைக்களத்திற்கு கிடைக்கவேண்டிய கட்டணங்கள் மற்றும் இது வரையில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தின் மொத்தக் கூட்டுத்தொகை என்பன நிலுவை வருமானமாக கணிப்பிட முடியும் எனவும் க.அ. குழுவின் முன்னிலையில் தெளிவுபடுத்தினார். **<u>விதப்புரை</u>** அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத கம்பனிகள் தொடர்பில் நிலவும் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறும், அரசாங்கத்திற்கு நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டிய கம்பனிகளின் பெயர்ப் பட்டியலை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் வலைத்தளத்தில் பதிவிடுமாறும் குழு விதப்புரை செய்தது.
04.	<u>e-Roc தரவு முறைமையின் குறைபாடுகள்</u>	மாதம் ரூ. 1.4 மில்லியனுக்கும் அதிகமாக செலவு செய்து பராமரிக்கப்படுகின்ற கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்குரிய தரவு முறைமையில் (e-Roc) இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல கம்பனிகளினதும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும், எந்தளவான கம்பனிகள் செயற்பாட்டு ரீதியில் உள்ளன என்பது தொடர்பிலான விவரங்களை தரவு முறைமையிலிருந்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெறக்கூடியதாக இருக்க வேண்டுமெனவும் குழு சுட்டிக்காட்டியது. 2018 ஆம் ஆண்டில் மேற்படி தரவு முறைமை தாபிக்கப்பட்டதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளினது சகல விபரங்களும் தரவு முறைமையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் ஆகக் குறைந்தது பெயர் மற்றும் இலக்கம் மாத்திரமாவது தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரித்து சகல கம்பனிகளையும் மீண்டும் பதிவு செய்து கம்பனிகளின் தகவல்களை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** • கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் e-Roc தரவு முறைமையை பராமரிக்கின்ற மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்துடன் கலந்துரையாடி, திணைக்களத்தின் தேவைப்பாட்டுக்கு பொருந்தும் வகையில் மேற்படி தரவு முறைமையை அமைத்துக்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		கொள்ளுமாறும், தற்போதுள்ள ஒப்பந்தத்தின் கீழ் அதனைச் செய்ய முடியாதெனில் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் குழு ஆலோசனை வழங்கியது. • e-Roc கட்டமைப்பில் தரவுகளை உள்ளடக்கும் போது கம்பனிகளின் பதிவுக்குரிய ஆவணங்களை ஸ்கேன் செய்தல் மற்றும் சூசிகைப் படுத்தலுக்காக சுமார் 85 மில்லியன் ரூபா செலவு செய்திருந்தமை தொடர்பில் கவனம் செலுத்திய குழு, i. செலவு செய்யப்பட்ட நிதிக்கு இணையாக கடித ஆவணங்கள் ஸ்கேன் செய்தல் (வருடி எடுத்தல்) மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ii. மேற்படி ஸ்கேன் செய்த (வருடி எடுக்கப்பட்ட) கடித ஆவணங்கள் அனைத்தும் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ஆகிய விடயங்கள் தொடர்பிலான அறிக்கையினை 2023 நவெம்பர் 20ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ./க.அ. விதப்புரை செய்தது. **கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MIC/FIN/08/05/01 இலக்க மற்றும் 2023.11.17ஆம் திகதிய கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** • பழைய தகவல்களை தரவு முறைமையில் உள்ளடக்கும் பொருட்டு சுமார் 25 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்திய குழு - i. எந்தளவான தகவல்கள் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டது? ii. மேற்படி தகவல்கள் தரவு முறைமையில் தற்பொழுது காணப்படுகின்றனவா? iii. தரவு முறைமையில் உள்ளடக்காத தகவல்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை? ஆகிய விடயங்களை உள்ளடங்கிய அறிக்கையினை 2023 நவெம்பர் 20ஆம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. குழு விதப்புரை செய்தது. **கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MIC/FIN/08/05/01 இலக்க மற்றும் 2023.11.17ஆம் திகதிய கடிதம் மூலமாக உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** • தற்பொழுது தனியார் நிறுவனமொன்றினூடாக பராமரிக்கப்படுகின்ற திணைக்களத்தின் தரவு முறைமையில் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் / மேற்படி கட்டமைப்பிலிருந்து பெறக்கூடிய தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையினை 2023 நவெம்பர் 20ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. குழு விதப்புரை செய்தது. **திணைக்களத்திற்குரிய தரவுகள் தனியார் நிறுவனத்தில் அல்லாமல் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் பரிமாறியில் (server) களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதாகவும், தரவு முறைமையில் குறைபாடு எதுவும்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இல்லையெனவும் கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MIC/FIN/08/05/01 இலக்க மற்றும் 2023.11.17ஆம் திகதிய கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. **தரவு முறைமையினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** • வருடாந்த காலமுறைஅறிக்கைகளைச் (Annual Returns) சமர்ப்பிக்கும் செயற்பாட்டில் பிரச்சினைக்குரிய சந்தர்ப்பங்கள்/ நபர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் சட்டரீதியான விடயங்களை மேற்கொள்வதற்கும் திணைக்களத்தின் குறிக்கோள்களை உரிய முறையில் பேணிச் செல்வதற்கும் புதிய சட்ட திட்டங்கள் அவசியமெனில், 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பி.க.அ/க.அ. விதப்புரை செய்தது. **கம்பனிகள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யாமல், விசேட ஏற்பாடுகள் சட்டமொன்றினைச் சமர்ப்பித்து**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		நிறுவப்பட்ட கம்பனிகளை மீள பதிவு செய்தல் பொருத்தமானதென ஆலோசனைக் குழு முன்மொழிந்துள்ளதாக **கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MIC/FIN/08/05/01 இலக்க மற்றும் 2023.11.17ஆம் திகதிய கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.** • கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் தரவு முறைமையானது முழுமையாக தனியார் நிறுவனம் ஒன்றின் கீழ் காணப்படுகின்றமை தகவல்களின் இரகசியத்தன்மை தொடர்பில் சாதகமான நிலைமை அல்லவென்பதனை அவதானித்த குழு, உடனடியாக அந்நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கியது.
05	**<u>கடமைகள் பகிரப்படுவதில் நிலவும் வேறுபாடுகள்</u>**	பதிவுச் சான்றிதழ் அனுமதி வழங்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களாலும் கடந்த மாதத்தினுள் அனுமதி அளிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை தொடர்பிலான தகவல்களை வெவ்வேறாக சமர்ப்பிக்குமாறு குழு விடுத்த

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		அறிவுறுத்தலுக்கமைவாக க.அ. உரிய தகவல்களை குழுவின் முன்னிலையில் சமர்ப்பித்தார். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளின் அளவுகளில் தெளிவான வேறுபாடு உள்ளதென்பதனை அவதானித்த குழு, கடமைகள் பகிரப்படுவதில் வேறுபாடு இருப்பதாக சுட்டிக்காட்டியது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த க.அ., சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தரவு முறைமையினூடாக மேற்கொள்ளப்பட்ட கடமைகளுக்கு உரியதான தகவல்கள் மட்டுமே எனவும், விலைமனுதாரர்கள், கணக்காய்வாளர்கள், செயலாளர்கள் மற்றும் சங்கப் பதிவுகளுக்குரியதான நடவடிக்கைகள் இன்னும் கையேடு (Manual) முறையில் மேற்கொள்ளப்படுவதால் அந்த கடமைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். e-Roc கட்டமைப்பினுடாக மேற்கொள்ளப்படும் கடமைகளை தமது திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இரவு வேளைகளிலும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வீட்டிலிருந்தவாறு இணையவழியூடாக மேற்கொள்வதாகத் தெரிவித்த கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் க.அ., திணைக்களத்தின் சகல பணிகளும் மேற்படி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருப்பின் மிகச் சிறப்பாக செயற்றிறன்மிக்க சேவையை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். தரவு முறைமையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கிய குழு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் சேவையைப் பாராட்ட வேண்டுமெனவும் குறிப்பிட்டது.
06.	**<u>ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துதல்.</u>**	கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் மாதாந்தம் அண்ணளவாக 100 மில்லியன் ரூபா வருமானத்தினை ஈட்டுகின்றதாகவும், உத்தியோகத்தர்களின் சேவையை பாராட்டும் முகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று (Incentive) வழங்குவது தொடர்பில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார். அவ்வாறான ஊக்குவிப்புக் கொடுப்பனவையேனும் வழங்காவிடின் அவர்களை நிறுவனத்தில் தக்க வைத்துக்கொள்வது

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		மிகவும் கடினம் எனவும், அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் புதிய உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு பல மாதங்கள் செல்கின்ற காரணத்தால் செயலாற்றுகையில் பின்னடைவு ஏற்படுவதாகவும் க.அ. மேலும் தெரிவித்தார். கடந்த கொவிட் தொற்று காலப்பகுதியில் உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்தவாறு கடமைகளை ஆற்றுவதற்கு (Work From Home) சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதாகவும், அச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்தினதும் உத்தியோகத்தர்களினதும் செலவுகள் குறைந்து செயற்றிறனில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் க.அ. தெரிவித்தார்.

பயனுறுதிவாய்ந்த தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமான சேகரிப்பினை மேம்படுத்துவதற்காக பங்குதாரர்கள் மற்றும் பங்காளர்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறைகளை விதப்புரை செய்வதற்கான அடிப்படைத் தொழில்நுட்பக் குழுவின் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்ப்பதற்கான கூட்டம்

விசாரணை செய்யப்பட்ட திகதி 2023 ஒக்டோபர் 19

அழைக்கப்பட்ட நிறுவனங்கள்

- ❖ பிரதமர் செயலகம்
- ❖ சனாதிபதி செயலகம்

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</th></tr>
<tr><td colspan="3">❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
❖ தொழில்நுட்ப அமைச்சு
❖ கைத்தொழில் அமைச்சு
❖ உண்ணாட்டரசிறைத் திணைக்களம்
❖ இலங்கைச் சுங்கம்
❖ மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்
❖ இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்
❖ ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
❖ கமத்தொழில் திணைக்களம்
❖ கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
❖ பதிவாளர் நாயகம் திணைக்களம்
❖ கொழும்பு மாநகர சபை
❖ இலங்கை கட்டளைகள் நிறுவனம்
❖ இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்</td></tr>
<tr><td>1</td><td><u>தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2016.11.23ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்திய இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய முன்னேற்றம்.</u></td><td>தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பினைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு 2016.11.23ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் 2023.03.23ஆம் திகதி பிரதமரின் செயலாளரின் பங்கேற்புடன் கூடிய அடிப்படைத் தொழில்நுட்பக் குழு மேற்படி இடைக்கால அறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட விடயங்களை</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		நடைமுறைப்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்டதென குழுவின் தவிசாளர் சுட்டிக்காட்டினார். இன்றளவில் மேற்படி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வருமான சேகரிப்பிற்கான தரவு முறைமை மற்றும் அவற்றின் எதிர்கால செயற்பாடுகள் பற்றிய கவனத்தைச் செலுத்துவதற்கு அப்பாற்சென்று நிறுவனங்களுக்கிடையில் காணப்படுகின்ற பல்வேறான தரவு முறைமைகளை ஒன்றிணைத்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி குழு சுட்டிக்காட்டியதுடன் வேறு நாடுகளின் அரச நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒன்றிணைந்த தரவு முறைமைகளையும் கண்காணிக்க வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது.
2	அரச நிறுவனங்களில் தரவு முறைமைகளை ஒன்றிணைப்பதற்காக பயன்படுத்தும் டிஜிட்டல் தேசிய அடையாள அட்டையை துரிதமாக செயற்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.	அடையாளம் காணப்பட்ட 13 அரச நிறுவனங்களின் சேவைகளை முன்னேற்றுவதற்கான டிஜிட்டல் அடிப்படையாக கருதப்படுகின்ற இலங்கைக்கு தனித்துவமான தேசிய அடையாள அட்டை நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னுரிமை அடிப்படையில் எதிர்வரும் 18 மாத காலப்பகுதிக்குள் திட்டவட்டமான மற்றும் இலக்கினைக்கொண்ட காலச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		சட்டகத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். அதற்கமைய, 2025ஆம் ஆண்டின் நிறைவில் டிஜிட்டல் அடையாள அட்டையை (Digital ID) முழுமையாக செயற்படுத்த திட்டமிட்டுள்ள காரணத்தினால் அது வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு திணைக்களங்களுக்கிடையில் தரவுகளை பரிமாறிக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேர்தல் திணைக்களத்தில் உள்ள தரவு முறைமையை சில நிறுவனங்களுக்கு ஒன்றிணைத்து வழங்கியுள்ளதாக பிரதமரின் செயலாளர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். உண்ணாட்டரசிறைத் திணைக்களம், தொழில் திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் ஆகியனவே மேற்குறித்த நிறுவனங்கள் என்பதையும் பிரதமரின் செயலாளர் குழுவின் முன்னிலையில் மேலும் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
3	அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயப்படுத்தியதன் பின்னர் ஒன்றிணைந்த தரவு முறைமையினை பேணிச் செல்வதற்கு அவசியமான மனித வளங்களை அரச தகவல் தொழில்நுட்ப சேவையில் காணப்படுகின்ற சம்பளக் கட்டமைப்புடன் ஈர்ப்புச் செய்தல் கடினமானதாக இருக்குமென்ற விடயம் குழுவின் முன்னிலையில் தெரியவந்தது.	அதற்கான உடனடித் தீர்வாக, தொழில்நுட்ப அமைச்சின் கீழ் புதிய ஒரு நிறுவனமாக “இலங்கை டிஜிட்டல்மயமாக்கல் கூட்டுத்தாபனம்” தாபிக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமாக 13 அரச நிறுவனங்களுக்கு அவசியமான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை சந்தைமட்ட சம்பள வகுதிகளின் அடிப்படையில் இணைத்துக்கொண்டு தேவைப்பாட்டின் மீது முன்னுரிமை அடிப்படையில் மேற்படி நிறுவனங்களுக்கான மனித வளங்களாக ஈடுபடுத்துவதற்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமரின் செயலாளர் குழுவின் முன்னிலையில் மேலும் தெரிவித்தார். 2023ஆம் ஆண்டினை இலக்காகக் கொண்டு டிஜிட்டல் அரச உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டத்தினை (Digital Public Infrastructure) வடிவமைப்பதற்காக இன்றளவில் உலக வங்கியிடமிருந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குழுவில் தெரியவந்தது. பிரதமரின் செயலாளரின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		தலைமையிலான தொழில்நுட்ப அமைச்சினால் வழிநடாத்தப்பட்ட டிஜிட்டல் திட்டம் (Digital Road Map) உள்ளடங்கிய அறிக்கை பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமரின் செயலாளர் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தினார். SLUDI (Sri Lanka Unique Digital Identity) கருத்திட்டத்திற்கான தரவுகளை அடையாளம் காணல் மற்றும் உறுதிப்படுத்துதல் பற்றிய தளமாக பயன்படுத்தப்படும் இந்திய நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்ட Modular Open Source Identity Platform (MOSIP Platform) கட்டமைப்பை பயன்படுத்தி, அரசுகளுக்கிடையில் தரவுகளை பரிமாறிக்கொள்கின்ற போது பிரச்சினைகள் எழக்கூடும் என்ற “சமூக கருத்து” நிலவுவதன் காரணமாக மேற்படி MOSIP Platform கட்டமைப்பினை, மேலும் பகுப்பாய்வு செய்து அது தொடர்பிலான தொழிற்றுறை சார்ந்த தொழில்நுட்ப பக்கச்சார்பற்ற அறிக்கையொன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் மென்பொருள் சங்கமாகிய SLASSCOM

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் மேலும் தெரிவித்தார். அடிப்படைத் தொழில்நுட்பக் குழுவுடன் தொடர்புடைய 13 நிறுவனங்களின் தரவு முறைமைகளை செயற்படுத்துகின்ற போதும் மேற்படி தரவு முறைமைகளை ஒன்றிணைக்கின்ற போதும் அந்நிறுவனங்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் மூலமாக இடம்பெறுகின்ற தடைகளை அடையாளம் காண்பதற்கு அடிப்படைத் தொழில்நுட்பக் குழு விதப்புரை செய்துள்ளதாக குழுவில் தெரிய வந்தது. அதன் பின்னர் அடிப்படைத் தொழில்நுட்பக் குழு, சட்ட வரைஞருடன் இணைந்து நிறுவனங்களுக்கிடையிலான தரவு முறைமைகளை ஒன்றிணைப்பதில் சட்ட ரீதியான தடைகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களுக்குரியதாக சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் பிரதமரின் செயலாளர் தெரிவித்தார்.
4	<u>**அரச நிறுவனங்களின் தரவு முறைமைகளை**</u>	அரச நிறுவனங்களின் தரவு முறைமைகளை ஒன்றிணைத்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	<u>தொடர்புபடுத்துவதற்காக உருவாக்க எதிர்பார்க்கின்ற ஒன்றிணைக்கப்பட்ட அரச எண்ணக்கரு (Connected Government)</u>	உருவாக்க எதிர்பார்க்கின்ற ஒன்றிணைக்கப்பட்ட அரச (Connected Government) எண்ணக்கருவின் அடிப்படை அம்சமாக அமைவது டிஜிட்டல் அரச உட்கட்டமைப்பு வசதிகளே (Digital Public Infrastructure) என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மை நிறுவனத்தின் க.அ. தெரிவித்தார். தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை (Unique Digital ID), தேசிய கொடுப்பனவு தளம் (National Payment Platform) உள்ளிட்ட நிறுவனங்களின் தரவு முறைமைகளை ஒன்றிணைத்தல் (Data Base Connected) ஒன்றிணைக்கப்பட்ட அரச எண்ணக்கருவின் அடிப்படையென அவர் மேலும் தெரிவித்தார். அதற்காக தெளிவான டிஜிட்டல் உபாயமார்க்கம் மற்றும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்று அவசியமெனவும் மேற்படி பொறிமுறையானது மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்யப்படல் வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
5	**<u>ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்</u>**	ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில், இறுதிச் சரிபார்க்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு டிஜிட்டல் ரீதியாக பெறக்கூடிய தரவுகள் (Digitally Available Data) 7 மில்லியன்கள் காணப்படுவதனைக் குழு அவதானித்தது. இன்றளவில் மேற்படி டிஜிட்டல் தரவுகள் மற்றும் டிஜிட்டல் அல்லாத தரவுகள், தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மென்பொருள் ஊடாக அரச நிறுவனங்கள் மற்றும் 88 நிதி நிறுவனங்களுடன் பரிமாறிக் கொள்வதாகவும் ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். டிஜிட்டல் ரீதியாக பெறக்கூடிய 7 மில்லியன் தரவுகளை 2023.12.31 ஆம் திகதியின்போது ஏனைய உரிய நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் குழுவின் முன்னிலையில் மேலும் தெரிவித்தார்.
6	**<u>குழுவின் அவதானிப்புகள்</u>**	முன்னைய கணக்குகள் குழுவின் விதப்புரைக்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தகவல்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான தொழில்நுட்பக் குழுவொன்றினையும் சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பில் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான சட்ட குழுவொன்றினையும் நியமித்ததாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். மேற்படி தொழில்நுட்பக் குழுவில், அடிப்படைத் தொழில்நுட்பக் குழுவில் உள்ளடங்கியுள்ள 13 நிறுவனங்களின் தரவு முறைமைகளை ஒன்றிணைக்கக் கூடிய பொதுக் குறியீடாக தேசிய அடையாள அட்டை இலக்கம், வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் (Tax Identification Number (TIN)), மற்றும் கம்பனி பதிவு இலக்கம் என்பன அடையாளம் காணப்பட்டதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. மேலும் உள்நாட்டவர் அல்லாத நபரொருவர் தொடர்பிலான தகவல்களை முறைமைகளில் உள்ளடக்க வேண்டிவரும் போது மேற்படி இலக்கத்திற்குப் பதிலாக கடவுச் சீட்டு இலக்கத்தினை பயன்படுத்துவது பற்றிய இயலுமை தொடர்பில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்க்க எதிர்பார்ப்பதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நிறுவனங்களுக்கிடையில் தகவல் பரிமாறிக் கொள்கையில் பிரதானமாக சட்டத் தடைகள் நிலவுகின்ற நிறுவனங்கள் மற்றும் சட்டங்களாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் - உள்நாட்டு இறைவரி சட்டம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் - நொத்தாரிசு கட்டளைச் சட்டம் ஆகியன அடையாளம் காணப்பட்டதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. அடையாளம் காணப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கிடையில் தகவல்களை பரிமாறிக் கொள்வதில் சட்ட ரீதியான தடைகள் இல்லையெனவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். சட்டரீதியான தடைகளின்றி நிறுவனங்களுக்கிடையில் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான புதியதொரு நிறுவனமாக இலங்கை பொதுத் தகவல்கள் அதிகார சபையை (Sri Lanka Public Information Authority)

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தாபிப்பதற்கு எதிர்பார்ப்பதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது. இந்த அதிகார சபையினூடாக நிறுவனங்களின் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான சட்ட ரீதியான பிணிப்பு ஏற்படுமெனவும் மேற்படி அதிகார சபையினூடாக ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான தகவல்களை பகிர்ந்தளித்தல் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்போது நிறுவனங்களின் தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கு மேற்படி அதிகார சபை கட்டுப்பட்டுள்ளது என்பதும், நிறுவனங்களின் தகவல் உரிமை இவ்வதிகார சபைக்கு கிடைக்கும் என்பதும் குழுவினால் அடையாளம் காணப்பட்டது.
7	**<u>இலங்கை சுங்கத்தின் ASECUDA கட்டமைப்பு</u>**	இலங்கை சுங்கத்தின் ASECUDA கட்டமைப்பானது இலங்கை சுங்கத்துடன் நேரடியாக தொடர்புடைய 17 நிறுவனங்களுடன் தொடர்புபட்டுள்ளது என்பதையும், மேலும் இக்கட்டமைப்புடன் இணைப்பதற்காக 25 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்பதையும் குழு அவதானித்தது. இந்த வருட நிறைவின் போது மேலும் பல

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		நிறுவனங்களை ASECUDA கட்டமைப்புடன் இணைக்க எதிர்பார்ப்பதாகவும் இலங்கை சுங்கத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் போது இலங்கைச் சுங்கத்திற்கு கிடைக்கின்ற வருமானத்தில் எந்தளவு நிகழ்நிலை ஊடாகவும் (Online முறையில்) எந்தளவு வங்கிப் பற்று (Bank Drafts) ஊடாகவும் கிடைக்கின்றது என்பது தொடர்பாகவும் இது தொடர்பில் திருத்தமெதுவும் அவசியமெனில் அதனையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை ஒரு வார காலத்திற்குள் குழுவிடம் ஒப்படைக்குமாறு பிரதமரின் செயலாளருக்கும் இலங்கை சுங்கத்தின் கணக்கீட்டு அலுவலருக்கும் (க.அ) குழு விதப்புரை செய்ததுடன் வங்கி வரைவுகளினூடாக (Bank Drafts) பணம் செலுத்துவதற்கான காரணங்களையும் ஆராயுமாறு குழு விதப்புரை செய்தது. **பிரதமரின் செயலாளரின் PMO/DEV3/SA/06/05/2023 இலக்க மற்றும் 2023.12.14ஆம் திகதிய கடிதம்**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		மூலமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
8	**<u>உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்பு</u>**	உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்பில் இதுவரையில் 6 நிறுவனங்கள் மட்டுமே தொடர்புபட்டுள்ளதென உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் ஆகிய நிறுவனங்களை RAMIS கட்டமைப்புடன் இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குழுவில் குறிப்பிடப்பட்டது. மேலும், RAMIS கட்டமைப்புடன் இணைக்கப்பட வேண்டிய, எனினும் RAMIS கட்டமைப்புடன் இணைக்கப்படாத சுமார் 20 நிறுவனங்கள் உள்ளதென்பதை குழு அவதானிக்கப்பட்டது. உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்புடன் இணைக்கப்பட வேண்டிய புதிய நிறுவனங்கள் அடையாளம் காணப்படுமாயின் அந்நிறுவனங்கள் தொடர்பிலும் இவ்வடிப்படை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		தொழில்நுட்பக் குழுவிற்கு அறிவிக்குமாறு குழு உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் க.அ.கு விதப்புரை செய்தது. அடிப்படை தொழில்நுட்பக் குழு 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் மீள அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவுள்ளதாக தவிசாளர் குழுவில் தெரிவித்த அதேவேளை, அதன்போது அடிப்படை தொழில்நுட்பக் குழு பிரதிநிதித்துவம் செய்யும் சகல நிறுவனங்களினதும் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்புகள் செயற்படுத்தப்படுவதன் முன்னேற்றத்தினை அதன் திகதிகளுடன் கணினி சமர்ப்பணமாக (Presentation) முன்வைக்குமாறு குழு பிரதமரின் செயலாளருக்கு விதப்புரை செய்தது. இதன்போது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்புடன் தொடர்புடைய நிறுவனங்களின் முன்னேற்றத்தினையும் எஞ்சிய ஏனைய நிறுவனங்களை இணைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டம் தொடர்பிலும் மேற்படி கணினி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		சமர்ப்பணத்தில் உள்ளடக்குமாறு குழு மேலும் விதப்புரை செய்தது.
9	**பதிவாளர் நாயகம் திணைக்களம்**	பதிவாளர் நாயகம் திணைக்களத்தை எதிர்காலத்தில் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்புடன் இணைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் காணி உறுதிகள் பதிவு தொடர்பான தகவல்களை அதனூடாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். இ-பதிவாளர் நாயகம் திணைக்களம் இ-காணி, இ-சனத்தொகை, இ-பிறப்பு விவாக இறப்பு, இ- உரித்துகள் ஆகிய மென்பொருள் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக இதன்போது தெரியவந்தது. இ-காணி மென்பொருள் கருத்திட்டத்தினை 03 கட்டங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டதையும் அதன் முதற் கட்டத்தின் போது மேற்படி கருத்திட்டத்தினை முன்னோடிக் கருத்திட்டமாக 07 காணிப் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தியதையும் குழு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		அவதானித்தது. இரண்டாம் கட்டத்தின் போது காணி உறுதி பதிவுகளையும், மூன்றாம் கட்டத்தின் போது 2024.06.30 ஆம் திகதியளவில் மெய்நிகர் வழியூடாக உறுதிகளின் பிரதிகளை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார். காணிப் பதிவாளர் அலுவலகங்கள் 50 யும் இ-காணி கருத்திட்டத்தில் இணைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. காணிப் பதிவாளர் அலுவலகங்களுக்கு அவசியமான கணினிப் பாகங்கள் மற்றும் உரிய உபகரணங்களின் தேவைப்பாடு மிக அதிகமாக இருப்பதாகவும் இன்றளவில் இ-காணி கருத்திட்டத்தினை மிகக் குறைந்த வசதிகளின் கீழ் காணி பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளவதாகவும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தினார். வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பொது ஒதுக்கீடுகளை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமரின் செயலாளருக்கு குழு ஆலோசனை வழங்கியது.
10	**<u>பிறப்புச் சான்றிதழின் பதிவு இலக்கமாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையே பயன்படுத்தும் முறைமை</u>**	பிறப்புச் சான்றிதழின் பதிவு இலக்கமாக தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையே பயன்படுத்தும் முறை இன்றளவில் செயற்பாட்டில் உள்ளதாக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** அடிப்படைத் தொழில்நுட்பக் குழுவினால் குழுவில் சமர்ப்பித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள உயிரியளவுகளின் தரவுகள் உள்ளடங்கிய தேசிய டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவது தொடர்பான படிமுறைகள், நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்ற திகதிகள் உள்ளடங்கிய அறிக்கையினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பிரதமரின் செயலாளர் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் க.அ.கு விதப்புரை செய்தது. **பிரதமரின் செயலாளரின் PMO/DEV3/SA/06/05/2023 இலக்க**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		மற்றும் 2023.12.14ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
11	**<u>இலங்கை கட்டளைகள் நிறுவனம்</u>**	ஏற்றுமதியாளர்களின் பொருள் பரிசோதனைக்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தில் தாபிக்கப்பட்டுள்ள மெய்நிகர் கட்டமைப்பு, இலங்கை சுங்கத்தின் ASECUDA கட்டமைப்புடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து இணைக்கப் பட்டுள்ளதாக கட்டளைகள் நிறுவனத்தின் க.அ. தெரிவித்தார். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரவு முறைமை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் தரவு முறைமை ஆகியவற்றை இணைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினூடாக அவசியமான நேரத்தில் சேவைகளை மெய்நிகர் வழியில் தரவிறக்கம் செய்து கொள்ளும் வசதிகள் அளிக்கப் பட்டுள்ளதாகவும், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினூடாக அளிக்கப்படும் ஏனைய சேவைகளும் இ-சேவைகளாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		(e- Service) வழங்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.
12	**<u>இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்</u>**	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தரவு முறைமை தற்பொழுது இலங்கை சுங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு விதப்புரைகளை (Recommendations) வழங்கும் நிறுவனமாகிய Lanka Pay கட்டமைப்பினூடாக இணைக்கப் பட்டுள்ளதாகவும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். தற்போதைக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தரவு முறைமையில் இணைக்கப்படாத, எனினும் இணைக்கப்பட வேண்டிய ஏனைய நிறுவனங்களை STRATLINK கட்டமைப்பின் 2ஆம் கட்டத்தின் கீழ் 2024 பெப்புருவரி மாதமளவில் இணைத்துக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
13	**<u>கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்</u>**	2017 ஆம் ஆண்டில் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கு தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள் அனுமதிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் மேற்படி திணைக்களத்திற்கு தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள் இணைப்புச் செய்யப்படவில்லை என்பதனை குழு அவதானித்தது. கொவிட் காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து பணிபுரிதல் (Work From Home) நடைமுறையானது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் மிகவும் செயற்றிறன்மிக்கதாக நடைமுறைப்படுத்தப்பட்டதாக குழுவில் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக மேற்படி நடைமுறையானது செயற்றிறன் மிக்கதென உறுதிப்படுத்துவதாயின் அந்த நடைமுறையினை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு உரியதாக்கி நடைமுறைப் படுத்துவது மிகவும் பயன்மிக்கதாக இருக்கும் என்பதை குழு அவதானித்தது. **<u>விதப்புரை</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வீட்டிலிருந்து பணிபுரிதல் நடைமுறையானது பயனுள்ளதாக காணப்படுமாயின் அம்முறையினை கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் உள்ளிட்ட அரச சேவைக்கு அறிமுகம் செய்வதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்வதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி குழுவொன்றினை நியமித்து கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பில் ஆராயுமாறு குழு பிரதமரின் செயலாளருக்கு விதப்புரை செய்தது. **பிரதமரின் செயலாளரின் PMO/DEV3/SA/06/05/WFH/2024 இலக்க மற்றும் 2023.06.14ஆம் திகதிய கடிதம் மூலம் அரச சேவைக்கு வீட்டிலிருந்து பணிபுரிதல் நடவடிக்கையை அறிமுகம் செய்வதற்குள்ள இயலுமை தொடர்பில் மற்றும் அவ்வாறு அறிமுகம் செய்வதாயின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான விதப்புரைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
14	**<u>மதுவரித் திணைக்களம்</u>**	மதுவரித் திணைக்களத்தினால் மதுபான போத்தல்களுக்கான இலச்சினை (Sticker) வழங்கும் செயற்பாட்டில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		ஊழல் மற்றும் பிரச்சினைகள் காணப்படுவதனை குழு அவதானித்த அதேவேளை, அவ்வாறு வழங்கப்படும் இலச்சினைகளை எழுமாறாக பரிசோதனை செய்ய வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியது. மதுவரித் திணைக்களத்தின் தரவுகளை ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறிக் கொள்வதற்காக மதுவரித் திணைக்களத்தில் வருமான நிர்வாக முறைமையொன்று (Revenue Administration System) தாபிக்கப் பட்டுள்ளதாக மேற்படி திணைக் களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். மேற்படி தரவு முறைமையை தயாரிப்பதற்குத் தேவையான நிபுணத்துவ அறிவினைப் பெறுவதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான நிபுணத்துவ கட்டணமாகிய ரூ. 146 மில்லியன் தொகைக்கு அமைச்சரவை அனுமதியின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவில் தெரியவந்தது. இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களில் அன்றாடம் விற்பனை செய்யப்படுகின்ற மதுபான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		போத்தல்களின் எண்ணிக்கை கணக்கிடப்படும் முறைமையொன்று தாபிக்கப்படுவது அவசியம் என்பதனை குழு பி.க.அ./க.அ. அறிவித்தது.
15	**<u>கொழும்பு மாநகர சபை</u>**	கொழும்பு மாநகர சபையில் வரி அறவிடும் நடவடிக்கையானது 2000ஆம் ஆண்டு முதல் கணினி முறை மையூடாக இடம் பெற்றதாகவும், 2014 ஆம் ஆண்டு முதல் இணையவழி முறையில் வருமான சேகரிப்பு இடம்பெற்றதாகவும் தற்பொழுது சுமார் 01 மில்லியன் ரூபா வருமானம் இணையவழியூடாக சேகரிக்கப்படுவதாகவும் கொழும்பு மாநகர சபையின் க.அ. தெரிவித்தார். வரி வருமான சேகரிப்பிற்காக Korea International Co-operation Agency (KOICA) நிதியுதவியின் கீழ் முறைமையொன்றினை உருவாக்குவதற்கு சுமார் 08 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்ததாக கொழும்பு மாநகர சபையின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். மேற்படி கருத்திட்டத்தின் கீழ் முத்திரை வரி, ஆதனவரி, வியாபார வரி, வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ஆகிய வருமானங்களை இணையவழியூடாக அறவிடுவதற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
16	**<u>உள்ளூராட்சி மன்றங்களால் நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்படும் முறையியல்</u>**	உள்ளூராட்சி மன்றங்களால் நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்படுகின்ற போது அத் தண்டப்பண பட்டியல்கள் பரிசீலிக்கப்பட்டு குறித்துக் கொள்ளப்படுவதாகவும் அதன் பின்னர் அந்த நீதிமன்ற தண்டப்பணம் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தி வழங்கியதன் பின்னர் மாகாண வருமான திணைக்களத்திடமிருந்து அத்தொகையை பெற்றுக் கொள்வதாகவும் கொழும்பு மாநகர சபையின் க.அ. தெரிவித்தார். நீதிமன்ற தண்டப்பணத்தை நேரடியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கும் முறையான வேலைத்திட்டமொன்று இல்லையென்பது குழுவினால் அவதானிக்கப்பட்டது. மேலும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றை ஒன்றிணைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆதனவரி/ தண்டப்பணம்/ முத்திரைக் கட்டணம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		ஆகிய வரி வருமானங்களை கணிப்பீடு செய்வதற்கான நேரடி முறைமையொன்றினை தயாரிக்குமாறு குழு பி.க.அ./ க.அ. விதப்புரை விடுத்தது. அதன்படி, அடுத்த கூட்டத்திற்கு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு அடிப்படை தொழில்நுட்பக் குழுவிற்கு விதப்புரை செய்ததுடன், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் அது தொடர்பில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சிற்கு தெளிவூட்டுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.
17	**<u>இ-மோட்டரிங் (E-Motoring) கருத்திட்டம்</u>**	இ-மோட்டரிங் (E-Motoring) கருத்திட்டத்தினை 2023ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தயார்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் கருத்திட்டம் மற்றும் கருத்திட்டத்தின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		பெறுகை நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டில் D-Merit கருத்திட்டம் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார்.
18	**<u>சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு அலகு</u>**	சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு அலகினூடாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கமைவாக ஏற்றுமதிச் சேவை சான்றிதழ் வழங்குகின்ற போது இடம்பெறுகின்ற அறவீடு தொடர்பாக தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றினை உருவாக்கும் பொருட்டு வேண்டுகோள் முன்வைக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு அலகின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.
19	**<u>தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவை</u>**	தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையின் நடவடிக்கைகளை செயற்றிறனாக்கும் பொருட்டு மூன்று தகவல் தொழில்நுட்ப முறைமைகள் தாபிக்கப்பட்டு வருவதாக கமத்தொழில் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். தாவரப் பொருட்கள் ஏற்றுமதியின் போது தாவர சுகாதாரப் பாதுகப்புச் சான்றிதழை 36 நாடுகளுடன் பரிமாறிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்வரும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		காலப்பகுதியில் மேலும் பல நாடுகளுடன் தாவர சுகாதாரப் பாதுகாப்புச் சான்றிதழை பரிமாறிக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் கமத்தொழில் திணைக்களத்தின் க.அ. குழுவின் முன்னிலையில் தெரிவித்த அதேவேளை தாவரப் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது வழங்கப்படுகின்ற சேவைக்கான கட்டண அறவீட்டுக்காக மின்னணு கொடுப்பனவு முறைமையை உத்தியோகபூர்வமாக 2023.08.08 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாகவும், தாவர தடுப்புக் காப்பு தகவல் முகாமைத்துவ முறைமையொன்றினை (PQIMS) உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
20	**<u>நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவம்</u>**	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது. அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் தரவு முறைமைகளை செயற்படுத்துகின்ற போது உரிய சகல அரச நிறுவனங்களுக்கும் போதுமானளவில் அவசியமான உட்கட்டமைப்பு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** **- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		வசதிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு தொழில்நுட்ப அமைச்சின் பி.க.அ.கு குழு விதப்புரை விடுத்தது. மேலும், தரவு முறைமைகளை ஒன்றிணைப்பதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும், தகவல் தொழில்நுட்ப சேவையிலுள்ள அதிகாரிகளை மேற்படி நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்வது தொடர்பிலும், நிறுவனங்களின் மென்பொருள் கட்டமைப்புகளை பராமரிப்பது தொடர்பிலும் கவனத்தைச் செலுத்தி செயற்படுமாறு குழு பிரதமரின் செயலாளருக்கு விதப்புரை விடுத்தது. 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெறவுள்ள அடுத்த கூட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தலைமையில் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு மற்றும் சட்டக் குழு ஆகியன கணினி சமர்ப்பணம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமெனவும், மேற்படி கணினி சமர்ப்பணத்தில் அடையாளம் காணப்பட்ட 13 அரச நிறுவனங்களில் ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படும் தரவு முறைமைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவது

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்
- குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்</th></tr>
<tr><td></td><td></td><td>எவ்வாறு என்பதையும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பிலும் எஞ்சிய ஏனைய நிறுவனங்களை எவ்வாறு இணைத்துக்கொள்வது என்பது தொடர்பிலும் அது தொடர்பான திகதிகளையும் உள்ளடக்க வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது.</td></tr>
<tr><td colspan="3">விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்
(2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கைகளும் தற்போதைய செயலாற்றுகையும்)
விசாரணை செய்யப்பட்ட திகதி - 2023 ஒக்டோபர் 20</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -
❖ விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
❖ விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்</td></tr>
<tr><td>1.</td><td>கணக்காய்வு சிறு குறிப்பில் 3.1. மற்றும் 3.2. பந்திகளில் குறிப்பிடப்பட்ட 26 கருத்திட்டங்களுள் 17 இன் பணிகள் நிறைவு செய்யப்பட்டு தாமதமாக ஒப்படைக்கப்பட்டிருந்த அதேவேளை 19 கருத்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்வதில்</td><td>இங்கு குறிப்பிடப்பட்ட பணிகள் நிறைவு செய்யப்படாத 26 கருத்திட்டங்களில் 18 திட்டங்கள் இன்றளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டு அவை பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடியதாக உள்ளதெனவும், கைவிடப்பட்ட 10 கருத்திட்டங்களுள் 8 திட்டங்கள் செயற்பாட்டு நிலையில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது. மேற்படி 8 கருத்திட்டங்களை</td></tr>
</table>

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
	காலதாமதம் ஏற்பட்டிருந்தமை மற்றும் 10 கருத்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யாமல் இடை நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. மேற்படி கருத்திட்டங்கள் முறையான முன்னுரிமைப்படுத்தல் மற்றும் சாத்தியவள ஆய்வுகளின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இக்கருத்திட்டங்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன மூலதன செலவாக 4 பில்லியன்களுக்கு மேலாக செலவு செய்திருப்பது குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.	2023.12.31ஆம் திகதியளவில் நிறைவு செய்ய முடியுமென விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ./க.அ.) தெரிவித்தார்.
2.	வடமேல் மாகாணத்தின் பிங்கிரிய விளையாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் தொடர்பிலும் குழுவின் கவனம்	<u>**விதப்புரை**</u> நிதி ஒதுக்கீடுகள் நிறைவடைந்த காரணத்தினால் இடையில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில், உரிய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	செலுத்தப்பட்டது. மேற்படி விளையாட்டு மைதானத்தை செயற்கை புற்றரையைக் கொண்ட ஆடுகளமாக அமைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் பின்னர் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக சாதாரண புற்றரை ஆடுகளமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குழுவின் முன்னிலையில் தெரிய வந்தது.	நிர்மாணங்களின் பணிகள் எந்த மட்டத்தில் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பது தொடர்பில் குழுவொன்றினை நியமித்து அதனூடாக தீர்மானிப்பது பொருத்தமாக இருக்குமென்பதை குழு சுட்டிக்காட்டியது. இதன்போது கருத்துத் தெரிவித்த தேசிய விளையாட்டுச் சபையின் தலைவர், பெரும்பாலான கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு விலைமனுக் கோரல்களின் போது குறைந்த விலைகளின் கீழ் அதிகமான நிறுவனங்கள் விலைக்கூறுகளைச் சமர்ப்பித்து, பின்னர் கருத்திட்டத்தின் இடைநடுவில் எழுகின்ற நிதிப் பிரச்சினைகளின் காரணமாக கருத்திட்டத்திலிருந்து விலகிச் செல்வதாக தெரிவித்தார். எனவே கருத்திட்டங்களை ஆரம்பிக்கின்ற போது உரிய தேவைப்பாடுகள், விவரக் குறிப்புகளை மிகத் தெளிவாக குறிப்பிட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட வேண்டுமெனவும், அதற்கு முறையான திட்டமொன்றினை திணைக்களம் தயாரிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		இன்றளவில் பிரதம பொறியியலாளர் ஒருவர் உட்பட பொறியியல் அலகொன்று அமைச்சினால் தாபிக்கப்பட்டு அதனூடாக கருத்திட்டங்களின் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து மேற்படி கருத்திட்டங்கள் பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.
3.	பணிகள் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களிலும் பயன்பாட்டின் போது குறைபாடுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.	**<u>விதப்புரை</u>** பணிகள் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களிலும் பயன்பாட்டின் போது குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டதாக தெரிவித்த குழு ஒப்பந்ததாரரினால் உரிய கருத்திட்டங்கள் ஒப்படைக்கப் படுகின்ற போது குறித்த கருத்திட்டங்களின் நிலைமை தொடர்பில் பரிசீலனை செய்கின்ற முறையொன்று காணப்பட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியது.
4.	<u>**மாவட்ட விளையாட்டுக் குழுக்களுக்கு சட்டரீதியான நியமனங்களைச் செய்தல்.**</u>	<u>விதப்புரை</u> மாவட்ட விளையாட்டுக் குழுக்களுக்கான நியமனங்கள் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்ந்த குழு, அதன் உத்தியோகத்தர்களுக்கு கடமைகளை ஒப்படைக்குமாறும், உரிய நியமனக் கடிதங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், பொறுப்புக்கள் தொடர்பில் தெளிவூட்டுமாறும், அந்தக் கூட்ட அறிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு செய்யுமாறும், இந்தக் கூட்டத்திற்கு அமைச்சின் சார்பில் அதிகாரி ஒருவரை கலந்துகொள்ள வைக்குமாறும் குழு விதப்புரை விடுத்தது. அத்துடன் பிரதேச மட்டத்தில் விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை களத்திற்கு கொண்டு வருமாறும், அதற்கு அவசியமான ஒதுக்கீடுகளை தேடிக்கொள்ளுமாறும், மாவட்ட குழுக்கள் அனைத்தையும் 2024 சனவரி 01 ஆம் திகதியில் தாபித்து நிறைவு செய்யுமாறும் குழு பி.க.அ./க.அ. விதப்புரை செய்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
5.	தேசிய விளையாட்டுச் சங்கங்கள் அனைத்தையும் அழைத்து ஆசிய விளையாட்டுக்களில் கலந்துகொள்ள வைப்பதற்காக விளையாட்டு வீரர்களிடம் காணப்பட வேண்டிய திறமைகளின் மட்டம் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானித்தல்.	தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மிகச் சிறந்த திறமைகளையுடைய 100 விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்ட முறைமையை மாற்றியமைத்து சுமார் 300 விளையாட்டு வீரர்களுக்கு ரூபா 100,000/-, 75,000/-, 50,000/- மற்றும் 25,000/- என்ற தொகுதிகளாக பிரித்து வழங்குவதற்கு தீர்மானித்ததாகவும், மூன்று மாதத்திற்கொரு தடவை விளையாட்டு வீரர்களின் திறமைகள் தொடர்பில் மீளாய்வு செய்து திறமைகள் குறைவாக உள்ள வீரர்களை கீழ் மட்டத்திற்கு இறக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் தமது வீழ்ச்சியை மீண்டும் திருத்திக் கொள்வதற்கு 3 மாத கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் தேசிய விளையாட்டு சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.
6.	**<u>மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், மாகாண விளையாட்டுக் குழுக்கள் மற்றும் பிரதேச விளையாட்டுக் குழுக்களைத் தாபித்தல்</u>**	2022இல் திருத்தம் செய்யப்பட்ட விளையாட்டுச் சட்டத்தின் அடிப்படையில் மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், மாகாண விளையாட்டுக் குழுக்கள் மற்றும் பிரதேச விளையாட்டுக் குழுக்களை அமைப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் கிடைத்துள்ளதென இங்கு குறிப்பிடப்பட்டது. அதன்படி இன்றளவில் வவுனியா மற்றும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
		அநுராதபுரம் ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர எஞ்சிய 23 மாவட்டங்களுக்கென குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலப்பகுதியில் பிரதேச விளையாட்டுக் குழுக்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** மாவட்ட விளையாட்டுக் குழுக்களுக்கான நியமனங்கள் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்ந்த குழு, அதன் உத்தியோகத்தர்களுக்கு கடமைகளை ஒப்படைக்குமாறும், உரிய நியமனக் கடிதங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், பொறுப்புகள் தொடர்பில் தெளிவூட்டுமாறும், அந்தக் கூட்ட அறிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு செய்யுமாறும், இந்தக் கூட்டத்திற்கு அமைச்சின் சார்பில் அதிகாரி ஒருவரை கலந்துகொள்ள வைக்குமாறும் குழு விதப்புரை விடுத்தது.
7.	**<u>விளையாட்டுப் பயிற்சியாளர்கள்</u>**	**<u>விதப்புரை</u>**

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
	<u>இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்வதனால் மேற்படி பயிற்சியாளர்களுக்கு அவசியமான உத்தியோகபூர்வ தன்மையைப் பெற்றுக் கொடுத்தல்.</u>	விளையாட்டுப் பயிற்சியாளர்கள் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதனால் மேற்படி பயிற்சியாளர்களுக்கான உத்தியோகபூர்வ தன்மையை பெற்றுக்கொடுப்பது அவசியமெனவும், அவர்களுக்கு அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும், குழாத்தின் வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறும் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது.
8.	**<u>உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டித் தொடர்கள் இடம்பெறும் கால எல்லைகள் தொடர்பில் கவனம் செலுத்தி விளையாட்டுக்கள் பற்றிய வருடாந்த தினக் கலண்டர் தயாரிக்கப்படாமை.</u>**	சகல விளையாட்டுச் சங்கங்களிடமிருந்தும் எதிர்வரும் வருடத்தில் நடாத்தவிருக்கின்ற சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போட்டித் தொடர்கள் உள்ளடங்கிய தகவல்களைக் கோரியுள்ளதாகவும், தேசிய ஒலிம்பிக் குழுவிடமிருந்தும் தகவல் கோரப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் வருடத்திற்கான மேற்படி விளையாட்டுத் தினக் கலண்டரை 2023 நவெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள் - குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்
9.	பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத் திறமைகளைக் கொண்டுள்ள வீர வீராங்கனைகளை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பில் குழு வினவியது. உடற் தகுதியின் அடிப்படையில் பாடசாலை மாணவ மாணவிகளை பொருத்தமான விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவதற்கும் பாடசாலை மட்டத்தில் உருவாகும் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டம் வரையில் கொண்டு செல்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பிலும் இதன்போது விடயங்கள் ஆராயப்பட்டன.	2015ஆம் ஆண்டில் கல்வி அமைச்சுடன் இணைந்து உடற் தகுதியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பாடசாலை மட்டத்திலான 314 மாணவர்கள் பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப் பட்டதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டில் பயிற்சியாளர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளுக்கு அவசியமான ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினாலும், பின்னர் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாகவும் இந்நிகழ்ச்சித் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டதாக விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பி.க.அ. / க.அ. தெரிவித்தார். **<u>விதப்புரை</u>** விளையாட்டுத் திறமைகளைக் கொண்டுள்ள / உடற் தகுதியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளை பயிற்றுவிக்கும் நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டுமென்பதால் பாடசாலைகள் உள்ளிட்ட உரிய அவசியமான தரப்பினருடன் கலந்துரையாடி, அதற்கென முறையான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	- **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.)/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விளக்கங்கள்** - **குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள்**
		வேலைத்திட்டமொன்றினைத் தயாரிக்குமாறு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பி.க.அ./க.அ.கு விதப்புரை வழங்கப்பட்டது. அத்துடன் இயல்பான விளையாட்டுத் திறமைகளைக் கொண்டுள்ள மாணவர்களை பாடசாலை மட்டத்தில் அடையாளம் கண்டு அவர்களை வெளியில் கொண்டு வருவதற்கு முன்னுரிமையளிக்கும் வேலைத்திட்டமொன்று அவசியமென்பதை குழு இதன் போது சுட்டிக்காட்டியது.

இணைப்பு

இணைப்பு 1

சூசிகை

பக்க எண்

வ

வளிமண்டலவியல் திணைக்களம்

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

த

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்

க

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

கிழக்கு மாகாண சபை

ந

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

ச

சபரகமுவ மாகாண சபை

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

சுகாதார அமைச்சு

ம

மதுவரித் திணைக்களம்

விசேட விசாரணை

பக்க எண்

அரச நிறுவனங்களில் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமையும் அது தொடர்பாக காணப்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்தலும்

அரச நிறுவனங்களில் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவச் செயற்பாட்டின் தற்போதைய நிலைமையும் தற்போதைய நிலை மற்றும் அது சார்ந்த சிக்கல்களை ஆய்வு செய்தலும்

இலங்கையின் தொல்பொருளியல் பாரம்பரியங்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு

பயனுள்ள தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளின் மூலம் அரசாங்க வருமானத்தை திரட்டுவதற்கும், அதனை அதிகரிப்பதற்கும் பங்குதாரர்கள் மற்றும் பங்குதாரர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கான அடிப்படை தொழில்நுட்பக் குழுவின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்குமான கூட்டம்